www.padippakam.com

Organisation de Réhabilitation Tamoule France,
International Mouvement For Tamil Culturel – France organisent

GRANDE RENCONTRE SPORTIVE TAMOULE

15 வது தமிழர் விளையாட்டு விழா 2012

Organisation de Réhabilitation Tamoule

ORT-FRANCE

*"Action Humanitaire"*

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

Spécial 15ème Année d'Edition

15 வது ஆண்டு சிறப்பு மலர்

# 01.07.2012

## L' AIRE DES VENTS DUGNY

(PARC DÉPARTEMENTAL DE LA COURNEUVE)

ORT FRANCE Association Humanitaire
84 rue Philippe de Girard, 75018 Paris. Tél: 01 40 38 30 74
E-mail: trofr@hotmail.com - web:www.ortfrance.org - www.trofr.com

படிப்பகம்


SFR
orange
Bouygues Telecom
PHONE 2000
Ligne Directs: SIVA
SFR
Cell: 06 20 21 11 11
Bur: 01 40 37 11 11
NOKIA Connecting People
Sony Ericsson
SAMSUNG
LG
htc smart mobility
SFR - Orange - Bouygues
நிறுவனங்களுடன் நேரடியாகத்
தொடர்பு கொண்டு இணைப்புக்களை
ஏற்படுத்தித் தருகிறார்கள்.
அனைத்து வகையான
கைத்தொலைபேசிகளும்
பழுது பார்த்தல் மற்றும்
Déblocage செய்தல்
அனைத்தும் கை தேர்ந்த
தொழில் நுட்பவியலாளர்களால்
செய்து தரப்படும்.
PHONE 2000
87 rue des Pyrénées
75020 Paris.
Tél: 01 40 09 13 15
Fax: 01 40 09 01 31
PHONE 2000
2 rue Perdonnet
75010 Paris.
Tél: 01 40 05 03 53
Fax: 01 40 05 03 53
PHONE 2000
117 rue d'Avron
75020 Paris.
Tél: 01 43 67 70 50
Fax: 01 40 09 01 31
PHONE 2000
Point Service mobiles!
95, rue d'Avron
75020 Paris.
Tél: 01 43 70 40 25
2, rue Perdonnet
75010 Paris.
Tél: 01 40 37 11 11

# Office of the Prime Minister
# Transnational Government of Tamil Eelam
# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
# பிரதம அமைச்சரின் அலுவலகம்

875 Avenue of the Americas, Suite 1001
New York, NY 10001, USA

www.tgte.org
pmo@tgte.org

யூன் 25,2012
நியூயோர்க்



## வாழ்த்து செய்தி

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் -பிரான்சு, உலக தமிழர் பண்பாட்டு இயக்கம் - பிரான்சுவுடன் இணைந்து, வருடாந்தம் முன்னெடுக்கும் தமிழர் விளையாட்டுவிழாவின் 15வது ஆண்டுநிகழ்வு சிறப்புற நிகழ்ந்திடல் வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசு சார்பில் வாழ்த்துகின்றேன்.

புலம்பெயர்ந்து பிரான்சில் வாழும் தாயகத்து உறவுகளை ஒன்றிணைத்து தாயகமக்களுக்கு பல்வேறுபட்ட வழிகளில் உதவிக்கரங்களை நீட்டி வருகின்ற தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது சிறகுகளை விரித்து புலம்பெயர்ந்து வாழும் தமிழ்சமூகத்தின் நலன்களுக்காக முன்னெடுக்கும் இத்தகைய பணிகள் வலுப்பெற்று, நீண்டு நீடித்திடும் வகையில் சிறப்புற வேண்டும் என்பதே எனது பெருவிருப்பாகும்.

இந்நிகழ்வு தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு மற்றும் பண்பாட்டு விடயங்களையும் தன்னகத்தே உள்வாங்கி நடத்தப்படுகின்றது என்பது மிகவும் பாராட்டுதற்குரிய விடயமாகும். ஏனெனில், தலைமுறை தலைமுறையாக காவப்படவேண்டிய பாரம்பரியங்களை இயலுமானவரை இத்தகைய இலகுதன்மையுடன் காவிச்செல்வது தமிழர்களின் எதிர்கால வாழ்வுக்கும், அடையாளங்களுக்குமான செழுமையான பணிகளாகும்.

இத்தகைய நிகழ்வுகள் எம் உறவுகளை இணைக்கும் ஒரு பாலமாக அமைவதோடு, எமது இளைய தலைமுறையை ஒன்றிணைத்து, தமிழீழ உணர்வோடும், புரிதலுடனும் வாழ வைக்கும் ஒரு தளமாக அமையும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

நன்றி

வி. ருத்ரகுமாரன்

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்



# தமிழர் விளையாட்டு விழா

பிரான்ஸ் மண்ணில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நோக்கம் அல்லது தேவை கருதி பல நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் மிக பிரமாண்டமாகவும், பெருமளவு மக்கள் கலந்து கொள்ளும் நிகழ்வாகவும் தமிழர் விளையாட்டு விழா அமைகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாயக விளையாட்டுக்களை மையப்படுத்தி இந்நிகழ்வை நடாத்துவதன் நோக்கம் எம் அடுத்த சந்ததியினர் எமது தாயக விளையாட்டுக்களை விளையாடுவதோடு, அந்நிகழ்வில் எல்லா மக்களும் சகோதரத்துவத்துடன் ஒன்றாக கூடி எம் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தவுமே.

தமிழர் விளையாட்டு விழா போன்ற நிகழ்வுகள் ஒரு தரம் நடாத்துவது எவ்வளவு கடுமையான பணி. அதைத் தொடர்ந்து 15 வருடங்களாக நடாத்துவதற்கு தமிழ் மக்கள் நலன் சார்ந்த கரிசனையுடன் வர்த்தக ஸ்தாபனங்களின் விளம்பர ஆதரவுகள், அத்தோடு பல தமிழ் சங்கங்கள், சமூகஆர்வலர்கள், பல தமிழ் குடும்பங்களின் உதவிகள் மற்றும் தன்னலன் கருதா எமது கழக உறுப்பினர்கள் அனைவரும் காரணம். ஆகவே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இவர்கள் அனைவரையும் நன்றியுடன் இந்த 15 ஆவது தமிழர் விளையாட்டு விழாவில் நன்றியுடன் கரங்களை பற்றிக்கொள்கின்றது.

அதே நேரம் தமிழர் விளையாட்டு விழாவுக்கான கொட்டகைகளை ஆரம்பகாலங்களில் திறம்பட அமைத்துத் தந்த திரு.சூசை அண்ணா முதல் தற்போது கொட்டகைகளை அமைத்திட உதவும் திரு. இமானுவேல் அவர்களும், அவருடன் பணியாற்றும் நண்பர்கள் போன்றவர்களின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி மகிழ்வதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அக மகிழ்கிறது.

15 ஆண்டுகள் சளைக்காது ஒலி ஒளி வழங்கிவரும் திரு. அருளானந்தன் அவர்களின் சேவை வரலாற்றில் பதியப்படவேண்டியது என்றால் மிகையாகாது. அந்த வகையில் அவரின் சேவைக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தலைவணங்குகின்றது.

ஒரு மரத்தை அல்லது கட்டிடத்தை வளர்த்தெடுப்பதோ அல்லது கட்டி முடிப்பது என்பதோ இலகுவான விடயமல்ல. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தூரநோக்கத்துடனும் சமூக அக்கறையுடனும் செயல்படுவருகின்றது. தமிழர் விளையாட்டு விழா தொடர்ந்து நடாத்தப்படுவதற்கு சமூகம் சார்ந்த அக்கறையே காரணம். ஆகவே பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றது.

"ஒன்றிணைவோம் சேவை செய்வோம்"

திரு. தர்மலிங்கம் கோணேஸ்வரன்
தலைவர்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ்

www.padippakam.com



# உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் - பிரான்சு

International Movement for Tamil Culture - France
M.Alain ANANDANE, Président
Conseiller Municipal de la Ville de Drancy
10, Avenue Camille SAINT - SAENS 93 700 Drancy
01.41.50.14.42 - 06.29.22.82.50
alainanandane@yahoo.fr

பிரான்சு
19-06-2012

அன்புடையீர்!

பிரான்சு நாட்டில் வாழும் தமிழர்களிடையே.

கோடைகாலம் என்ற சொல் வந்தாலே... யூலை மாதம் முதல் ஞாயிறு "தமிழர் விழையாட்டு விழா" என்கின்ற மகிழ்வான நினைவுகள்' மனதில் வேரோடிப் பசுமையாக உள்ளது. அன்னியரும் அறிந்தோர் உயரிய ஒன்று கூடல். அமைப்பின் அனைவரின் கூட்டு முயற்சி என்பது தெளிவான ஒன்று.

இடர்பாடுகள்இ பொருளாதார சிக்கல்கள் வந்தபோதிலும்இ மனம் தளராது தமிழர் விளையாட்டு விழாவினைப் பதின்நான்கு ஆண்டுகள் முடித்து... பதினைந்தை முனைந்துள்ள உங்களின் அரிய செயலை இனத்தின் ஒன்றுகூடலை... வள்ளுவன் கூறும்

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" குறள் போன்று...

எதற்கும் கலங்காது மனவுறிதியுடன் 15-வது ஆண்டு விழாவினை ஏற்பாடு செய்துள்ள உங்கள் முயற்சி வெல்க. இதயம் நிறைந்த நல் வாழ்த்துக்கள்.

என்றும் நட்புடன்இ
அலன் ஆனந்தன்
ரான்சி மாநகரசபை உறுப்பினா
தலைவர்
உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் - பிரான்ஸ்

அலன் ஆனந்தன்



படிப்பகம்

# வாழ்த்துச் செய்தி



தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது 14 வது விளையாட்டு விழாவை பூர்த்தி செய்து ஜூலை 01 நாள் நடாத்த இருக்கும் 15 வது விழா மிகவும் சிறப்பாக நடைபெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல செயல்பாடுகளை தாயகத்திலும் புலத்திலும் செய்து வருவதை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் நீண்ட காலமாக சேவை ஆற்றியவன் என்ற முறையிலும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உள்துறை அமைச்சர் என்ற ரீதிலும் பெருமிதம் அடைகிறேன்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு பிரான்சில் பாராளுமன்ற உறுப்பினர்களையும், மாநகரசபை உறுப்பினர்களையும் அழைத்து சென்று உதவியது. முள்ளிவாக்கால் போர் அவலத்தின் போது வணங்கா மண் கப்பலுக்கு ஆனா தொலை தொடர்பு வசதிகளை பல ஆயிரம் ஈரோக்ககளை செலவு செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று தாயகத்தில் அல்லல் பட்டுக் கொண்டு இருக்கும் எமது தாயக மக்களுக்கு வேறு அமைப்புகள் ஊடாக சேவை செய்து வருவதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சேவை தொடர வாழ்த்துகிறேன்.

நாகலிங்கம் பாலச்சந்திரன்
உள் துறை அமைச்சர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

www.padippakam.com



# வாழ்த்துச்செய்தி.....

தமிழர் விளையாட்டு விழாவானது தனது 15வது வருடத்தில் காலடி பதிக்கும் இவ்வேளையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வளர்ச்சிப்பாதையில் தம்மை இறுக அர்ப்பணித்துக்கொண்டு செயற்பட்டுக்கொண்டிருக்கும் தன்னலமற்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தாயெழில் தமிழும் எங்கள் தமிழரின் வாழ்வும், அந்த வாழ்வின் வழி வந்த கலை, கலாச்சாரப் பண்பாடும், நாகரீக விழுமியங்களும் என்றென்றும் கட்டிக் காப்பாற்றப்பட வேண்டியவை. அவை அடுத்த சந்ததியினரை நோக்கி, அவர்களும் அதனைக் கடைப்பிடிப்பதோடு மட்டுமல்லாது, அதன்வழி ஒழுகவேண்டியவர்களாக, நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு புலம்பெயர் அனைத்துத் தமிழ் மக்களின் கைகளிலும் உள்ளது என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. அதுமட்டுமல்லாது, தாயகத்து நம் தொப்புள்கொடி உறவுகளின் அல்லல் நிலை போக்கவும், அவர்களின் அன்றாட வாழ்வில் பொருளாதாரம் மற்றும் கல்வி, சுகாதாரம் போன்றவை தேவையான அளவில் கிடைக்காது துன்பப்படுகின்றவர்களை, துன்பங்களின்றும் விடுபட-வும் அவர்களின் தேவையறிந்து செயற்பட வேண்டிய கடமைப்பாடும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும். அந்த வகையில் ஓர் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தவே, ஒன்றிணைவோம், சேவைசெய்வோம் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு, அது தனது சேவையின் அடிப்படையில் வியாபித்து வளர்ந்து, செயற்பட்டு வருவதில் உங்கள் ஒவ்வொருவரினதும், அயரா முயற்சி கண்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

அத்தோடு, எம் பாரம்பரியங்களை மறந்துவிடாதிருக்கும் வகையிலும், வருடத்தில் ஓர் முறை புலம்பெயர் உறவுகள் ஒன்றிணைந்து அன்பையும், நட்பையும் பரிமாறிக்கொள்வதோடு, நம் இளம் சந்ததியினரையும் ஒன்றிணைக்கும் வகையிலும் அமையுமாறு, வருடந்தோறும், கலை-கலாச்சார போட்டி நிகழ்வுகளை மட்டுமல்லாது, தமிழர் விளையாட்டு விழாவையும் வருடந்தோறும் நடாத்தி அதன்மூலம் எம்மவர்களை ஒன்றிணைப்பதோடு மாத்திரமன்றி அதன் மூலம் கிடைக்கும் நிதி தாயக உறவுகளின், தேவையின் ஒரு பகுதியை தீர்த்துவைத்து வருவது கண்டு பெருமகிழ்வடைகின்றோம்.

இத்தகைய நடைமுறையில் எமது தமிழர் விளையாட்டு விழாவானது இந்தவருடம் பதினைந்தாவது வருடத்தில் காலடிபதித்துள்ளமை குறித்து பெரும் புளகாங்கிதம் அடைவதுடன், வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாக இந்த விழாவினைக் கொண்டாட வேண்டும் என்று புலம்பெயர் தமிழ் உறவுகள் எமது செயலகத்துடன் தொடர்புகொண்டு பெரு ஊக்கமளித்து எம்மைத் தூண்டி வருவதுடன், அதற்காக தம்மையும் இணைத்துகொண்டு செயற்பட்டுள்ளமைகண்டு பெரும் மகிழ்ச்சியடைவதுடன், தன்னலமற்ற சேவையில் தம்மை இணைத்துக்கொண்ட அனைத்து அன்பு உறவுகளுக்கும் இருகரம்பற்றி மனம் நிறைந்த நன்றிகளை, அன்னை தமிழின் பெயரால், அந்தத் தாயகத்தில் வாழும் தொப்புள்கொடி உறவுகளின்பெயரால், தாயகத்தில் நாம் காவுகொடுத்த எம் அன்பு உறவுகளின் பெயரால் சமர்ப்பித்துக் கொள்ளுகின்றோம்.

இழந்த எம் உறவுகளையும், இழந்த சொத்துக்களையும் எம்மால் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது என்பது எந்த அளவு உண்மையோ, அந்த அளவு, அளப்பரிய செயற்பாடுகளும், கடமைகளும் எம்முன்னால் குவிந்து கிடக்கின்றன. அந்த உண்மைத்துவத்திற்காக, எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைக் களைந்து எறிந்துவிட்டு ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம் என்பதை மனதிற்கொள்வோமாக. இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்றாலும், வெல்வதற்கு ஒரு யுகமே இருக்கின்றது என்னும் தாரக மந்திரத்தை மனதில் திடப்படுத்திக்கொள்வோமாக.
சத்தியமே ஜெயம் - ஒற்றுமையே பலம்.

ஒன்றிணைவோம்- சேவைசெய்வோம்

திருநாவுக்கரசு ரவிந்திரன்
செயலாளர்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
பிரான்ஸ்



படிப்பகம்

# தமிழர் நடுவம் - பிரான்ஸ்
# CENTRE DES TAMOULS - FRANCE

## தமிழர் விளையாட்டு விழா
## சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.

21.06.2012

இறுக்கமான சமூகபொருளாதார அழுத்தங்களில், வேற்றுச் சூழலில் கூடிக்குதூகலிக்கும் தங்கள் இயற்கையான சந்தோசங்களை இழந்துவிட்டோம் என்றமன அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கும் எம் மக்களுக்கு ஒரு ஔடதமாய் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்படும் தமிழர் விளையாட்டு விழா அமைத்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

தாயகத்தில், எமது மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளிலும், சமூக நலத்திட்டங்களிலும், தன்னை முழு ஈடுபாட்டுடன் இணைத்துச் செயற்பட்டுவரும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், புலத்திலும் மக்கள் நலப்பணிகளில் தனக்குள்ள ஈடுபாட்டை செயற்பாடுகளினூடே வெளிப்படுத்தியே வந்துள்ளது.

சிங்களஅரசின் மிகமோசமான நெருக்கடிகளை தடைகளை அச்சுறுத்தல்களை எதிர்கொண்டபோதும், சற்றும் பின்வாங்காமல், தோதான வழிகளைக் கண்டுணர்ந்து, அவ்வழிகளினூடே, தாயகமக்களின் துயர் துடைப்பதில், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தீவிரமாய் ஈடுபட்டுவருகின்றது.

புலத்தில், தமிழ்மக்கள் மீதான அக்கறையின் வெளிப்பாடாக, தமிழர் விளையாட்டு விழாவை நோக்கலாம். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கடந்த பதினைந்து வருடங்களாக, மிகச் சிறப்பாக இவ்விளையாட்டு விழா நடாத்தப்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

பிரான்சில் வாழும் தமிழ்மக்கள்,தங்கள் குழந்தைகளுடன் குடும்பங்களுடன் ஒரு இடத்தில் கூடி, தங்கள் பாரம்பரிய விளையாட்டுக்களை ஆடி, தங்கள் தாயக உணவுகளை உண்டு, நண்பர்கள் உறவினர்களை கண்டு அளவளா விசந்தோசித்து, மீண்டும் வாழ்வுக்கான ஒரு விதமான பிடிப்பை ஏற்படுத்திக் கொள்ளுகின்ற பொழுதுகளாக அவை அமைவதுண்டு. உண்மையில், இத்தகைய விளையாட்டு விழாக்களை நடத்துவது என்பதும் சமூகப்பணியே.

வாழ்வில் துன்பங்களாலும் துயரங்களாலும் தோல்விகளாலும் சூழப்பட்டு, சோர்ந்துபோயுள்ள இனத்தின் சோர்வுகளை நீக்கி, புதிதான நம்பிக்கையையும், மகிழ்வையும், வாழ்வின் மீதான பிடிப்பையும் ஏற்படுத்தும் ஒரு விதமான உளவியல் சிகிச்சையாக இந்த விளையாட்டு விழாக்கள் அமைந்திருக்கின்றன.

உறவுகளைப் பேணி, ஒரு இனக்குழுமமாக எம் மக்களை இணைக்கின்ற பணியையும் இவ்விழா சிறப்புற மேற்கொள்ளுகின்றது.. இவ் விழா மேலும் மேலும் சிறப்பும் பொலிவும் பெற்று, வெற்றிகரமாக நடைபெற தமிழர் நடுவம் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.**
தமிழர் நடுவம் – பிரான்ஸ்

15வது தமிழர் விளையாட்டு விழா 2012

CENTRE DES TAMOULS - FRANCE
165 bd. de la Villette, 75010 Paris,
Contact : centre.des.tamouls.france@gmail.com

# அன்பான உறவுகளே...!!!

01-07-2012 அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் தமிழர் விளையாட்டு விழா தனது 15வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அதில் கலந்து சிறப்பிக்கும் அனைவருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைய நிலையில் எமக்கு உடற்பயிற்சி தேக ஆரோக்கியம் அவசியம். அது பற்றிய விழிப்புணர்வுடன் எமது வரும் கால சந்ததியினருக்கும், எமது பாரம்பரிய விளையாட்டுக்கள், கலை கலாச்சாரம் போன்றவற்றை ஊட்டுவதுடன், நீண்ட நட்புறவு, தெரிந்தவர் தெரியாதவர் என்ற வட்டத்தை விட்டு வெளியே வந்து அனைவருடனும் பரஸ்பர நட்பை ஏற்படுத்துவதுடன், எமது கலை கலாச்சாரத்தை அழிவிலிருந்து பாதுகாத்து, வரும் கால சந்ததி அவை பற்றிய புரிதலை உணர்வு பூர்வமாக உள்வாங்குதல் என்பதே தமிழர் விளையாட்டு விழாவின் சிறப்பு.

இப்பணியை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வெகு சிறப்பாக 15 ஆண்டு காலங்களாக பிரான்ஸ் மண்ணில் செய்து வருகின்றது. இதற்கு உதவியாக சமூகக்கரிசனையுடன் கைகோர்த்து, வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சமூகஆர்வலர்கள் உதவி வருகின்றார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு, தேவையான அடிப்படை வசதிகள், எதிர்கால மாணவ சந்ததிகளின் கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்றவற்றிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவிகளை வழங்கி வருவது யாவரும் அறிந்ததே.

தொடர்ந்தும் விளையாட்டு விழா மூலம் கிடைக்கப்பெறும் நிதிகள் அனைத்தும் மேலும் பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல உதவுகின்றது. அனைத்திற்கும் ஆதரவு தருகின்ற எமது உறவுகளுக்கும், இவ்விழாவை சிறப்பாக நடைபெற உதவும் வர்த்தகப் பெருமக்களுக்கும், பல்வேறு உதவிளை வழங்கும் தொண்டர்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒன்றிணைவோம் சேவை செய்வோம்

வல்லிபுரம் கிருபாகரன்
பொருளாளர்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
பிரான்ஸ்

www.padippakam.com




# LES THAMILS SANS FRONTIERES
# எல்லைகளற்ற தமிழர்

**23, Rue Paul Langevin, 93120 La Courneuve, France**

La loi du 1er 1901 relative au contrat d'Association - le décret du 16 Aout 1901 portant réglement d'administration publique pour l'exécution de la loi précitée. No: W931010399


20.06. 2012

இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்......

தமிழை மறந்த தமிழர்கள், தமிழராய் வாழும் தமிழர்கள், தமிழுக்காய் வாழும் தமிழர்கள், தமிழால் வாழும் தமிழர்கள் இப்படி உலகப் பந்தின் பல பாகங்களிலும் தமிழினம் சிதறிச் சின்னாபின்னப்பட்டு, பல இடங்களில் அவர்களின் வாழ்க்கையானது, விரக்தியும், வேதனையும், சோதனையும், சோகமும் நிறைந்ததாகக் காண்கின்றபொழுது எங்கே நாம் நம் வாழ்க்கையை மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கான வருடங்களாகக் கட்டிக்காத்து வளர்த்து வந்த, நமது கலை கலாச்சாரப் பண்பாட்டு நாகரீக விழுமியங்களையும், எமது மொழியையும், எம்மையும்கூட முழுமையாக இழந்து ஒரு கையறுநிலைக்குப் போய்விடுவோமோ எனும் கவலையானது, சமூக அக்கறைகொண்ட ஒவ்வொரு தமிழரின் மனத்திலும் பெரிதும் கவலை கொள்ள வைத்துள்ளது. இந்த நிலையானது முற்றிலும் மாற்றி அமைக்கப்படாவிட்டால் தமிழும், அதனைத் தாய் மொழியாகக் கொண்ட இனமும் தம் முகவரிகளையும் முகங்களையும், முற்றாகத் தொலைத்துவிட்டு உலகம் முழுவதிலும் மாற்றாந்தாய் மக்களாகத் தெண்டனிட்டுத் தொண்டு செய்யும் ஒரு இனமாக வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள்.

தமிழினம் உலகப் பந்தின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் ஓர் தனித்துவமான இனமாக வாழ வேண்டுமானால், பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற அமைப்புக்கள் தமிழர்களின் மொழியையும், கலை, கலாச்சார மேம்பாட்டு விழுமியங்களையும் பாதுகாத்து வளர்ப்பதோடு, அதனை அடுத்த சந்ததியினருக்குக் கடத்திச்சென்று பழக்கப்படுத்திக்கொடுக்கும் கைங்கரியத்தைத் தொடர்ந்தும் தம் தலையாய கடமையாகச் செய்வதுடன், உலகத்தில் அனைத்துத் தமிழர்களுக்கும் அது சென்றடையவும் வழிவகுக்க வேண்டும்.

அந்த வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கடந்த காலங்களில் புலம்பெயர் தேசங்களில் தமிழ் கலை, கலாச்சார நிகழ்வுகளையும், நடாத்தி அதன் மூலம் தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் அரும் தொண்டாற்றி வருவதையிட்டு, மனம் நிறைந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரித்துக்கொள்வதில் எல்லைகளற்ற தமிழர், பிரான்ஸ் பெருமையடைகின்றது. மேற்படி நிகழ்வுகளின் வரிசையில் இன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது தமிழர் விளையாட்டுவிழா என்னும் நிகழ்வை பல வருடங்கள் சிறப்பாக நடாத்தி வந்ததுடன், இவ்வருடம் அது 15வது வருடத்தைத் தொட்டிருப்பது மாத்திரமன்றி அதுவும் வெகு சிறப்பான பெருவிழாவாக நடைபெறுவது கண்டு புளகாங்கிதம் அடைகின்றோம். இத்தகைய தமிழின முன்னேற்ற நடவடிக்கைகள் யாரால் முன்னெடுக்கப்பட்டாலும், உலகத் தமிழினம் அங்கு சென்று நேரடியாகக் கலந்துகொள்வதுடன், அதற்குப் பேராதரவு கொடுத்து, தங்களின் வரலாற்றுப் பங்களிப்பினையும் செலுத்த வேண்டியது அனைத்துத் தமிழர்களின் இன்றியமையாத கடமையாகும்.

எனவே, தமிழினத்தின் வளர்ச்சிக்கும், உயர்விற்கும், அந்த இனத்தின் விடிவிற்குமாய் நம் காலடியில் பல்லாயிரக் கணக்கான கடமைகள் காத்திருக்கின்றன. இதற்கிடையில், பழமைவாதங்கள், சகோதர விமர்சனங்கள், போட்டிகள், பொறாமைகள், சுயநலங்கள், யாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு நமக்காகக் காத்திருக்கும் கடமைகளை இதயசுத்தியுடன் செயற்படுத்துவோம். உலகத்தின் பல பாகங்களின் மூலை முடுக்குகளில் எல்லாம் தம் இயலாமையால் வாடிவதங்கி வாழ்வியல் தன்மையைத் தொலைத்துவிட்டு, நிற்கும் நம் தொப்புள்கொடி உறவுகளைக் நம் கையிலேந்திக் காத்திட உறுதியுடன் முன்வருவோம்.

வீழ்வது நாமாக இருந்தாலும் - வாழ்வது தமிழாக இருக்கட்டும்
மனித நேயத்தை வளர்ப்போம் - மனிதம் வாழ உழைப்போம்

இவ்வண்ணம்
தங்கள் சேவைக்குரிய
எல்லைகளற்ற தமிழர் - பிரான்ஸ்

| | | |
|---|---|---|
| ...ளாளர் | தலைவர் | செயலாளர் |
| (...சுகிர்தராஜ்) | (திரு.க. தர்மதேவன்) | (திரு.ந. சஜந்தன்) |

15வது தமிழர் விளையாட்டு விழா 2012



படிப்பகம்

www.padippakam.com



# வாழ்த்துச் செய்தி

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரான்ஸ் நடாத்தும் 15 ஆவது தமிழர் விளையாட்டு விழாவினை நாடு கடந்த தமிழீழ அரசின் விளையாட்டு மற்றும் உடல்நல துணை அமைச்சர் என்ற வகையில் மனதார வாழ்த்துகின்றேன்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் எமது மக்களின் தேவையறிந்து அவர்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டு வருகின்றமை உலகறிந்த உண்மை.

மனத்திடம் மிக்க எமது நாளைய சந்ததியை உருவாக்குவதற்கு உடல் நலம் அவசியம். இந்த உடல்நலத்தை விளையாட்டுத்துறை மேம்படுத்துகிறது....... ஆகவே, இந்த மாபெரும் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்று, இதன் மூலம் எமது மக்களின் மனநலமும், உடல்நலமும் சிறப்புற்று விளங்கிட, மகிழ்வுற உரிமையுடன் வாழ்த்துகின்றேன்.

எமது தாயக மக்களின் வாழ்வை செப்பனிட அனைவரும் ஒற்றுமையுடன் வருகைதந்து சிறப்பித்து வருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

நன்றி

ச.மைக்கல் கொலின்ஸ். B.A (Hons)

துணை அமைச்சர் உடல்நலதுறை

நாடு கடந்த தமிழீழ அரசு.

15 வது தமிழர் விளையாட்டு விழா 2012



படிப்பகம்

# ஐயன் துரித உணவகம்

# Ayan Fast Food

"VEGETERIAN INDIAN RESTAURANT"

தரமான தூய சைவ சிற்றுண்டி வகைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

- இடியப்பம்
- இட்லி
- தோசை
- நெய்த்தோசை
- அப்பம்
- பிட்டு
- சப்பாத்தி
- பரோட்டா
- கொத்துரொட்டி
- இடியப்பக்கொத்து
- வடை
- மோதகம்
- வாய்ப்பன்
- றோள்
- சமோசா







எமது விசேட சேவையில்
100 வடை 40 யூரோ
100 பற்றிஸ் 40 யூரோ
100 இடியப்பம் (சொதி. சம்பல். கிழங்குப் பிரட்டலுடன் )25 யூரோ
மாதச் சாப்பாடு
1 நாளைக்கு 1 நேரம் 90 யூரோ - 2 நேரம் 160 யூரோ

உணவகம் செவ்வாய் முதல் ஞாயிறு வரை
காலை 10.00 மணி முதல் இரவு 20.00 வரை
திறந்திருக்கும்.

Ayan Fast Food
66, Avenue Paul Vaillant Couturier,
93120 La Courneuve.
Tél: 01 48 35 80 02, Port: 06 52 75 73 45

# அருள்மிகு
# ஸ்ரீ சபரீசன் மஞ்சமாதா தேவஸ்தானம்



தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரம் தினமும்
காலை 09.00 மணி முதல் மதியம் 02.30 மணிவரை
மாலை 05.00 மணி முதல் இரவு 07.30 மணி வரை

## பூசை நேரம் தினமும்

காலை 11.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை
மாலை 06.00 மணி முதல் இரவு 07.00 மணி வரை
மாலை 18.00 -20.00 மணி
சனிக்கிழமைகளில் மாலை 06.00 மணிக்கு
விசேட படிபூசை இடம்பெறும்.



## ஸ்ரீ சபரீசன் மண்டப சேவை

திருமணம், பூப்புனித நீராட்டு விழா,
சமய கலை கலாச்சார அனைத்து
மங்களகரமான வைபவங்களையும் சிறப்பாக
நடாத்தக் கூடியதும் 350 ஆசனங்கள்
கொண்டதுமாக ஆலய சார்பில்
விழா மண்டபமும் உண்டு.

தேவஸ்தானத்தின் விசேட உற்சவ காலங்கள்
கார்த்திகை முதல் நாள் முதல் தைப்பொங்கல் வரை
மண்டல விரதகாலமும்
108 வலம்புரிச் சங்காபிஷேகம் இடம்பெறும்

Ayyapan Temple
66, Avenue Paul Vaillant Couturier,
93120 La Courneuve.
Tél: 01 48 37 22 95
T1, M7: La Courneuve

# 15வது தமிழர் விளையாட்டுவிழா வெற்றிபெற வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

காலம் வகுத்த கட்டளையில் நாமும் பயணம் தொடர்கின்றோம் என்றபடி எமது சொந்த தாயகப் பூமியைவிட்டு நாமெல்லாம் அகதியாகப் புறப்பட்டு அங்கொன்றும். இங்கொன்றுமாகப் பூமிப்பந்தின் பலபாகங்களிலும் சுழன்றடித்த சூறாவளியில் சிக்கிச் சிதறிய சருகுகள் போல் ஒன்றாய் வாழ்ந்த உறவுகள் எல்லாம் ஒவ்வொரிடமாகப் புலம்பெயர்ந்தோம். புறப்பட்ட வேகத்தில் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஓடவே நமக்குக் காலம் சரியாக இடம் கொடுத்தது.

புறப்பட்டபோது எல்லோரும் அப்படித்தான் பயணப்பட்டது போலிருந்தாலும். வெறும்கையோடு பயணப்படவில்லை என்பதையும். நாம் சுமக்க முடியாத பாரமாக நம்முடன் தாய் மொழி- பற்றையும். நம் கலைகலாச்சாரப் பண்பாடுகளையும். ஆன்மீகத்தின் அடித்தளத்தையும் நம்முடன் சுமந்து வந்துள்ளோம் என்பதை இங்கு வந்த பின்னர்தான் எம்மால் படிப்படியாக உணர முடிந்தது. அப்படி நாம் சுமந்து வந்த மிகப்பெரும் சொத்துக்களே இன்று கல்வி. கலை. கலாச்சார நிலையங்களாகவும். சமூக வளர்ச்சி நிறுவனங்களாகவும். ஆன்மீக பீடங்களாகவும் காட்சியளிப்பதோடு. புலம்பெயர் நம் உறவுகளின் வாழ்க்கையில் அவர்களின் மனதை ஆறுதல்படுத்தவும். இழந்துபோன வாழ்வின் எரிவாரமான மனதின் உணர்வுகளுக்கு ஒத்தடம் கொடுத்து ஆறுதல் படுத்தும் நிலையங்களாகவும் காட்சியளிப்பது நமக்கும் பெரும் மனமகிழ்ச்சியையும். ஆறுதலையும் அளிப்பது கண்டு பெருமையடைகின்றோம். இப்படி உருவாகி உயர்ந்து நிற்கும் ஆன்மீக பீடங்களில் ஒன்றாக இன்று லாகூர்னோவ் ஸ்ரீசபரீசன் மஞ்சமாதா தேவஸ்தானம் என்று அழைக்கப்படும் ஐயப்பன் ஆலயமும் ஒன்றாக அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் தோற்றம் மிகவும் அதிசயமான ஒன்றாகும். வாழ்வின் பல பக்கங்களிலும் காலத்தின் கைப்பிடியில் சிக்குண்டு வாழ்க்கையில் வேதனையையும். விரக்தியையும் மட்டுமே கண்டது மாத்திரமன்றி. வாழ்க்கை வேறு. வசதி வேறு என்பதோடு வாழ்க்கையின் அர்த்தத்தின் ஒரு பகுதியையாவது புரிந்துகொண்ட பலரை ஒன்றிணைத்து. இன்று ஆலயத்தின் குருசுவாமியாக இருக்கும் திரு. நாகலிங்கம் தனராஜா அவர்களின் பாரிய முயற்சியால் 1992ம் ஆண்டு கார்த்திகை மாதம் ஐயப்பனின் மண்டல விரத ஆரம்பத்துடன் இந்த தேவஸ்தானம் பாரிஸ் 12ல் உருவானது. அன்று முதல் இங்கு வருபவர்களுக்குக் கிடைக்கும் மன அமைதியும். வாழ்வின் நிம்மதியும் சேர்ந்து ஐயப்பனின் அருட்கிருபையால் நாள்தோறும் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து வந்துள்ளது.

இதனால் ஆலயத்தின் இடவசதி காரணமாக ஆலயம் 2003ம் ஆண்டில் லாகூர்னோவ் நகரத்திற்கு இடம்பெயர்ந்து. சிறப்பாக பூஜைகள் நடைபெற்று வந்தது. பல்வேறு சமூகத்தினரைக் கொண்ட இந்த இடத்தில் ஆலயத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான அனுமதி பெறுவது மிகவும் சிரமமான காரியமாக இருந்தாலும். ஆலய குருசுவாமி அவர்கள் ஐயப்பனின் மீது கொண்ட ஆழமான பற்றுக்கோடும் வேண்டுதலும். பல உயர்மட்ட அதிகாரிகளின் அனுசரணையுடனும் ஆலயத்திற்கான அனுமதி பெறப்பட்டதுடன். ஆலயம் மிகவும் சீரோடும் சிறப்போடும் அனைத்து நிகழ்வுகளும் நடைபெறுகின்றது. நாள்தோறும் அன்னதானம் வழங்கும் நிகழ்வும். தாயகத்தின் உறவுகளுக்கு உதவும் தொண்டு நிறுவனங்களுக்கு தம்மால் இயன்ற பங்களிப்பினையும் வழங்கிவருவதுடன். இன்று நாள்தோறும் ஆலயமண்டபம் நிறைந்த அடியார்கள் கூட்டம் வந்து ஐயனைத் தரிசித்து அமைதியும். மனநிறைவும் பெற்றுச்செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். ஆலயத்தின் அருள்நிறைவுக்கான வேண்டுதல் கருதி ஆலய குருசுவாமியின் ஆன்மீகப் பயணமானது கடந்த 16 வருடங்களுக்கு மேலாக ஐயப்பனின் சபரிமலைப் பயணம் தொடர்வதோடு. முக்கிய ஆன்மீக பீடங்களான பொன்னம்பலமேடு. காசி. காயா. ஹிமாலயச் சாரல் எனத் தொடர்கின்றது. அத்தோடு ஸ்ரீசபரீசன் மஞ்சமாதா ஒன்றியம் தேவஸ்தானத்தின் நிர்வாகத்தினைத் திறப்படச் செயற்படுத்திவருவதுடன். அவர்களின் ஆன்மீகப்பணி தொடர்கின்றது.

இவ்வாறாக பொதுப்பணியில். ' மக்கள் தொண்டே மகேசன் தொண்டென வளர்ந்து விருட்சமாக. 15வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வரும் பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகமானது தனது வளர்ச்சியிலும். சேவையிலும் மேலும் உயர்வுற ஐயப்பனை வேண்டி வாழ்த்துவதுடன். இவ்வாண்டு நடைபெறும் 15வது தமிழர் விளையாட்டுவிழா வெற்றிபெற வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஸ்ரீசபரீசன் மஞ்சமாதா தேவஸ்தானம்

லாகூர்னேவ். பிரான்ஸ்

Hari Oom Namoo Narayanaya Nama

**Arul Migu Sri Ashthalakshmi Sametna varatharajahperumal Thevasthanam**

அருள் மிகு ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி சமேத ஸ்ரீ மஹாலக்ஷ்மி உடனுறை
ஸ்ரீமத் வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

01, bis LEDRU ROLLIN-94600 CHOISY LE ROI-France. T.P:-0148529819 [redacted] 0603885990.....Reg Nº Siret:-50103141300013

# அருள் மிகு அஷ்டலக்ஷ்மி சமேத ஸ்ரீ மகாலக்ஷ்மி உடனுறை ஸ்ரீமத் வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

தமிழர் புனஉவாழ்வுக் கழகத்தினூடாக நடைபெறும் தமிழர் விளையாட்டு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

France நாட்டில் முதல் முதலாக அஷ்டலக்ஷ்மி சமேத வரதராஜப்பெருமாள் ஆலயம் 2006 ஆம் ஆண்டு துரநெ மாதம் 09 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. இன்று வரை நித்திய நைமித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வருடம் வருகின்ற யூலை 30 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் 12 ஆம் திகதி ஞாயிறு தேர்த்திருவிழா வெளிவீதியில் நடைபெறும்.

திருப்பதி தேவஸ்தானத்திற்கு இணையாக சின்ன திருப்பதியாக விளங்கிவருகின்றன. இவ் ஆலயத்தில் கலை கலாச்சார வகுப்புகள் சிறந்த ஆசிரியர்களினால் நடைபெற்று வருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக சிறந்த முறையில் எமது தமிழ் மக்களை ஒன்றுகூட்டி விளையாட்டு விழாவாக எடுத்துவருவதற்கு முதற்கண் ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி சமேத வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் ஆசிகள் பல உரித்தாகட்டும். தமிழ் மக்களுடைய தமிழ் மரபுகளையும் கலை கலாச்சாரங்களையும் தவறாது எமது மக்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது மரபுகளை வெளிக்கொண்டு வருவது பாராட்டத்தக்கதாகும்.

எமது நாட்டில் கூட தமிழர்களுடைய பாரம்பரியங்களை அழித்து வரும் காலத்தில் எமது மரபுகளை எமது ஆலயங்களை கூட அழித்து வருகிறார்கள். தமிழ் மக்களுடைய சகல மதங்களையும் உடைத்து வருகின்றார்கள். இவைகளை அழியாமல் பாதுகாத்து எடுத்துச் செல்ல இந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஊடாக அனைத்து உள்ளங்களும் பாகுபாடின்றி கைகோர்த்து பக்கபலமாக இருக்க வேண்டும். 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்றே எடுத்துக் காட்ட வேண்டும். நம் மக்களுடைய ஒற்றுமை அன்பு பாசம் இவற்றிற்கு அடிபணிய வேண்டும். எதையும் வெல்லும் சக்தி எம்மிடம் உருவாகும்.

தமிழர் விளையாட்டு விழா சிறக்க வாழ்த்துகிறேன்.

President & Fondateur
Sivagama Kiriya Thaththuva Neethi Eshana Sivachchariyaar,
SARWESHWARA ERAMPANATHA KURUKKAL.

...-393-153-103-LIEU ARRET ROUGET DE LISLE, RER-C-CHOISY LE ROI.
WEB-www.sriashtalakshmi.com--E.Mail-erampanathakurukkal@hotmail.fr
...கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" "MENMAIKOL SAIVANEETHI VILANKUGA ULAGAMELLAM"

# புலம்பெயர் மண்ணில் சைவக்கிரியைகளின் ஆற்றல்

சைவ சமயத்தில் செய்யப்படுகின்ற கிரியைகள் எல்லாவற்றிலும் நினைவாற்றல், சொல்லாற்றல், செயலாற்றல் என்ற மூவகை ஆற்றல்களும், நிரம்பியிருக்கின்றன. மந்திரம், கிரியை பாவனை என்ற மூன்றினாலும் நிறைவு பெறுகின்ற இச் செயல்களில் மந்திரத்தால் சொல்லாற்றலும், கிரியையால் செயலாற்றலும், பாவனையால் நினைவாற்றலும், அமைந்து விடுகின்றன. மந்திரங்கள் கணிக்கப்பெற்று ஒலி வடிவிலும் இயந்திரங்களில் எழுதப்பெற்று வரி வடிவிலும் ஆற்றல்களை வழங்குகின்றன.

சைவக்கிரியைகளில் 'நிரீட்சனம்' என்பது ஒன்று. இது முன்னிலையில் உற்ற ஒரு பொருள் தூய்மை அடைதல் பொருட்டு செய்யப்பெறுவது. இந்த கிரியை செய்யும்போது மந்திரம் ஒன்றை ஓதுதலும், குறித்த பொருளைக் கண்ணிலால் பார்த்தலும், அப்பொருள் தூய்மை அடைதல் பொருட்டுச் செய்யப்பெறுவது.

இந்தக் கிரியை செய்யும் போது மந்திரம் ஒன்றை ஓதுதலும், குறித்த பொருளைக் கண்ணினால் பார்த்தலும் அப்பொருள் தூய்மை அடைய வேண்டுமென்று நினைத்தலுமாகிய மூன்றும் ஒருங்கே நிகழும் அங்கனம் மூன்றும் ஒருங்கே நிகழாத போது இக்கிரியையால் ஏதும் பயனில்லை என்று நமது நூல்கள் கூறுகின்றன.

ஆகவே மந்திரம், கிரியை, பாவனை ஆகிய மூன்றும் பொருந்தச் செய்கின்ற சைவக்கிரியைகள் பேராற்றல் உடையவனாய்ப் பயன் தருகின்றன என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

அறிவுள்ள உயிர், அறிவற்ற சடப்பொருள் போல அசைவற்றுக் கிடந்த நிலையிலிருந்து மாற்றம் பெற்றுச் செயலாற்றும் திறனுடைய- தாகும் படிவைத்த சிவபெருமானையும், எள்ளளவும் துன்பம் கலவாத பேரின்பம் பெறுவதற்கு வழி கூறும் வேத சிவாகமய அருள் நூல்களையும் அவ்வருள் நூல்களில் நல்லின்பம் பெறுவதற்குக் கூறும் நெறிமுறைகளையும் புறக்கணித்து விட்டு மனம் போன போக்கி வாழுவது அறிவுடை- டமையாகுமா? எனவே, கடவுளை அவர் அருளிய நெறிமுறையில் வழிபாடு செய்ய வேண்டுவது மிக மிக இன்றியமையததாகும். கடவுள் வழிபாடு ஒன்றினாலேயே துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமுமாகிய இருவகைப்பயன்களும் கிட்டும்.

ஆதலால் அதையின்றி மக்களுக்கு நற்கதி வழங்குவது வேறொன்றில்லை. என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இந்த வகையாக மூவகை வழிபாடுகள் உருவாகின்றன. சிவ வழிபாட்டுக்குரிய காரணங்கள் மனம், மொழி, மெய், என்னும் மூன்றுமாகும். அது பற்றிய வழிபாடும் சிந்தித்தல், துதித்தல், வந்தித்தல் என மூவகைப்படும். மனம் என்பது துன்பத்தை விளைவிப்பனவாகிய நல்வினை தீவினைகள், மனம் பொறி வழியே செல்வதால் உண்டாவன, பிறப்பு இறப்புக்கும் காரணமாகிய வினைகள் கூடாதிருப்பதற்கு மனதை அருட்குறியின் பால் நிறுத்தி வேறு நினைவுகளை ஒழித்து இடையீடின்றிச் சிவபெருமானிடமே சிந்தித்திருத்தல் வேண்டும். அத்தகைய சிந்தனை கை கூடுவதென்பது எளிமையானது அல்ல, பல் காலமும் பயிலும் பயிற்ச்சி முதிர்ச்சியினாலேயே அந்தப் பெரும்பேறு சித்திக்கும். ஆதலால் வாழ்நாளை வீணாக்காது தியான பாவனையை ஒவ்வொருவரும் மேற்கொள்ளுதல் வேண்டும். மொழியென்பது மொழி வாய்மை பேசுவதற்கும், அறம் உரைத்தலுக்கும், இனியவை கூறுவதற்கும் பயன்படுவது போல பொய்மை பேசுதலுக்கும் தீமை கூறுவதற்கும் இன்னதவை மொழிதலுக்கும் கூடப்பயன்பட முடியும்.

முன்னர் கூறிய மூன்று வகை மொழிகளும் நன்மை தருவனவே ஆயினும் அவைகளும் பின்னர் கூறிய மூன்று வகை மொழிகளைப் போல தீவினைகள் ஆகாது. நல்வினைகளாகிய பிறப்பு, இறப்புக்களை தருவனவே ஆகும். நல்வினை பொன் விலங்கும் தீவினை இருப்பு விலங்கும். இதைத்தான் பிறக்குப்பு வித்தாகுவதை பரிமேலழகர் குறிப்புடன் 'இருள்சேர் இருவினை என்ற திருவள்ளுவர் திரு வாக்கைப்படித்துத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மெய் எனும் பதம் ஊடாக வருகின்ற அருள் வெளிப்பாடு மனம், மொழி எனும் கிளைகளின் இயந்திர வெளிப்பாடு என்று கூறலாம். ஆன்மீக வழியில் செய்யப்படுகின்ற சைவநெறி கிரியை, வழிபாடு, கலை, கலாச்சாரம், என்பன புலம்பெயர் மண்ணில் திருப்திகரமாக பரிபூரணம் அடைகின்றதா? இல்லையென்றே கூறலாம். காரணம் அடிப்படையாக முற்று முழுதாக பதியக்கூடிய சமய அறிவு, அனுபவ அறிவு, பிரச்சாரங்கள் போதியளவு இல்லை. இதற்குக் காரணம் எமது சிறார்களின் பெற்றார்களது அனுபவ அறிவே காலப்போக்கில் மங்கி விடுகின்றது.

எனவே, நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைத்து, எல்லா வழிகளிலும், கலை கலாச்சாரம், பண்பாடு, சைவமுறை, வளருவதற்கு பாடுபட வேண்டும். ஞான கல்வி நூல்களை படிக்க வேண்டும். ஊட்ட வேண்டும். பொதுவாக சைவசமய குருமார்கள் சைவக்கிரியைகளை விளக்க வேண்டும். வழிபாட்டு முறைகளைக்கற்பிக்க வேண்டும். இயன்றளவு முயற்சி செய்து எல்லோரும் ஒரு கை கோர்த்து ஆன்மீக உணர்வுகளை வெளிக்கொண்டு வந்தால் அந்நிய மேலைத்தேய தகாத காலாச்சாரங்கள் நமது பிள்ளைகளை சீரழிக்காது பாதுகாக்க உதவும்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

சிவஸ்ரீ. கணேச சிவசுதக் குருக்கள் (சுதன் ஐயா)
சிவன்கோயில் - லாக்கூர்னேவ்
Tél0148362673, - 0664792837

www.padippakam.com



# ஆலயமும் ஆலய வரலாறும்

அருள்மிகு ஸ்ரீசொர்லாம்பிகாதேவி சமேத ஸ்ரீ சொர்ணலிங்கேஸ்வரர் சக்தி (சிவன்கோயில் லாக்குர்னேவ் பிரான்ஸ்)

மேற்படி ஆலயம் சமூகத் தொண்டரும் கருணை வள்ளலும், தொழில் அதிபருமாகிய உயர் திரு. வெற்றிவேலு ஜெயேந்திரன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயமே லாக்குர்னோவ் சிவன் கோயில்.

இக்கோயில் எதுவித வேறுபாடுமின்றி விருப்புடன் பன்னாட்டு கலாச்சாரம் செறிந்த மக்களும் போற்றிப் பரவும் பெருமானின் எழிலார்ந்த திருக்கோயிலாகவும், பரவசமும் பக்தி மணமும் என்றும் வழுவாநெறி முறைகளுடன் பக்தி மணம், கலை அழகுடன் புகழ் பரப்பி பக்தர்களின் குறை நீக்கி வரமருளும் இறைவன் அருளாட்சி செய்து அருட்காட்சி தரும் திருத்தலமும் இத்தலமாகும்.

இவ்வாலயம் பிரதிஷ்டர் மகா கும்பாபிஷேகம் (திருக்குட நன்நீராட்டு விழா 20.12.2000) இல் மக்கள் போற்றும் வகையில் சைவ ஆன்றோர் உள்ளம் உவக்கும் முறையில் தவத்திலு ஸ்ரீ சோமாஸ் கஸ்த சிவாச்சாரியார் அவர்களால் ஆகம விதிமுறைகளின்படி கிரியைகள் மிகவும் சிறப்புடன் நடந்து வையகம் எங்கும் சாந்தி சமாதானம் தழைத்தோங்கி நிலைத்திட அருட்பொலிவுடன் இனிதே நடந்தேறியது.

இதைத் தொடர்ந்து கொடிக் கம்ப பூசையும் நடைபெற்றது. கொடி ஏற்றி 25 நாட்கள் மகோற்சவம் மிகவும் அருட்பிரவாகத்துடன் நடைபெற்றது. குறிப்பாக மகோற்சவத் திருவிழாக்களில் மஞ்சம், கப்பல் திருவிழா, கைலாய வாகனம், மாம்பழத்திருவிழா, கார்த்திகைத் திருவிழா, வேட்டைத்திருவிழா, சப்பறம், தேர், தீர்த்தம், பூங்காவனம், திருக்கல்யாணம், சங்காபிஷேகம், திருவிழாக்கள் சிறப்புடன் நடைபெற்று வயிரவர் (மடை) சாந்தியுடன் இனிதே நிறைவுறும்.

மகோற்சவம் வருடா வருடம் பன்னிரண்டாண்டுகள் சிறப்புடன் நடைபெற்றது. பெருமையுடன் விளங்கி நிற்கிறது இவ்வாலயம்.

2000ம் ஆண்டு முதல் கும்பாபிஷேகம் நடைபெற்ற காலம் முதலாய் ஆலயப்பிரதம குருக்களாக நியமனம் செய்யப்பட்ட ஸ்ரீ கணேசானந்த சிவசுத சிவாச்சாரியார் அவர்களே அன்றுமுதல் இன்றுவரை பன்னிரண்டு வருடங்ள் சகல விசேட திருநாள் பண்டிகைகளையும் செவ்வனே செய்து வரும் சிறந்த ஆலயக் குருவாக பணிபுரிந்து வருகிறார்.

அன்னாரின் அரிய புனித சேவையை யாவரும் போற்றி நிற்கின்றனர். இவரின் பூஷை மகத்துவங்களால் தெய்வ சந்நிதி உயர்ச்சியடைந்து நிற்கிறது. உரிய முறையில் பூசைகள் நடைபெறுவதால் பூசையின் சாநித்யம் பொலிந்தோங்கி நம்பிக்கையுடன் நம்பி வரும் பக்தர்களுக்கு அல்லல் போக்கி நிம்மதி அளித்து ஆனந்தத்தைக் கொடுக்கின்றது.

இங்கே விசேஷமாக இந்துப் பெருநாட்கள் யாவும் திரு விழாக்கள் நடைபெறுகிறது. குறிப்பாக மகா சிவராத்திரி, நவராத்திரி, கௌரிவிரதம், சித்திரைப்பறுவம், இன்னும் அனைத்து திருநாட்களும் பெரும் திருவிழாக்களாக நடைபெற்று வருகின்றது.

பிரான்ஸ் நாட்டில் கொடி ஏற்றி மகா உற்சவம் நடைபெறும் ஆலயம் ஆகும். இதன் காரணமாக பக்தர்கள் பெருமளவு வருகை தரும் ஆலயமாகவுள்ளது.

இங்கே இயற்கையை வழிபடும் விதமாக கோமங்கள், கிரிகைகள், பூசைகள் ஆகியவை அமைத்து இயற்கைக்கு நன்னி செலுத்தும் விதமாக பொங்கல் போன்ற பல பண்டிகைகள் அமைந்தன. நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் ஆகிய இயற்கையின் பிரதிகள் தெய்வ சொருபமாக வணங்கப்பட்டு வருகின்றன.



படிப்பகம்

ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் ஜோதி வடிவாய் இறைவன் பல நாமங்களிலும் பல வடிவங்களிலும் பர்ணமித்து நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார். அந்த ரீதியில் இவ்வாலயத்தில் சுற்றுத் தெய்வங்களாகப் பிள்ளையார், வள்ளி தெய்வானை, சமேதராக முருகப் பெருமான் துர்க்கை சிவகாமசுந்தரி, சமேதராக நடராசப்பெருமான், வயிரவர், வீரபத்திரர், ஐயப்பசாமி, ஸ்ரீ ஆஞ்சநேயர், நவக்கிரகநாயகர்கள், சண்டீஸ்வரி, நந்தியம் பெருமான் வெளிப்பீடம், சுற்றிவீற்றிருந்து அருள் பாலிக்கிறார்கள்.

இங்கு நாழும் பொழுதும் அபிஷேகங்கள் நன்கு நடைபெறுகின்றன. பக்தர்கள் தங்கள் வசதிக்கேற்றபடி உபயமாகப் பூசைகளை ஏற்றுச் செய்கிறார்கள். வெள்ளிக்கிழமைகளிலும், விசேட நாட்களிலும், அபிஷேகம் அலங்காரப் பூசைகள் விசேட இடத்தை வகிக்கின்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஆலய ஓதுவார் தலைமையில் கூட்டு வழிபாடு (பஜனை) நடைபெறும். ஆன்மீகச் சொற்பொழிவும் நடைபெறும். இவ் அருள் மிகு நிகழ்வுகள் பக்தர்களின் உள்ளத்தை ஈர்த்து பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும்.

பூசைநேரம் ஈசனின் அளப்பிலா அழகு கண்டு உவப்பிலா ஆனந்தத்தில் பக்தர்கள் திளைத்து நிற்பர்.

இவ்வாலயம் உலகில் சாந்தி நிலவவும், அன்பு பெருகவும், அமைதி நிறையவும், அருளை வழங்கி நிற்கிறது. இவ்வாலயத்தில் இறைவன் அருளால் நடைபெறும் அற்புதங்ள் அதிசயங்கள் ஏராளம் இறைவனை வழிபடக் கிடைக்கும் ஆனந்தமோ தாராளம்.

மேலும் நாட்டின் பெருமையைக் காத்திட நம் நாட்டின் பாரம்பரிய கலாச்சார உறவுகளைச் செம்மைப் படுத்த பக்தியை நிலை நாட்டி எல்லா வளமும் பெற்றுய்ய சேவையாற்றி வருகின்றது இவ்வாலயம். எண்ணற்ற பக்தர்களை காந்தம் போல் கவரும் காருண்யத்துடன் செயல்பட்டு வருவது தான் இறைவனின் ஈர்ப்பு. இந்தப் பக்தி விதை ஆழமாய்ப் பதிந்துள்ளது.

மேற்படி ஆலயத்தில் அந்தணப் பெரு மக்களின் வேதபாராயணம், திருமுறை, அலைகள் நிரம்பப் பெற்ற இடமே. உண்மையான திருத்தமாகும். அங்குதான் அடியார்களுக்கு பூரணமான நிம்மதி ஏற்படுகின்றது. சாந்தி ஏற்படுகின்றது. ஆனந்தம் ஏற்படுகின்றது. அத்தனையும் ஒருங்கே அமைந்த திருக்கோயில் தான் சொர்ணலிங்கேஸ்வரர் சந்நிதி. தெய்வீக அதிர் அலைகள் நிறைந்த புனித இடமாகும்.

இத்தனைக்கும் காரணகர்த்தாவாக விளங்குபவர், சாஸ்திரங்களில் பூரணத்துவம் பெற்றிருப்பது மட்டுமன்றி செய்யக் கூடிய பூசைகளையும் பூரணமாக நிறைவாக அருட்பிரவாகம் மிளிர செய்யக்கூடியவர் தான் இவர். அதுமட்டுமல்ல கனி-வும் கருணையும் கொண்டு உயிர்ப்புடன் திகளும் தெய்வம் தான் என்பதை நிதர்சனமாக உணர்ந்து ஆத்மாத்தமாக பூசை செய்பவர்தான் ஆலயக் குருக்கள் சிவசுத சிவாச்சாரியார். இவ்வாலய உயர்ச்சிக்கு முக்கியஸ்தர்களாகத் திகழ்பவர்கள். அறம் காவலர்கள் (நிர்வாகிகள்) அந்தணப் பெருமக்கள், வழிபடும் அடியார்கள் இவர்களின் சேவை பாராட்டுதற்குரியது.

இவ்வாலய நிதியிலிருந்து தர்மப் பணிகளுக்கும் செலவிடப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட தாயாக உறவுகளுக்கும் அங்கயீனம் உற்றவர்களுக்கும், இவ்வாலயம் தர்மக் கொடையாக நிதி வழங்கியதையும் நினைவு கூறுகி-றோம்.

12 வருடங்களுக்கொருமுறை புனருத்தாரண கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்பது ஆலய ஆகமவிதி. அதன் பிரகாரம்பன்னிரண்டுவருடங்கள்பூர்த்தியாகிபுனருத்தாரணகும்பாபிஷேகம்நடைபெறும்பொருட்டுதெய்வவிக்கிரகங்களை பாலஸ்தானம் செய்யப்பட்டு ஆலய கட்டிட புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பிரமல சிற்பிகளின் கைவண்ணம், ஆலயத்தை பொன்வண்ணக் கோயிலாகக் காட்சிப்படுத்திக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் புனருத்தாரண கும்பாபிஷேகம் நடைபெற எம்பெருமானுடைய திவ்ய மங்கள பொற்திருவடிகளை வணங்குகின்றோம்.

அடியார்களின் பிரார்த்தனைகளையும் வழிபாடுகளையும் ஏற்று அழியா வரம் அருளும் ஈசன் அருளினால் அமைந்திருக்கும் இவ்வாலயம் நூறாயிரம் ஆண்டுகள் அவன் புகழ் பரப்பி அருள் சுரக்குமென்பதில் ஐயமில்லை.

இறைவனின் மகிமையில் மூழ்கி குறைவின்றி நிறைவான, வளமான வாழ்வு பெற்று நாமும் நம்மைச் சூழ்ந்துள்ளோரும் நலமே பெற்று சுகமே வாழ்வோம்.

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

ஆக்கம் கவிமணி.
எஸ். விஜயரெட்ணம்

# பிரான்சில் ஈழத்தமிழர்களின் கல்விச் செயற்பாடுகள்

தங்கள் சொந்தப் பண்பாடுகளில் வேருன்றி நின்று மற்றப் பண்பாடுகளை திறந்த மனத்துடன் மதித்து சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதைக் கடமையாகக் கருதும் குடிமக்களைக் கல்வி உருவாக்கவில்லை என்றால் அக்கல்வி தன் கடமையில் தவறி விடுகிறது. - Jacques Delors.

## சமூகம் – கல்வி பள்ளிக்கூடம்

சமூக வளர்ச்சிக்கான ஒரு முக்கிய கருவியாக கல்வி அமைகிறது. மனித இனம் தோன்றிய தினத்தில் இருந்து கல்வி கற்பித்தலும் கற்றலும் ஏதோ ஒரு வகையில் மக்கள் சமூகத்தில் இடைவிடாது காணப்படுகிறது. தொடக்கத்தில் பிள்ளைகளுக்கு குடும்பமே பள்ளிக்கூடமாகவும், பெற்றோர்களே ஆசிரியர்களாகவும் இயற்கையாக அமைகிற நிலை சிறிதுசிறிதாக மாறி, கல்வி கற்பிக்கப் பாடசாலைகளும் ஆசிரியர்களும் உருவாகினர். இந்த மாற்றம் கல்வி வரலாற்றின் முதற் புரட்சி என நுசஉை யுளாடில எனும் கல்வி வல்லுனர் கூறுகிறார். மனித இனம் பல ஆண்டு காலம் முயன்று உருவாக்கிய பண்பாடு, நாகரீகம் என்பவற்றை மங்காமல் பாதுகாத்து, அவற்றை மேலும் சிறபபாக்கவும் கல்வி உதவுகிறது. பள்ளிக்கூடங்கள், பாடசாலைகள் போன்ற கல்வி நிறுவனங்கள் சமூகத்தினரிடையே கல்வியைப் பரவச் செய்கின்றன. சமூகப் பண்பாடு, மரபு போன்றவற்றை இளம் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தவும், கல்வியறிவை நாடுவோருக்குக் கல்வியை வழங்கவும் கல்வி நிறுவனங்கள் விளங்குகின்றன.

கல்வி எனும் சொல் கல் என்ற வேர்ச்சொல் வழி பிறந்தது. கல் என்றால் படி அல்லது அறிந்து கொள் என்று கருத்து கூறப்படுகிறது. 'இளமையில் கல்' என ஒளவையார் கூறியதை நினைவு கூரலாம். கல்விக்கு முறையே பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் Education என்ற சொல் உண்டு. இச்சொல் Educatio எனும் இலத்தீன் சொல்லில் இருந்து வந்தது. Educatio என்றால் வளர்த்தல் என்று பொருள். பிற்காலத்தில் தான் போதித்தல், மனத்தை ஒழுங்கமைத்தல், வழிநடத்தல், கல்வி என்கிற அர்த்தங்கள் கொள்ளப்பட்டன.

பள்ளிக்கூடம் என்பதைக் குறுக்கமாக பள்ளி என வழங்கப்படுகிறது. இச்சொல்லுக்கு 18 பொருள் வரிசைகள் உண்டு. இவ்வாறே Ecole என்ற பிரெஞ்சுச்சொல்லுக்கு 10 பொருள் வரிசைகளும், ளுஉாழழட என்ற ஆங்கிலச்சொல்லுக்கு 15 பொருள் வரிசைகளும் அகராதிகளில் உண்டு. School, Ecole ஆகிய சொற்கள் schola எனும் இலத்தீன் சொல்லில் இருந்து வந்தது. schola என்பதற்கு skholé என்ற கிரேக்கச் சொல்தான் மூலம். sckhol என்றால் செல்வந்தர்களின் பிள்ளைகள் பொழுதுபோக்கும் இடம் என்று பொருள். பிற்காலத்திலேயே இச்சொல்லுக்கு கல்வி பயிலும் இடம் என்ற கருத்தும் கொடுக்கப்பட்டது.

sckholé > schola > école > school

## ஈழத்தவர் கல்விச்செயல் ஆற்றல்

'திரைகடலோடியும் திரவியம் தேடவேண்டும்' என்ற மனிதனின் இயல்புந்தல் வாழ்க்கையை ஈழத்தமிழர்கள் எங்கு மேற்கொண்டாலும் அங்கு காசு என்பதை மட்டும் திரவியமாகக் கொள்ளாது வாடிய நாட்டை விட்டு நாடிய நாட்டில் தமிழர் மொழி, கலை, கல்வி இருப்புகளை திரவியமாகப் பேணி வருவது கண்கூடு. அந்த வகையில் பிரான்சிலும் இச்செயற்பாடுகளை பத்திரிகை, பள்ளிக்கூடம், புத்தகங்கள், இலக்கணம், அகராதிகள், வானொலி, திரைப்படம், நாடகம், கவிதை, இலக்கியச் சந்திப்புக்ககள், தொலைக்காட்சி, பெருவிழாக்கள், கலைநிகழ்ச்சிகள், ஆலயங்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற ,பல்வேறு வடிவங்களில் செய்து வருகிறார்கள்.

## தமிழர் வித்தியாலயம் – 1

தோல்வியையும் துன்பத்தையும் எங்கும் காணும் குருடனைப் போன்றவன் எழுத்தறிவில்லாதவன் என்ற இரஷ்யப் பழமொழி, பிரெஞ்சு மொழி தெரியாததனால் பிரெஞ்சு வாழ் ஈழத்தமிழர்களுக்கு பொருந்தக் கூடாது என்பதற்காகவும், ' மெல்லத் தமிழ் இனிச் சாகும் ' என்பதை மெய்ப்பித்து வந்த பெயரளவில் உள்ள தமிழ்ச்சிறுவர்களை உண்மைத் தமிழ்ச்சிறுவர்கள் ஆக்குவதற்கும் ஆன நோக்கில் பாரிஸ் -13 (Porte de Choisy) இல், 1984 ஆம் ஆண்டு மே மாதம் ஆசிரியர்..ச.சச்சிதானந்தம் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது தமிழர் வித்தியாலயம் எனும் Ecole de Tamoul. இதற்கு முன் 1983 இல் Gaité, Marchal Sembat ஆகிய இடங்களில் இவரால் முதன்முதல் தமிழ் வழி பிரெஞ்சு வகுப்புகள் தொடங்கப்பட்டு மாணவர் தொகை அதிகரிக்கவே தனியான இடம் எடுத்து பள்ளிக்கூடமாக நிறுவப்பட்டது. இதற்கு முன் தமிழ்வழி பிரெஞ்சு கற்க எந்தப் பாடசாலையும் இருக்கவில்லை என்பது தெரிந்துகொள்ளத் தக்கது .

இத்தமிழர் வித்தியாலயத்தில், தமிழர்களுக்கு பிரெஞ்சும், ஆங்கிலமும், தமிழ்ப்பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு தமிழும் துவக்கத்தில் கற்பிக்கப்பட்டு வந்தன. பிரெஞ்சு வகுப்புகள் வாரவிடுமுறை நாட்களில் காலையிலிருந்து மாலை வரை வகுப்புக்கள் நடைபெற்றன. நாளடைவில் வயலின் வகுப்புகளும் சங்கீத பூசணம். ஸ்ரீமதி. கோமளா கந்தையா(இராசகாரியர்) ஆசிரியையினால் கற்பிக்கப்பட்டது. 1984 இல் கலைவாணி விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இரா. குணபாலன் தன்நகைச்சுவையால் சிரிக்கவைக்கும். திறமைக்கு பிள்ளையார் சுழி போட்டார். ஆண்டு முடிவில் Château de Versailles க்கு சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.

பல்வேறு துறைகளில் ஈடுபாடுடைய பல மாணவர்கள் படித்தனர். முதலாவதுஆண்டு நிறைவு விழாவின் போது, 'Le français, C'est mon ami ' எனும் பிரெஞ்சு இலக்கண நூல் வெளியிடப்பட்டது. அக்காலப்பகுதியில பாரிசில் தமிழ் கணினி பாவனையில் இருக்கவில்லை. அதனால் இந்தியாவிலிருந்து தட்டச்சு இயந்திரம் வாங்கப்பட்டு நூறு பிரதிகள் அச்சடிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இப்பள்ளியில் படித்த மாணவர்களின் இலைமறைகாய் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு என மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது. அதற்கு காப்பாளராக முன்னாள் அதிபர். மதிப்புக்குரிய. திருமிகு. சி. காராளபிள்ளை இருந்தார்.

இச்சங்கத்தின் தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், உபபொருளாளர் ,வகுப்புப்பிரதிநிதிகள் என மாணவர்கள் எல்லா வகுப்புகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள். இவர்களில் திருவாளர்கள், அ.ஜெயக்குமார், தே. பிரகலாதன், அ.மலங்கோ, அ. தேவசீலன், இரா. குணபாலன், இரா. சிறீதரன், சொ. அமிர்தகௌரி, த. நித-ிராஜ், வேலழகன், ச. பிரான்சிஸ் மற்றும், இன்றுவரைக்கும் நன்றி மறவாதிருக்கும், 1983 இல் பிரெஞ்சு படித்த முதல் மாணவி, தற்போது ஞநனசழடு இல் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரியும் திருமதி. தர்மினி சிறீக்குமார் ஆகிய மாணவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும் 1986 மே. 12 இல் கொண்டாடப்பட்டு, ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. ஓகஸ்ரில் Château de Versailles, Château de Thoiry சொகுசுப் பேருந்தில் கல்விச்சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டது.

செப்ரெம்பரில் பிரெஞ்சு தமிழ் அகரமுதலி வெளியிடப்பட்டது. இந்த அகராதிக்கு முன் பிரெஞ்சு தமிழ் அகராதி ஆக்கியவர்கள் Musset, Dupuis, என்கிற பிரெஞ்சியப் பண்டாரகர்கள். இதற்கு முன்னர் தமிழர் எவரும் அகராதி எழுதவில்லை என அறிஞர் Gregory James தொகுத்த A History of Tamil Dictionaries எனும் களஞ்சியநூலில் காணலாம். 'Le français à l'usage des Tamouls – தமிழருக்கான பிரெஞ்சு மொழி வழிகாட்டி', 'Dictionnaire pratique : français – tamoul srilankais – நடைமுறை அகரவரிசை : பிரெஞ்சு - இலங்கைத்தமிழ் ' ஆகிய நூல்களை பாரிசில் பெரிய பதிப்பகமான L'Harmattan இல் 1997 இலும், ' Le vocabulaire thématique : français – tamoul ' , Le vocabulaire thématique : tamoul – français.' எனும் இரண்டு அகராதிகளை பிரான்சில் பிரபல்யமான பதிப்பகமான L' OPHRIS, 2010 இல் வெளியிட்டார்கள. இந்நான்கு பிரெஞ்சு தமிழ் நூல்களைத் தவிர வேறு எந்த தமிழரின் நூலும் பிரெஞ்சுப் பதிப்பகங்களில் வெளியானது இல்லை. இவற்றின் ஆசிரியர் பிரான்சில் முதற் தமிழ்ப்பள்ளிக்கூடம் நிறுவி, இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை ஐரோப்பாவுக்கு கொண்டுவந்தவருமான ச. சச்சிதானந்தம் என்பவர்.

## PTEA, ASCES, தமிழ்ச்சோலை

முன்னாள் அதிபர். திருமிகு. சி. காராளபிள்ளை அவர்களைக் காப்பாளராகக் கொண்டு, தமிழர் வித்தியாலய மாணவர்சங்க அங்கத்தவர்களாக இருந்த மாணவர்கள் சேர்ந்து, பாரிஸ் தமிழர் கல்வி நிலையம் - PTEA என்பதை 1986 இல் Charonne இல் ஸ்தாபித்தார்கள். அவர்களின் கூட்டுமுயற்சியினால் அப்பாடசாலை வெற்றிகரமாக நடந்து வந்தது. இக்கல்விநிலையம் பிரெஞ்சு கற்பிப்பதற்கு சில ஆசிரியர்களை அறிமுகம் செய்திருக்கிறது. அவர்களில் திரு. சுரேஷ் மாஸ்ரர், திரு. கஜேந்திரன் ( கஜன் மாஸ்ரர்) என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இங்கு திருவாளர்கள், லெனி, வாசுதேவன், மாக்ஸ்மில்லன் போன்றோரும் பிரெஞ்சு கற்பித்தார்கள். இங்கு தமிழ், நுண்கலை, கணினி வகுப்புகளையும் சில விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்தி இருக்கிறார்கள். பாரிஸ் ஈழத்தமிழர் கல்விக்கு பாரிஸ் தமிழர் கல்விநிலையததின் பங்களிப்பும் வரலாற்றுப் பதிவுக்கு உரியது.

பாரிஸ் வாழ் ஈழத்தமிழர் கல்வி வரலாற்றில் பதிவுக்கு உரிய கல்விநிலையம் பிரகலாதன் - வசந்தி இணையர் Pernetty தொடங்கி, Crimée இல் நடாத்தி வரும் - ASCES கல்விநிலையம் பல வருடங்களாக இயங்கி வருகிறது. இந்த இருவரும் பிரெஞ்சைக் கற்பிப்பதோடு நின்றுவிடாமல் இலக்கண நூல்களையும், அகராதிகளையும் எழுதி வெளியிட்டமை பாராட்டுகளுக்கும் பெருமைப் படுத்தலுக்கும் உரித்தானது. பிரெஞ்சு படிப்பிப்பதை பிரதானமாக ஆரம்பித்து அங்கு ஆங்கிலம், தமிழ் மற்றும் கலை வகுப்புகளுடன் 'ரியூஸன்' வகுப்புகளை ஈழத்து ஆசிரியர்களைக் கொண்டு நடத்தியது நினைவூட்டத்தக்க தகவல்.

இன்னும் இரண்டு-மூன்று பாடசாலைகள் ஆயசயவைஉாநசள, Bercy , Montparnasse ஆகிய இடங்களிலும் தொடங்கி இயங்கிய தகவல்கள் உண்டு. இவ்வாறு ஈழத்தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் சொல்லிக்கொடுப்பதற்கும் சில நிலையங்கள் உள்ளன. இவற்றில் சிறுவர் - இளையோர் தமிழ் படிப்பதற்கு நூல்களையும் ஓர் குறிக்கோள் அடிப்படையில் அமைத்து, ஆயிரக்கணக்கான மாணவர்களை பரீட்சைக்கும் தோற்ற வழி செய்யும் தமிழ்ச்சோலைக்கு முக்கிய இடம் உண்டு. இது 1995 - 1997 காலப்பகுதியில் இருந்து ஈழத்தமிழர் பரவலாக வாழும் ஊர்களில் சங்கங்கள் அமைத்து தமிழ்ப்பணி புரிகிறது. இந்தியத்தமிழர்களும் அவர்கள் வாழும் ஊர்களில் சங்கங்கள் அமைத்து தமிழ் வகுப்புகள் (தமிழர் இல்லம்)நடாத்தி வந்தார்கள். (தமிழ்ச் சங்கம்) நடாத்தி வருகிறார்கள்

## தமிழர் வித்தியாலயம் – 2

1984ஆம் ஆண்டு Porte de Choisy இல் நிறுவப்பட்ட தமிழர் வித்தியாலயம் ஆற்றும் கல்விச்செயற்பாட்டுகளுக்கு ஏற்ப. Centre d'Insertion et d'Information , Institut International des Etudes Supérieures என இரு பெயர்களைக் கொண்டிருக்கிறது. 1995 இலிருந்து பாரிஸ் 18 – La Chapelle ( 70 , rue Philippe de Girard) இல் செயற்பட்டு வருகிறது. இங்கு பிரெஞ்சு. தமிழ். ஆங்கிலம் முதலான மொழிகள். பரதநாட்டியம். சங்கீதம் ஆகிய நுண்கலைகள். Kung –fu, Fitness, Amnicissement உடல் உரமூட்டு- தற்பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் கணினித்துறைக் கற்கைள். PS தொடக்கம் Terminale வரை பிரெஞ்சு ஆசிரியர்கள் கொண்டு. குறைந்த கட்டணத்தில் 'ரியூஸன்' வகுப்புகளும் நடைபெறுகின்றன. Mairie de Paris இன் Guide de l'alphabétisation et de la remise à niveau en français à Paris - பாரிசில் வெளிநாட்டவர் பிரெஞ்சு கற்கும் பாடசாலைகள் விபரவழிகாட்டி நூலில் இப்பாடசாலையின் பெயரும் - Centre d'Insertion et d'Information இடம்பெற்றிருக்கிறது.. அடிப்படையில் ஈழத்தமிழர்கள் பிரெஞ்சும். தமிழ்ச்சிறுவர்கள் தமிழும் படிப்பதற்கென தொடங்கப்பட்ட இந்நிறுவனம். தற்போது ஈழத்தமிழ் மாணவர்கள் மட்டும் அல்லாமல் சிங்கள. இந்திய. மோரிசிய. அராபிய.ஆபிரிக்க மாணவர்களும் கற்கும் நிலைக்கு வளஉந்திருக்கிறது.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இந்நிறுவனம். இக்கல்விச்செயற்பாடுகளுடன். பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளுக்கு உலகப்புகழ் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஐரோப்பிய வளாகமாக 2000 ஆண்டிலிருந்து Institut International des Etudes Supérieures - சர்வதேச உயர்கல்வி நிறுவனம் உயர்கல்வி வழங்கி வருகிறது. பல்கலைக்கழகத் தகுதி என்பது எங்கும் அங்கீகாரம் உடைய உயர்கல்வித்தகுதி. Universitas என்பது Universum என்பதில் இருந்துதான் வந்தது இங்கு இதுவரைக்கும் பிரான்ஸ். சுவிஸ். ஜேர்மனி. இங்கிலாந்து. நோர்வே. நெதர்லாந்து.ஆஸ்திரியா.டென்மார்க். லற்வியா ஆகிய நாடுகளிலிருந்து இலங்கை இந்திய. ஐரோப்பிய மாணவர்கள் பாரிஸ் வந்து பரீட்சை எழுதி 54 பேர் MBA., M.A., M.Com., B.A., B.Sc., B.Com., BBA., BCA., DSS., CLIS.. பட்டங்கள் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கான பட்டமளிப்பு விழா விரைவில் நடைபெற இருக்கிறது.

இந்த ஐ/னிலிருந்து PG தகுதி உடையவர்கள் மேற்கொள்ளக்கூடிய முனைவர் (கலாநிதி) -Ph.D. பல்கலைக்கழக உயர்கற்கையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஈழத்தமிழர்களின் குறைந்த பட்சப் படிப்பு A/L ஆக இருக்கும். ஆனால் நாட்டு அரசியல் நிலை காரணமாக அந்த குறைந்த பட்சப்படிப்பைப் படிக்க அல்லது முடிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையினால் பாதிக்கப்பட்டவர்கள் பலர். இதனால் வாழ்வின் கனவான பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாமல் வருத்தப்படுவர்களும் உண்டு. சூழ்நிலை காரணமாக. படித்தவர்கள், முடித்தவர்கள், படிக்க விரும்பிபடிக்க முடியாமல் போனவர்கள், இளமையில் படிக்கவிரும்பாமல் காலம் கடந்து கற்க விரும்புபவர்கள், படித்திருந்தும் கல்விச்சான்றிதழ் தொலைத்தவர்கள், இல்லாதவர்கள் அனைவருக்கும் தொலை தூரக்கல்வி- Distance Education, திறந்த முறைக்கல்வி – Open University (A/L சான்றிதழ் இல்லாமல் அனுமதி) மூலம் உயர்கல்வி, பட்டப்படிப்பு நல்குகிறது அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

## கல்வியின் நோக்கங்கள்.

கல்வி கற்பவர்களின் அறிவை வளஃத்து, அனுபவங்களைப் பெறச்செய்து. நடத்தை முறைகளைச் சீர்ப்படுத்தி, வாழும் சூழ்நிலையுடன் சிறந்த பொருத்தப்பாட்டினை ஏற்படுத்துவது என்பதே கல்வியின் நோக்கம் ஆகும். கல்வியின் நோக்கங்கள் தொழில் நோக்கம் -- Bread and Butter Aim, அறிவு அல்லது கற்றல் நோக்கம் -- Knowledge or Learning Aim> பண்பாட்டு நோக்கம் -- Cultural Aim, இசைந்த வளர்ச்சி நோக்கம் -- Harmonious Development Aim, ஒழுக்க நோக்கம் -- Character or Moral Aim, சமூக நோக்கம் -- Social Aim> தனித்தன்மை நோக்கம் -- Individuality Aim, சமநிலைப்பட்ட ஆளுமை வளர்ச்சி நோக்கம் -- Balanced Personality Aim, முழுவாழ்வு நோக்கம் -- Complete Living Aim, என பல வகைப்படும். கல்வியில் ஈடுபடுவது அதாவது ஒருவர் கல்வி கற்பதும், கல்வி கற்பிப்பதும் அவரவர் கல்வி நோக்கத்தைப் பொறுத்தே அமைகிறது.

'எக்குடிப்பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல் வருக என்பர்.'

பேராசிரியர். ச. சச்சிதானந்தம்

கலைச்சுடர்

**www.kalaisudar.com**

www.tamilkan.com

தமிழ் கண்

**www.tamilkan.com**

Sudar Oli

சுடர் ஒளி

Published by Uthayan Ltd.

தொலைபேசி: 020 7078 8870 www.sudaroli.co.uk தொலைநகல்: 020 7899 8009

**www.sudaroli.co.uk**

நாதம்

செய்திகள்

**www.naathamnews.com**

ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

**www.eelanatham.net**

15வது தமிழர் விளையாட்டு விழா 2012

# பொதுப்பணியும் சமூகநலனும்

பொதுவாழ்க்கை என்னும் புனிதப் பயணத்தில் காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு மனிதனுமே தன்னை சத்திய சோதனைக்கு உட்படுத்தியாகியே தீரவேண்டும். அதுவே வரலாறு கண்ட உண்மை. தன்நம்பிக்கையும், இலட்சியப்பற்றும், விடாமுயற்சியும் கொண்ட நான்கு இளைஞர்களைத் தாருங்கள் நம் தாய்நாட்டின் தலையெழுத்தையே மாற்றியமைக்கின்றேன் என்று சொன்ன சுவாமி விவேகானந்தரும் நம்மிடையேதான் வாழ்ந்தார். பல புதிய சமூக நலனில் அக்கறையுள்ள பாதைகளைக் காட்டிச் சென்றுள்ளார்.

அந்தவகையில் சமூக உயர்விலும், அபிவிருத்தியிலும் அக்கறைகொண்டு, அந்த சமூகத்திற்காக தன்னலமற்ற தியாக சிந்தனையுடன் உழைக்க வரும் ஒவ்வொருவரும் பல்லாயிரக்கணக்கான சிக்கல்களையும், எதிர்ப்புக்களையும் சந்திக்க நேரிடும். இந்த வேளைகளில் எல்லாம் அந்த சேவையாளன் தனக்குள் சாந்தமாகித் தன்னைத்தானே புடம்போட்டு மேலும் தனது பாதையில் உறுதியாகச் செயல்படும் வகையில் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக எந்த சமூகத்தின் உயர்வுக்காக நாம் பாடுபட்டு உழைக்க முன்வருகின்றோமோ, அந்த சமூகத்தில் உள்ளவர்கள் மத்தியில் முதலில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் நம் நடவடிக்கைகள் இருக்க வேண்டும். காரணம் உயர்வை நோக்கி வளர்க்கப்பட வேண்டிய ஒரு சமூகமாக நமது கண்ணில் படும் அந்த சமூகம், முன்னர் வேறு பல சுயநலக்காரர்களால் ஏமாற்றப்பட்டிருக்கலாம். அல்லது வஞ்சிக்கப்பட்டிருக்கலாம். அல்லது தவறான பாதையில் வழி காட்டப்பட்டு அவர்கள் பல சிக்கல்களைச் சந்தித்திருக்கலாம். இப்படி பல பக்கங்களிலும் அவர்களுக்கு ஏற்பட்ட மனத் தாக்கங்கள் புதிதாக வரும் தன்னலமற்ற சேவையாளனையும் குற்ற நோக்கத்துடனும், தவறான கண்ணோட்டத்துடனுமே பார்க்க விழையும். ஆயினும், அவற்றையெல்லாம் துச்சமென மதித்து. அந்த மக்களுக்கு புரியக்கூடிய வகையில், அவர்களை அணுகக்கூடிய வழியில் சென்று எடுத்துரைத்து முதலில் அவர்களிடம் உள்ள அறியாமையைப் போக்குவது மிகவும் இன்றியமையாததாகும்.

"சமூகநலன் கருதி சேவையாற்றப் புறப்படும் பொழுது, தங்கள் அறியாமையைப் போக்க மறுக்கும் மக்களுடனும் போராட வேண்டி வரும்" என்று அறிஞர் வினோபாஜி அவர்கள் கூறிய கூற்று எவ்வளவு உண்மையானது என்று பல வேளைகளில் எம்மைச் சிந்திக்க வைத்திருக்கின்றது. 'தொட்டால் நெருப்பு சுடும்' என்பதை அனுபவத்தில் கண்டுகொள்ளத் துடிக்கும் சிறு குழந்தையின் மனத் தன்மைகொண்ட மக்களின் பெரும் பகுதியினரை நாம் சந்திக்கும் நிலை ஏற்படும். அவர்கள் தம்மிடம் அறியாமை இருக்கின்றது என்பதைக்கூட ஒப்புக்கொள்ள மாட்டார்கள். புளியமரத்திற்குக் கீழே இரவில் தூங்கக்கூடாது. அங்கு இரவில் மனித சுவாசத்திற்கு ஏற்காத கரியமிலவாயு பெருமளவில் புளிமரத்தினால் வெளியிடப்படும். அதனை சுவாசித்தால் நீ இறந்துவிடுவாய் என்று கூறினால், அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மக்கள் இன்னமும் இருக்கிறார்கள். அது மட்டுமல்லாது, இரவு அதன்கீழ் படுத்துறங்கி சுவாசக் கோளாறு காரணமாக ஒருவன் இறந்துவிட்டால் அவனை பேயடித்துவிட்டது என்று அடித்துச் சொல்லும் ஆசாமிகள் இன்னமும் பலர், பின்தங்கிய கிராமங்களில் உள்ளனர். அவர்கள் தாங்களும் உண்மையைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். தங்களோடு சேர்ந்தவனையும் புரிந்துகொள்ள விடமாட்டார்கள். யாராவது சிந்தனையாளர்கள் நல்லபடியாக எடுத்துச் சொல்வதையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

மேலே குறிப்பிட்ட உதாரணம் ஒரு மாதிரிக்கான கிராமத்து நடைமுறைக் கதைதான். ஆனால் இன்றைய சமூகத்தில் பல நற்பணிகள், சமூக உயர்வுக்கான கைங்கரியங்கள் முற்றாகத் தடைப்பட்டு, அவை அடுத்தகட்ட நடவடிக்கைக்கு எடுத்துச்செல்லப்படமுடியாதபடி தடைப்பட்டுக்கிடக்கக் காரணமும் கூட இந்த அறியாமையைப் போக்க மறுக்கும் பேர்வழிகள் பலர், அறிவாளிகள் மட்டத்திலும், சமூக ஆர்வலர்கள் மட்டத்திலும், பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள சமுதாய சிற்பிகள் மட்டத்திலும் காணப்படுவதோடு மட்டுமல்லாது, சில சுயநலக்காரர்கள், சுரண்டல் பேர்வழிகள், சமூக நலனின் அக்கறையில்லாது தமது சுயநலத்திலும், பணம், பதவி, புகழ் என்பவற்றிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளவர்களிடம் இந்த சமூக ஆர்வலர்கள் கட்டுப்பட்டும், விழிப்புணர்வு அற்றும், தவறாக வழிகாட்டப்படும் நிலையிலும், அடங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டால் அதுவும்கூட ஒரு சமூகவளர்ச்சிக்கு மிகவும் பரிதாபத்துக்குரியது என்பதை பொதுவாழ்வில் நாம் மிகவும் கவனமாகக் கருத்திற்கொள்ள

மேற்கூறிய கருத்துக்கள் மிகவும் கசப்பாக இருந்தாலும், கசப்பான மருந்தே பாரிய நோய்களைக் குணப்படுத்தும் என்பது நாம் கண்ட நடைமுறை உண்மை. எனவே சமூக உயர்வுக்கும், அதன் வளர்ச்சிக்கும் தடையாக உள்ள நோய் என்ன என்பதை நாம் முதலில் கண்டறிந்து, அதற்கு உரிய வழிமுறைகளை, அமைதியாகவும், சிறப்பான முறையிலும் அதனை நீக்க வழிவகை செய்ய வேண்டும். மக்களிடையே அவர்கள் உயர்வுக்குத் தடையாக உள்ள நோய் போல ஒட்டிக்கொண்டிருக்கும் இந்த அறியாமையைப் போக்க முயற்சிப்பது மட்டுமல்லாது, அதனில் வெற்றிபெறும் வரை ஓய்வும் சலிப்பும் ஏற்படாதவாறு நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நோயாளிக்கு வைத்தியம் பார்க்கும் வைத்தியரும் தன்னை அந்த நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முன்னெச்சரிக்கையாக இருப்பதைப் போல.

இந்த அறியாமையைப் போக்கும் நோயானது இருளைவிட மிகவும் கொடியது என்று ஓர் சமூகமுன்னேற்ற அறிஞர் ஒருவர் கூறிய கருத்தை உற்று நோக்குவோமாயின், இருளானது தான் இருள்தான் என்றும் காட்டிக்கொள்ளும், தன்னுள்ளே மறைக்கப்பட்டுள்ள பொருட்களைக் காட்டாது. ஆனால் வெளிச்சம் இருக்குமானால் அந்த இருளை வென்று அதனுள் மறைக்கப்பட்டிருக்கும் பொருளைப் பார்க்க இருளானது, இடம் விட்டுக்கொடுக்கும் தன்மை உள்ளது. ஆனால் அறியாமை என்னும் இருளில் மூழ்கி இருக்கும் மனிதனோ, தான் அறியாமையால் மூழ்கடிக்கப் பட்டிருப்பதையும் ஒத்துக்கொள்ள மாட்டான். அதற்கு எதிரான கருத்துக்கள் வெளிவருவதையும் விரும்பாததோடு, தன்னோடு ஒத்தவர்களையும், அந்தக் கருத்துக்களை செவிமடுக்கவோ, புரிந்துகொள்ளவோ அங்கீகரிக்கமாட்டான். எனவே அறியாமையைப் போக்க மறுக்கும் ஓர் மனிதன் இருளைவிடக் கொடுமைத்தன்மையுள்ளவன் என்பதை அந்த அறிஞர் மிகவும் அழுத்தமாகக் கூறிவைத்துள்ளதை நாம் மிகவும் முக்கியமாகக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

இத்தகைய நம்முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களான பல முக்கிய கருத்துக்களை மனதில் அழுத்தமாகப் பதித்துக்கொண்டு பொதுசேவையில் ஈடுபடும் எந்த ஒருவரும் தோற்றுப் போவது மட்டுமல்ல சமூகத்தினால் போற்றப்படுவார் என்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

'எண்ணிய முடிதல் வேண்டும் - நல்லவே எண்ண வேண்டும்'
'திண்ணிய நெஞ்சம் வேண்டும் - தெளிந்த நல்லறிவு வேண்டும்.'

இத்தனையும் ஒருங்கே கொண்ட சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால் இழப்பதற்கு ஒன்றுமில்லை என்றாலும், வெல்வதற்கு ஒரு யுகமே இருக்கின்றது என்பதை வருங்காலத்தில் புடம்போட்டுக் காட்டலாம்.

இத்தகை சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து செயற்படுத்திவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது கடந்த பதினைந்து வருடங்களாக பிரான்சில் நம் கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் என்பற்றை நமது அடுத்த சந்ததினருக்கு எடுத்துச்சொல்லிப் பயிற்றுவிக்கும் செயற்பாட்டினை வெக சிறப்பாகச் செய்து வருவதுடன், தமிழர் விளையாட்டுவிழாவினைத் தொடர்ச்சியாக வெற்றீகரமாகக் கொண்டாடி வருவதுடன், அதன் 15வது வருடத்தினைக் கொலாகலமாகக் கொண்டாடுவதுடன், அதன் மூலம் கிடைக்கும் நிதியானது தாயகத்து மக்களின் தாகம் தீர்க்கும் தனித்துவம் மிகவும் பாராட்டுக்குரியது. அதன் சேவையும், வளர்ச்சியும் மேலும் பல்கிப்பெருகி வைரவிழாவையும் தாண்டி வளர்ச்சிபெற வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வாழ்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
உயர்க அதன் மக்கள் தொண்டு

இலங்கயர் கனகசபை அரியரெட்ணம்

# தமிழின் முதல்வடிவம் கூத்து.

அரங்கின் தோற்றம் பற்றிய நம்பகரமான செய்திகள், அதன் கால அளவுகள் எதுவும் அறுதியிட்டுச் சொல்லமுடியாதவையாகவே உள்ளன. உலக அளவிலும் அரங்கின் வரலாறுகள் மாறுபட்ட செய்திகளையே கொண்டிருக்கின்றன.

கடவுள் வழிபாட்டிற்கும், நடத்துக் கலைகளுக்குமான தொடர்பு மட்டும் பல்வேறு நாடுகளுக்கும் பொதுவான-தாக உள்ளன. தாம் வணங்கும் கடவுளர்களை மகிழ்விக்க வேண்டும் என்ற நோக்கிலே வழிபாட்டு உணர்வுகளோடு கலை படைக்கப்பட்டுள்ளன. இக்கருத்தினையே அரங்கத்தின் தோற்றமாக உலகின் பல்வேறு நாடுகளின் நாடகவியலாளர்களும் கொண்டிருக்கின்றனர். எனவே கலைகள் எவ்வாறு தோற்றம் பெற்றிருந்தாலும், மனிதனின் வாழ்க்கை நடைமுறை, மனிதர்களின் மனநிலை, கால மாற்றங்களின் சூழ்நிலை, மற்றும் விஞ்ஞான வளர்ச்சி போன்றவற்றினால் கலைகளும் தமது தோற்றநிலையிலிருந்து வெளிப்பட்டு தனக்கென புதிய தளங்களை அரங்க மாற்றங்களை உருவாக்கி வருகின்றன என்பது நாம் அறியாததல்ல.

தமிழ் நாடகக் கலையின் முதல் வடிவமே கூத்துத்தான், ஆட்டமும் அதனோடு ஒன்றித்திருந்ததால்தான், ஆடிப்பாடி மகிழும் தமிழின் முதல் கலைச் செல்வமாக 'கூத்து' இன்றுவரை தனிச்சிறப்போடு திகழ்கின்றது. தொடக்க காலத்தில் கதை சார்ந்தும் கதை சாராமலும் இருந்த கூத்துக்கள், பின்னர் கதையோடு இணைந்து வெளிப்படத் தொடங்கிய போதுதான் அதற்குரிய கூறுகளுடன் நடனம், நாடகம் என்னும் நிலைக்கு வளர்ந்துள்ளன. தொடக்க கால ஆட்டங்களும் பொரும்பாலானவை கூத்தோடு இணைந்தே அமைந்துள்ள நிலையை உணர முடிகிறது. கூத்துக்கள், பிற்காலத்தில் தெருக்கூத்துக்களாகவும், ஆட்டங்கள், காவடி, கரகம், பொய்க்கால் தேவராட்டம், ஒயிலாட்டம் எனவும் தனித்தன்மைகளுடன் விளங்கிவருகின்றன. ஆய்வாளர்களின் இத்தகைய கணிப்பீடுகளைப் பார்க்குமிடத்து எமது தாயகமான தமிழீழம் இக்கூத்துக்கலையை பாதுகாத்து வருவதன் மூலம் கலையுலகில் தனக்கென ஓர் தனியிடத்தை பெற்றிருப்பது எம்மைப் பெருமைப்பட வைக்கின்றது. உலகை வியக்கவைக்கும் மிகத்தொன்மையான இக்கூத்துக்கலையை எமது தாயகம் தன்னகத்தே கொண்டிருந்தாலும், எம்மவர்களாலேயே அதன் மகத்துவம் உணரப்படாமல் பல்வேறுதரப்பட்ட பார்வையினாலும்,பாராமுகங்களினாலும்,சூழ்ந்திருக்கும்இருள்மேகங்களினாலும்,சுற்றியிருக்கும்முள்வேலிகளினாலும் அடங்கியொடுங்கி சிதைந்து போகும் நிலை இவ்வரிய கலைக்கு ஏற்பட்டிருப்பதுதான் வேதனைக்குரியது.

இன்று தமிழகத்தில் நாடகம் சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களின் ஆய்வுகளில், இலக்கிய இலக்கண நூல்களான தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலிருந்து கூத்துக்கள் பற்றிய குறிப்புக்களை அறிய முடிகின்றது.

வசைக்கூத்து, புகழ்கூத்து, வரிக்கூத்து, சாந்திக்கூத்து, மெய்க்கூத்து.......

இவ்வகையான பல்வேறு வகைக் கூத்துக்கள் பற்றி அறியமுடிகிறதே தவிர, அதுபற்றிய ஆதாரங்களாக வழக்கில் எதுவும் இருப்பதாகத்தெரியவில்லை. ஆயினும், அங்கிருந்தே வந்த கூத்துக்களை எமது முன்னோர்கள் தமக்கான தனித்துவத்துடன் மாற்றியமைத்து தென்மோடி, வடமோடி, காத்தான்கூத்து, வசந்தன்கூத்து, காமன்கூத்து என இன்றுவரை ஆடிப்பாடி வருவதை அதிக அளவில் அவர்கள் அறிந்திராததும், ஆராய முற்படாததும் வியப்புக்குரியது தான். ஆயிரத்தி ஐநூறுகளில் இலங்கைத் தீவை தமது ஆளுமைக்குள் கொண்டுவர முற்பட்ட போத்துக்கேயர், முதலில் கரை-யோரப் பகுதிகளைத் தமதாக்கிக்கொண்டனர்.

முதலில், மதமாற்றத்தின் ஊடாக தமது அரசை நிலைப்படுத்த எண்ணியவர்கள், கலையையே தமது ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்டனர். அப்போது, எமது மக்களால் பாரம்பரியமாகவும் பரம்பரை பரம்பரையாகவும் பாடப்பட்டு வந்த கூத்துக்கலை அவர்கள் வசமாகியது. தங்கள் மதத்தின் வணக்கத்துக்குரியவர்களான சமையத்தூதுவர்கள், புனிதர்களின் வரலாறுகள் அவர்களின் கதைக்களமாக மாறின. அவர்கள் வீசிய வலையில் விக்கியவர்கள் கூடுதலாக எமது தாயகத்தின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்களே.

விவசாயம் சாராத பல்வேறு தொழில் சார்ந்த மக்களும் இக்ககரையோரப் பகுதிகளை தமது வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர் இதன் காரணமாகவே, தாயகத்தில் வாழும் கூத்துக் கலையும், கூத்துக்களும் கிறிஸ்தவ மதம் சார்ந்தவர்களிடமே அதிக அளவில் காணப்படுகின்றது. மதம் மாற விரும்பாதவர்களும், விவசாய நிலங்களுக்குச் சொந்தமானவர்களும் இக்கலையை கைவிடும் மனநிலைக்குள்ளானது வருத்தத்திற்குரியதே. இதனால், ஏட்டுச் சுவடுகளில் இருந்த பல கூத்துக்கள், படைப்புக்கள் இவர்களால் மறைக்கப்பட்டும், புதைகப்பட்டும் அழிந்தேபோயின. இன்றும், மன்னார் மாதோட்டப் பகுதிகளில் மிகப் பழமையான கூத்துச் சுவடிகளை வெளிகொண்டுவராமல் தமது பரம்பரைச் சொத்துக்களாக மறைத்தும், பாதுகாத்தும் வருகின்றார்கள் என கூத்திசைக் கலைஞர் குழந்தை செபமாலை அவர்கள் ஓர் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். கிறிஸ்தவ மதப் பிரச்சாரமாக கூத்துக்கள் மாறினாலும் இன்றுவரை அக்கூத்துக்கள் தனது பழமையை இழக்காது அதனை முன்னெடுக்கும் சமூகங்களின் சமுதாய அரங்குகளாக திகழ்ந்து வரகின்றன.

ஐரோப்பிய வரலாறுகளுக்கு ஏற்ப ஒப்பனை, ஆடைகளில் மாற்றங்களும் மற்றும் தென்மோடிக் கூத்துக்களின் ஆட்டமுறைகளில் சிலவிட்டுக் கொடுப்புக்களும் ஏற்பட்டிருப்பது என்னவோ தவிர்க்க முடியாதவையாக இருந்தாலும், முகம் தெரியாமல் இக்கலையைப் பாதுகாத்துத்தந்து அண்ணாவியார்கள் என அழைக்கப்பட்ட கலைஞர்களும், கூத்திசைக் கலையைப் பாடிய கவிஞர்களும் போற்றுதற்குரியவர்களே. இன்று எமது தாயகம் உலகமயமாக்கல், இராணுவ மயமாக்கல் போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்குள் சிக்கித்தவித்தாலும், அங்கிருந்து வரும் சில தகவல்கள் எமக்கு ஆறுதலைத் தரவே செய்கின்றன.

இவ்வரிய கலையைக் கண்டுணர்ந்த ஈழத்து அறிஞர்களும் ஆய்வாளர்களுமான பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி ஆகியோர் இக்கலையை உலகறியச் செய்யவேண்டுமாயின் இதனை கற்கைநெறியாக்கவேண்டும் என விரும்பி அதற்கான விதைகளையும் வித்திட்டிருந்தார்கள். அந்த விதைகள், இன்று துளிர்விடத்தொடங்கியுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக் கழகங்களில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாட நெறியாக்கபட்பட்டு அதன் ஒரு பகுதியாகக் கூத்து தனியான கற்கை நெறியாக்கபட்பட்டுள்ளது மகிழ்ச்சி தருவதாகவுள்ளது. இதற்காக கடுமையாக உழைத்த பேராசிரியர் மௌனகுரு அவர்கள் பாராட்டுதற்குரியவரே. நோர்வேயிலுள்ள ஒஸ்லோ இசைக் கல்லூரியின் உதவியுடன் தமிழ் கூத்துக்கலை -வடமோடி ஆட்ட பயிர்ச்சிக்கான கைநூல் ஒன்றினையும் அவர் வெளியிட்டிருப்பது வடமோடிக் கூத்துக்கலை வாழும் நிலை பெற்றுள்ளது. இதுபோன்று தென்மோடி காத்தான்கூத்து, காமன்கூத்து, வசந்தன்கூத்து ஆகியவற்றிற்கும் பயிற்சி பாட நூல்களை வெளிக்கொண்டுவர வேண்டும். இதற்கான முயற்சிகளில் யாழ் திருமறைக் கலாமன்றமும் சில பணிகளை முன்னெடுத்து வருகின்றது. ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக பிரான்ஸ், ஜேர்மன் நாடுகளில் தமிழரங்கு கூத்தரங்கை இளைய தலைமுறையினரிடம் எடுத்துச் செல்லும் பணியில் இயங்கிவருகின்றது. இருப்பினும், எமது தாயகத்தில், தொடரும் இன அழிப்புக்களும், நில அபகரிப்புக்களும் இத்தகைய முன்னெடுப்புக்ளுக்கு பின்னடைவுகளை தந்துகொண்டே இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. எனவே எமது தேசத்தின் சுமைகளை சுமக்கவேண்டியவர்களாக இருக்கும் புலம்பெயர்ந்த சமூகமே எமக்குச் சொந்தமான கலைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பினை ஏற்கவேண்டியவர்களாகின்றார்கள்.

ஒரு இனத்தின் - மொழியின் தொன்மையும் நாகரீகமும் அக் கலைகளின் ஊடாகவே அறியப்படடும். ஆகவே புலம்பெயர்ந்து வாழும் நாம் இவ்வரிய கலையை முறையாக ஒழுங்கான பயிர்ச்சியினூடாக எமக்கான அரங்குகளில் அடுத்த தலைமுறையினருக்கு கடத்துவதற்கான பணிகளில் அக்கறை கொண்டு உழைக்கவேண்டும்.

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் நாளை தமது வேர்களைத் தேடும்போது, அவர்கள் தமது தொன்மைகளை இழந்து தவிப்பவர்கள் ஆகிவிடக்கூடாது.

கூத்து பாரம்பரியமிக்க பழைய கலை. அதைப் பேணிக்காப்பது மிக அவசியம். தமிழில் புதியகலை வடிவங்களை தோற்றிவிற்பதற்கான ஒரு முன்னெடுப்பு கலைகளினூடாக தமிழ் தேசியத்தை வளர்க்கவும், எமது உரிமைகளை மீட்டெடுக்கவும் முடியும்.

எம். அரியநாயகம்
தமிழ் அரங்கு

# இனப்படுகொலைகள்

01. 1956ம் ஆண்டு இனப்படுகொலைகள்
02. 1958ம் ஆண்டு இனப்படுகொலைகள்
03. 1974ம் ஆண்டு தமிழாராட்சி மகாநாட்டு படுகொலைகள்
04. 1977ம் ஆண்டு இனப்படுகொலைகள்
05. 1981ம் ஆண்டு யாழ் நூலக எரிப்பு
06. 1981ம் ஆண்டு செட்டிகுளப் படுகொலைகள்
07. 1983ம் ஆண்டு இனப்படுகொலைகள்
08. 1984ம் ஆண்டு ஒதியமலைப் படுகொலைகள்
09. 1985ம் ஆண்டு குமுதினிப்படகு படுகாலைகள்
10. 1985ம் ஆண்டு அரியாலையில் வெறியாட்டம்
11. 1985ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் ரணகளம்
12. 1986ம் ஆண்டு உடும்பன்குளப் படுகொலைகள்
13. 1987ம் ஆண்டு திருமலை பட்டித்திடல் படுகொலைகள்
14. 1987ம் ஆண்டு பிரம்படிப் படுகொலைகள்
15. 1987ம் ஆண்டு அராலித்துறைப் படுகொலைகள்
16. 1987ம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரி படுகொலைகள்
17. 1987ம் ஆண்டு அளவெட்டி படுகொலைகள்
18. 1987ம் ஆண்டு சாவகச்சேரி சந்தைப் படுகொலைகள்
19. 1987ம் ஆண்டு யாழ் இந்துக்கல்லூரி படுகொலைகள்
20. 1987ம் ஆண்டு மூளாய் வைத்தியசாலை படுகொலைகள்
21. 1987ம் ஆண்டு நெடுங்கேணி படுகொலைகள்
22. 1987ம் ஆண்டு யாழ் மருத்துவமனைப் படுகொலைகள்
23. 1989ம் ஆண்டு வல்வைப் படுகொலைகள்
24. 1990ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகள்
25. 1990ம் ஆண்டு அம்பாறை மாவட்வத்தில் நடைபெற்ற படுகொலைகள்
26. 1990ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் படுகொலை நடந்த கிராமங்களும், திகதியும்
27. 1990ம் ஆண்டு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்1990ம் ஆண்டு ஜூன் ஜூலைமாதங்களில் அரச படையினரால் 2509 தமிழர்கள் படுகொலை, 4736 வீடுகள் சேதம்
28. 1990ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகள்
29. 1990ம் ஆண்டு வந்தாறுமூலைப் படுகொலைகள்
30. 1990ம் ஆண்டு சத்துருக்கொண்டான் படுகொலைகள்
31. 1990ம் ஆண்டு வீரமுனைப் படுகொலைகள்
32. 1991ம் ஆண்டு கொக்கட்டிச்சோலை படுகொலைகள்
33. 1993ம் ஆண்டு கிளாலிப் படுகொலைகள்
34. 1993ம் ஆண்டு யாகப்பர் தேவாலயப் படுகொலைகள்
35. 1995ம் ஆண்டு நவாலி தேவாலயப் படுகொலைகள்
36. 1995ம் ஆண்டு நாகர்கோவில் படுகொலைகள்
37. 1996ம் ஆண்டு குமரபுரம் படுகொலைகள்
38. 1996ம் ஆண்டு நாச்சிக்குடாப் படுகொலைகள்
39. 1998ம் ஆண்டு சவுக்கடிப் படுகொலைகள்
40. 1998ம் ஆண்டு களுத்துறை சிறைப் படுகொலைகள்
41. 1999ம் ஆண்டு புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலைகள்
42. 1999ம் ஆண்டு மன்னார் மடுமாதா தேவாலயப் படுகொலைகள்
38. 1996ம் ஆண்டு நாச்சிக்குடாப் படுகொலைகள்
39. 1998ம் ஆண்டு சவுக்கடிப் படுகொலைகள்

38. 1996ம் ஆண்டு நாச்சிக்குடாப் படுகொலைகள்
39. 1998ம் ஆண்டு சவுக்கடிப் படுகொலைகள்
40. 1998ம் ஆண்டு களுத்துறை சிறைப் படுகொலைகள்
41. 1999ம் ஆண்டு புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலைகள்
42. 1999ம் ஆண்டு மன்னார் மடுமாதா தேவாலயப் படுகொலைகள்
43. 2000ம் ஆண்டு பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்புமுகாம் படுகொலைகள்
44. 2000ம் ஆண்டு மிருசுவில் படுகொலைகள்
45. 1997ம் ஆண்டு வவுனிக்குளப் படுகொலைகள்
46. 1998ம் ஆண்டு சுதந்திரபுரம் படுகொலைகள்

# இனப்படுகொலைகள்

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில், ஒரு பலம் வாய்ந்த இனம் ஒரு பலம் குறைந்த இனத்தை நசுக்கும்போதுதான் அங்கு விடுதலைப் போராட்டங்கள் கருக்கொண்டன. அதாவது ஒடுக்கப்படும் இனம் தனது சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதம் ஏந்தி போராட்டம் நடாத்தும்போது அம் மக்களை மேலும் கொன்று குவிப்பதிலும் அவர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க முற்படுவதும் பலம் வாய்ந்த இனத்தின் தீவிரமான செயற்பாடாகும். ஆனால் இவற்றின் மத்தியிலும் ஒடுக்கப்படும் இனம் போராடி வெற்றி பெற்றதே உலக வரலாறு.

இந்தவகையில் சிறுபான்மை ஈழத்தமிழினம் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் கிடைத்த காலம் தொட்டு இன்று வரை ஒரு இனப்பேரழிவை எதிர்நோக்கி நிற்கின்றது. சிறிலங்காவின் பயங்கரவாதக் கருவிய-ான சிங்கள இராணுவம் தமிழ் இனத்தை ஈவிரக்கமின்றிக் கொன்றுகுவித்து வெறியாட்டம் ஆடிவந்துள்ளது. இந்த இனவாத துவேசத்தை சிங்கள அரசியலில் வேரூன்றச் செய்ததில் பேரினவாத பௌத்த பிக்குகளுக்குப் பெரும் பங்குண்டு. இவர்களாலேயே ஆரம்பத்தில் இருந்து தொகுக்கப்பட்ட காட்டுமிராண்டிச் சித்தாந்தம் என்னவென்றால், பௌத்த மதத்தை தமிழர்களிடமிருந்து காப்பாற்ற தமிழர்களை அழித்தாகவேண்டும் என்பதாகும்.

இதன் விளைவுகள்தான் 1956ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது இனக்கலவரம். இதன்போது குழந்தைகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதனைத்தொடர்ந்து 1958ம் ஆண்டு பண்டாரநாயக்காவாலும் பேரினவாத பௌத்த பிக்குகளாலும் பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதோடு சிங்கள ஸ்ரீ கொண்டுவரப்பட்டது. இதனை தமிழர்கள் எதிர்க்க இரண்டாவது இனக்கலவரம் தொடங்கியது. இதன்போது தமிழர்களின் கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டதுடன் பல தமிழர்கள் உயிருடன் எரித்தும், வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர். இக்கலவரத்தைத் தொடர்ந்தே தமிழர்களுக்கான தாயகம் வடக்கு கிழக்கு தேவை என்பதை தமிழர்கள் உணர்ந்தார்கள்.

ஆனாலும் இவ்வாறாக பல இனக்கலவரம் நடந்தாலும் 1983ம் ஆண்டு ஜூலை கலவரத்தில் தமிழர்கள் ஒழிப்புத்திட்டம் ஒரு பயங்கரமான புதுவேகத்தைப் பெற்று உலகையே அதிரவைக்கும் அளவிற்கு உச்சக்கட்டத்தை அடைந்தது. இத்தமிழர் ஒழிப்புத்திட்டத்தில் சிங்கள இராணுவமும் பொலிசாரும் பகிரங்கமாக பெருந்தொகையான அப்பாவித் தமிழர்களை கொடூரமாகக் கொன்று குவிக்கத்தொடங்கினர். அதாவது இச்செயற்பாடு சிறிலங்கா பேரினவாத அரசின் நட்பு நாடுகளின் உதவியோடும், ஆலோசனைப்படியும் மேற்கொள்ளப்பட்டு இன்றும் தொடர்கின்றது.

1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு, தமிழர்களைப் பாதுகாப்பதற்கென்று சொல்லிக்கொண்டு அமைதிப்படையாக வந்த இந்தியப்படை புலிகள்மீது யுத்தத்தை தொடங்கினார்கள். இதனைத் தொடர்ந்து பெருந்தொகையான பெண்களை பாலியல்வல்லுறவுக்குள்ளாக்கியும் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என்றுபாராது ஆயிரக்கணக்கில் தமிழ்மக்களை கொன்றுகுவித்து, பல ஆயிரம் உடமைகளை சீரழித்து 1989களில் இந்தியப்படை வெளியேறியது.

www.padippakam.com



இதனைத் தொடர்ந்து இரண்டாவது ஈழப்போர் முனைப்புப்பெற. சிறிலங்கா பேரினவாத அரசின் அடக்குமுறை மேலும் முனைப்புப்பெற்றது. இதன்போது பெருந்தொகையான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பலமக்கள் இடம்பெயர்ந்தனர். தமிழர்களின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டன. இதன் பின் சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடந்து இப்பேச்சுவார்த்தை முறிவடைந்து மூன்றாது ஈழப்போர் தொடங்கியது. இதில் பெருந்தொகையான தமிழர்கள் கிராமங்கள், கோவில்கள், தேவாலயங்கள், சந்தைகள், பள்ளிகள், சிறைகள், கடல் என்பவற்றில் வைத்து குண்டுவீச்சு விமானம்மூலம் தாக்கப்பட்டனர். உயிரோடு எரிக்கப்பட்டனர். உயிரோடு குண்டுவைத்து தாக்கி அழிக்கப்பட்டனர். கண்ணில் பட்ட இடங்களிலெல்லாம் துடிக்கத் துடிக்க சுட்டுக் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல்வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். இவ்வாறாக சிறுபான்மை தமிழினம் சிறிலங்கா அரசின் பௌத்த பேரினவாத அடக்குமுறையை சந்தித்து வந்துள்ளது.

# 1956ம் ஆண்டு இனப்படுகொலைகள்

1956ம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்றால் 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் மொழிச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவேன் என்று பண்டாரநாயக்கா சூளுரைத்தார். அதன்படி 1956 ஏப்பிரலில் நடைபெற்ற தேர்தலில் பண்டாரநாயக்கா வெற்றியீட்டினார். இதனால் சிங்களம் மட்டம் என்ற முகத்துடன் பண்டாரநாயக்கா பதியேற்றார். இதிலிருந்து இனப்பிரச்சனை வடிவம் விஸ்வரூபம் எடுத்தது. தனிச்சிங்களச் சட்டம் நிறைவேறிய நாளன்று தமிழரசுக் கட்சி அன்றய நாடாளுமன்றத்துக்கு முன்பாக காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தது. இதனை அடக்குவதற்கு சிங்களக் காடையர்களை அரசு ஏவிவிட்டது. அங்கே கூடியிருந்த தமிழர்கள் மீது வன்முறைப் பிரயோகம் செய்தது. பலரைத் தூக்கி நாடாளுமன்றத்துக்கு அண்மையில் உள்ள ஷபெய்ரா; ஏரியில் போட்டனர். தமிழர்கள் சிங்கள வெறியர்களால் தாக்கப்பட்டதை நாடாளுமன்றத்தின் மேல்மாடியில் இருந்து பண்டாரநாயக்கா பார்த்துக்கொண்டிருந்தார். அதுமட்டுமல்லாமல் அவர் இச்சம்பவம் பற்றிக் குறிப்பிடும்போது 'சத்தியாக்கிரகிகள் எதனை விரம்பினார்களோ அதனை எனது மக்கள் அவர்களுக்குக் கொடுத்தார்கள் என்று அகம்பாவத்துடன் கூறினார்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து கொழும்பில் இனக்கலவரம் ஆரம்பித்தது. வீதிகளிலும், பேருந்துகளிலும், கண்ட இடங்களிலும் தமிழர்கள் தாக்கப்பட்டனர். இக்கலவரம் கிழக்கு மாகாண கல்லோயா, அம்பாறை பகுதிகளிலும் பரவியது. தமிழ்ப் பகுதிகளில் குடியேறிய சிங்களவர்கள் அப்பகுதி தமிழர்களைத் தாக்கினர். இப்படுகொலையில் பெண்கள், குழந்தைகள் உட்பட 150 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இக்காலப்பகுதியில் நடந்த கொடூரமான சம்பவங்களில் 25ம் திகதி நள்ளிரவில் இலங்கை வரலாற்றில் மிகவும் கொடூரமான குற்றங்களிலொன்று இளைக்கப்பட்டது. பொலநறுவை கரும்புத் தோட்ட தமிழ்த் தொழிலாளிகள் சிங்களக் குண்டர்கள் வருவதைக்கண்டு கரும்புத் தோட்டத்தினுள் ஒழிந்து கொண்டனர். சிங்களக் குண்டர்கள் தோட்டத்திற்கு நெருப்பு வைத்தனர். அலறியடித்துக்கொண்டு வெளியே வந்த குழந்தைகள், பெண்கள், ஆண்கள் அனைவரையும் வாள்களாலும் அரிவாள்களாலும் வெட்டிக் கொன்றனர்.

ஹேரிங்குரக்கொடவில் உள்ள அரசாங்க பண்ணையில் வேலைசெய்த தமிழர்களை சிங்களக்குண்டர்கள் வெட்டிக் கொன்றனர். இதனால் பயமும் பீதியும் அடைந்த ஒரு பெண் தன் குழந்தையை அரவணைத்தபடி கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டாள். எட்டுமாத கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து இரத்தம் வெளியேறி சாகச்செய்தனர். இந்துக் கோயிலுக்குள் சென்று அங்கு பூசை செய்துகொண்டிருந்த குருக்களை இழுத்துவந்து கோயிலுக்கு முன்னால் வெட்டிக் கொன்றனர். சிங்களக் காடையர்களின் அட்டகாசங்கள் தொடர்ந்தன. இதில் தமிழர்களின் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டன.

# 1958ம் ஆண்டு படுகொலைகள்

1957ம் ஆண்டு ஜூலை 26ம் திகதி கைச்சாத்திடப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து 1958 ஏப்பிரல் 8ம் திகதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பௌத்த பிக்குகளின் கிளர்ச்சியைத் தொடர்ந்து ஒருதலைப்பட்சமாக ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையில் எதிர்ப்புணர்வுகள் அதிகரித்தன. சிங்கள ஸ்ரீ எதிர்ப்பை தமிழரசுக் கட்சியினர் தொடர்ந்தனர். அதேவேளை கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் தமிழ்



படிப்பகம்

எழுத்துக்களை தார் பூசி அழிக்கும் வேலையும் தொடர்ந்தது. பௌத்த பிக்குகளே இதற்கு தலைமைதாங்கினர். தமிழருக்கு எதிராக சிங்களவரை கிழர்ந்து எழுமாறு தூண்டினர்.

இதனையடுத்து மீண்டும் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்க தமிழரசுக்கட்சி முடிவெடுத்தது. இதனைத் தொடர்ந்து நாட்டில் இரண்டாவது இனக்கலவரம் வெடித்தது. இதனைவிட இதேதினத்தன்று தனிப்பட்ட பகைமை காரணமாக சிங்களவரான முன்னாள் நுவரெலியா மேயர் களுவாஞ்சிக்குடியில் கொல்லப்பட்டார். இவர் கொல்லப்பட்ட செய்தி பலதடவைகள் வேண்டுமென்றே சிங்கள வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழர்கள்மேல் தாக்குதல்கள் தொடங்கப்பட்டன.

தொடர்வண்டிகளையும் பேருந்துகளையும் சிங்கள வெறியர்கள் நிறுத்தி அவற்றில் பயணம் செய்துகொண்டிருந்த தமிழர்களை வெட்டிக்கொன்றனர். தமிழர் வீடுகளையும் அதிலிருந்த தமிழர்களையும் உயி-ரோடு எரித்தனர். தமிழ்ப்பெண்கள் பாலியல் பலாத்காரம்செய்யப்பட்டனர். கொழும்பு, மட்டக்களப்பு, பொலநறுவை, பதுளை, குருநாகல், திருகோணமலை மாவட்டங்களில் இனக்கலவரம் மிகவும் கொடூரமாக இருந்தது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதாக கணக்கிடப்பட்டது. தமிழரின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. இப்படுகொலையினால் இலங்கைத் தமிழரின் சரித்திரம் இரத்தத்தால் எழுதப்பட்ட ஒன்றாகிவிட்டது.

# 1974ம் ஆண்டு தமிழாராட்சி மாநாட்டுப் படுகொலைகள்

1974ம் ஆண்டு ஜனவரி 3ம் திகதி தொடங்கி 10ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அன்றய சிறிலங்கா அரசாங்கம் அதனை விரும்பவில்லை. யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை தடுப்பதற்கு பலவகையிலும் முட்டுக்கடடைகளைப்போட்டது. இருந்தாலும் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடாத்த அமைப்பாளர்களும் மக்களும் உத்வேகத்துடன் செயற்பட்டனர். சிங்கள அரசாங்கத்தால் அதற்குமேல் தடுக்கமுடியவில்லை.

மகாநாட்டுவிழா 3ம் திகதி ஆரம்பமாகி 10ம்திகதி வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணம் கோலாகலமாகக் காட்சியளித்தது. இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மகாநாடும் இதுபோல சிறப்பாகவும், உற்சாகமாகவும், உணர்வோடும் நடத்தப்படவில்லையென யாழ் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது.

விழாவின் இறுதிநாள் நிகழ்வாக தமிழின் பெருமையையும் பண்பாட்டின் பெருமையையும் அறிஞர்கள் பேசினர். பல இலட்சம் மக்கள் உணர்வோடு கேட்டுக்கொண்டிருந்தனர். இறுதியாக தமிழக பேராசிரியர் நைனாமுகமது பேசிக்கொண்டிருக்கும்போதுதான் கொடிய படுகொலைச் சம்பவம் நடைபெற்றது. சிங்களவரான யாழ் பொலிஸ்மா அதிபர் சந்திரசேகர தலைமையிலான பொலிஸ் படையினர் மக்களுக்குள் நுளைந்து, மக்களைத் தாக்கினர், துப்பாக்கிச்சூடுகளையும் மேற்கொண்டனர். ஆனந்தமாக இருந்த மக்கள் சிதறி ஓடினர். தாக்குதலினால் 9பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அரங்குகள் எல்லாம் நாசமாக்கப்பட்டன. ஆனந்தவிழாவாக இருந்து இறுதியில் துயரவிழாவாக மாறியது.

# 1977ம் ஆண்டு இனப்படுகொலைகள்

சிங்கள விசமிகளால் திட்டமிட்டுப் பரப்பிய பொய் வதந்திகளால், இனவெறிக்காடையர்கள் அதனைச் சாட்டாக வைத்து தமிழர்கள்மீது வன்செயல்களில் ஈடுபட்டனர். தொடர்ந்து நாடெங்கும் வாழும் தமிழ்மக்களுக்கு எதிரான இனக்கலவரமாக வெடித்தது.

1977 ஓகஸ்ட் 27ம் திகதி யாழ்நகரில் பஸ்நிலையத்துக்கு கிழக்குப்பக்கமாக இருந்த 27 கடைகளுக்கு தீ வைக்கப்பட்டது. இலங்கை எங்கும் தமிழ் மக்களுக்கெதிராக நடந்த வன்முறையில் 300 பேருக்குமேற்பட்டோர் உயிரிழந்தும், 10 000 பேருக்குமேல் காயமடைந்தும், சொத்துக்களை இழந்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களள் 80 000 பேர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கள வெறியர்கள் தமிழர்கள் மீது கொலைவெறியாட்டம் நடாத்தியபோது, அதனைக் கண்டிக்காமல் வானொலியுரையில் ஷபோர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்; என்று அப்போதய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அறைகூவி தமிழர்கள் கொல்லப்படக் காரணமாய் இருந்தார்.

# 1981ம் ஆண்டு யாழ் நூலக எரிப்பு

1981 மே 31ம் திகதி இரவு சிங்களக்காடையர்களும் பொலிசாரும் யாழ் நூலகத்திற்குள் நுளைந்து, கிடைத்தற்கரிய 97 000ற்கும் மேற்பட்ட நூல்களையும் தளபாடங்களையும் எரி்ட்டினர். அங்கிருந்த அத்தனை நூல்களும் தளபாடங்களும் எரிந்து சாம்பலாகின. இச்செயலானது இருபதாம் நூற்றாண்டின் அருவருப்பிற்குரிய அட்டூழியம் என்பதை நீதியுள்ள மனிதர்கள் யாவருமே ஏற்றுக்கொள்வர்.

# 1981ம் ஆண்டு செட்டிகுளப் படுகொலைகள்

மதவாச்சிக்கும் மன்னாருக்கும் இடையில் சிங்களக்கிராமங்களால் சூழப்பட்ட தமிழர் பிரதேசம்தான் செட்டிகுளம். 81ம் ஆண்டில் ஒரு நாள் ஆண் பெண் வித்தியாசம் இன்றி 56 தமிழர்களை, சிங்களக்காடையர்கள் பிடித்துச்சென்றனர். பின்னர் இவர்கள் அனைவரும் ஒரு சிங்களக் கிராமத்தின் காட்டோரத்தில் உயிருடன் புல்டோசரால் ஏற்றப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

# 1983ம் ஆண்டு இனப்படுகொலைகள்

83ம் ஆண்டு ஜூலை 23ம் திகதி விடுதலைப் புலிகள் நடத்தியதாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து சிங்களக்காடையர்களின் ஆத்திரம் தமிழ்மக்கள்மீது திரும்பியது. இது தமிழர்கள் மீதான மிகப்பெரும் இனக்கலவரமாக மாற்றங்கொண்டது. வீடுகள், கடைகள், வாகனங்களுடன் சேர்ந்து தமிழர்களின் உயிர்களும் நாசம்செய்யப்பட்டன. 25ம் 27ம் திகதிகளில் வெலிக்கடைச்சிறையில் 53 தமிழ்க் கைதிகள் சிங்களவர்களால் வெட்டியும் அடித்தும் கொலைசெய்யப்பட்டனர். இப்படியாக தமிழர்களுக்கெதிரான இனக்கலவரம் காட்டுத்தீபோல் பரவியது. தென் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். கப்பல்களில் ஏறி வடக்கு கிழக்கு பிரதேசங்களை வந்தடைந்தனர்.

# 1984ம் ஆண்டு ஒதியமலைப் படுகொலைகள்

மணலாறு மாவட்டத்தில் உள்ள ஒரு அழகான ஊர்தான் ஒதியமலைக் கிராமம். 84ம் ஆண்டு மார்கழி முதலாம் திகதி இக்கிராமத்துக்கு வந்த சிங்கள இராணுவத்தினர், கூட்டம் ஒன்றிற்கு வருமாறு 30ற்கும் மேறபட்ட ஆண்களை அழைத்துச்சென்று அவர்களை வரிசையில் நிற்கவைத்து மிக நிதானமாக ஒவ்வொருவராக துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்தனர்.

# 1985ம் ஆண்டு குமுதினிப் படகு படுகொலைகள்

நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் படகுச்சேவையில் ஈடுபட்ட படகுகளில் ஒன்றுதான் குமுதினிப்படகு. 85ம் ஆண்டு மே 15ம் திகதி வழமைபோல் 60ற்கும் மேற்பட்ட பிரயாணிகளுடன் சேவையிலீடுபட்டிருந்த வேளையில், நயினாதீவிலிருந்து படகுகளில் வந்த அரச படையினர் குமுதினிப்படகை நெருங்கி அதிலிருந்த மக்களை கத்தி, வாள், கோடரி போன்ற ஆயுதங்களால் வெட்டிக் கொலைசெய்தனர்.

# 1985ம் ஆண்டு அரியாலையில் வெறியாட்டம்

நாவற்குழி இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவ வெறியர்கள் அரியாலை கிராமத்துள் புகுந்து அங்கிருந்த 60ற்கும்மேற்பட்ட மக்களை காட்டுமிராண்டித்தனமாக படுகொலை செய்து, 100க்கு மேற்பட்ட வீடுகளையும் எரித்து நாசமாக்கினர்.

# 1985ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் ரணகளம்

மே 9ம் நாள் பெண்கள் குழந்தைகள் உட்பட 50 பேர் நூல்நிலையத்தற்குள் பலாத்காரமாக அடைக்கப்பட்டு சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை வைத்து கட்டிடம் தகர்க்கப்பட்போது அனைவரும் சின்னாபின்னமாகி மாண்டனர். மேலும் 25பேருக்கு மேற்பட்டவர்களை தெருவில் நிறுத்தி சுட்டுக்கொன்றனர்.

# 1986ம் ஆண்டு உடும்பன்குளம் படுகொலைகள்

86ம் ஆண்டு மாசி 19ம் திகதி, அம்பாறை மாவட்டம் உடும்பன்குளம் வயல்களில் வேலையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளை சுற்றிவளைத்த இராணுவத்தினர் 60பதுக்கும் மேற்பட்டவர்களைப் படுகொலை செய்தனர். பலர் படுகாய ங்குளுக்குள்ளானார்கள்.

# 1987ம் ஆண்டு திருமலை பட்டித்திடல் படுகொலை

சித்திரை மாதம் 26ம் நாள் பட்டித்திடல் கிராமத்துக்குள் புகுந்த சிங்களக் காடையர்கள் ஒரு கூட்டுக்குடும்பத்தைச்சேர்ந்த குழந்தைகள் பெண்கள் உட்உட 16 பேரை கத்தி, வாள்களால் வெட்டி படுகொலை செய்தனர்.

# 1987ம் ஆண்டு பிரம்படிப் படுகொலை

1987 ஒக்ரோபர் 10ம் திகதி இந்திய புலிகள் யுத்தம் ஆரம்பமான நாளன்று இந்தியப்படை தமிழ்மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டது. இதன்போது பிரம்படிப்பகுதியில் 40ற்கும் மேற்பட்ட மக்களை இந்தியப் படையினர் படுகொலை செய்தனர்.

# 1987ம் ஆண்டு அராலித்துறை படுகொலை

ஒக்ரோபர் 22ம் திகதி அராலித்துறையில் குவிந்து நின்ற பயணிகள்மீது இந்திய ஹெலிகொப்ரர் ஒன்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் 35 பயணிகள் மிகவும் கொடூரமாக கொல்லப்பட்டனர்.

# 1987ம் ஆண்டு கொக்குவில் இந்துக்கல்லூரி படுகொலை

ஒக்ரோபர் 24ம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரியில் தஞ்சமடைந்திருந்த அகதிகள்மீது இந்திய இராணுவத்தினர் பீரங்கித்தாக்குதல் நடத்தியதில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 80 பேர் காயமடைந்தனர்.

# 1987ம் ஆண்டு அளவெட்டி படுகொலை

ஒக்ரோபர் 26ம் திகதி அளவெட்டியில் இந்து ஆசிரமம்மீது இந்திய இராணுவத்தினர் நடத்திய ஹெலிகொப்ரர் தாக்குதலில் 14 தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் 12பேர் படுகாயமடைந்தனர்.

# 1987ம் ஆண்டு சாவகச்சேரி சந்தைப் படுகொலை

ஒக்ரோபர் 27ம் திகதியன்று சாவச்சேரி சந்தையில் மக்கள் குழுமிநின்றவேளை இந்திய ஹெலிகொப்ரர் ஒன்று ரொக்கடடுக்களை ஏவித் தாக்குதல் நடத்திய கோரச்சம்பவத்தில் 68 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டு 175 பேர் படுகாயமடைந்தனர்.

1990 ஒக்ரோபர் 9ம் திகதி சாவகச்சேரியில் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கலிபர் தாக்குதலில் 10 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 15 பேருக்குமேல் படுகாயமடைந்தனர்.

# 1987ம் ஆண்டு யாழ் இந்துக்கல்லூரி படுகொலை

87 ஒக்ரோபர் 28ம் நாள் இந்து மகளிர் கல்லூரி அகதிமுகாம்மீது இந்திய இராணுவத்தினர் நடத்திய பீரங்கித்தாக்குதலில் 3குழந்தைகள் கொல்லப்பட்டதுடன் 8 பேர் காயமடைந்தனர்.

# 1987ம் ஆண்டு மூளாய் வைத்தியசாலை படுகொலை

நவம்பர் 5ம் திகதி இந்திய இராணுவம் மேற்கொண்ட பீரங்கித்தாக்குதலில் வைத்தியசாலை பலத்த சேதத்துக்குள்ளாகியது. 5 நோயாளிகள் கொல்லப்பட்டனர்.

# 1987ம் ஆண்டு நெடுங்கேணி படுகொலை

நவம்பர் 11ம் திகதி மக்கள் குடியிருப்புக்கள் மீது இந்திய உலங்குவானூர்திகள் நடத்திய ஏவுகணைத்தாக்குதலில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டு 25 பேர் காயமடைந்தனர்.

# 1987ம் ஆண்டு யாழ்ப்பாண மருத்துவமனை படுகொலை

87ம் ஆண்டு தீபாவளி தினத்தன்று மருத்துவமனைக்குள் புகுந்த இந்திய இராணுவத்தினரால் 4 மருத்துவர்கள், தாதிமார், ஊழியர்கள் என 22 பேரை சுட்டுப் படுகொலை செய்தனர்.

# 1989ம் ஆண்டு வல்வைப் படுகொலைகள்

இந்திய அமைதிப்படையினரால் ஆவணி 2ம், 3ம், 4ம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களில் குழந்தைகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என 63 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

# 1990ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகள்

19.06..90 அன்று ஊற்சேனையில் 9 தமிழர்கள் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.

22.06.90 அன்று காரைதீவுக் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 14 பேர் உட்பட 30 தமிழ்மக்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர், 4 பேரை வெட்டிக்கொன்று கிணற்றில் போட்டனர்.

இதே தினத்தில் சம்மாந்துறையில் 30ற்கும் மேற்பட்ட தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர், 25.06.90 அன்று 85 தமிழ்மக்களை வெட்டிக் கொலைசெய்தனர், 01.07.90 அன்று 57 தமிழ்மக்களை சிங்களக்காடையர்கள் வெட்டிக்கொன்றனர்.

14.07.90 அன்று மாடறுத்தமுனை என்ற கிராமத்தில் சிங்களப்படையினரால் கைதுசெய்யப்பட்ட 28 தமிழர்கள் கொலைசெய்யப்பட்டு எரிக்கப்பட்டனர்.

17.07.90 அன்று மட்டக்களப்பு தொலைத்தொடர்புத் திணைக்களத்துக்கு முன்னால் 9 தமிழர்களின் உடல்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்டன.

19.07.90 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கருகிய நிலையில் இருந்த 35 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

12.07.91 அன்று கிண்ணியடியில் சிறிலங்கா இராணுவத்தினரால் 12 தமிர்கள் கொல்லப்பட்டனர்.

# 1990ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகள்

13.06.90 அன்று அம்பாறையிலுள்ள ஒரு பிள்ளையார் கோயிலை குண்டுவைத்து தகர்த்த சிங்களப் படையினர் அக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதியிலும், அம்பாறை மத்திய முகாமைச் சுற்றியுள்ள பகுதியிலும் 100ற்றுக்கு மேற்பட்ட தமிழர்களை வெட்டிக் கொலைசெய்தனர்.

26.06.90இல் கல்முனையில் முஸ்லிம் காடையர்களும் சிங்களக்காடையர்களும் சேர்ந்து 75 தமிழ்மக்களை உயிருடன் ரயர் போட்டு எரித்துக் கொன்றனர்.

30.06.90 அன்று வீரமுனைக்கிராமத்தில் 84 தமிழ் இளைஞர்களை கைதுசெய்து முகாமுக்கு கொண்டுசென்று சுட்டுக்கொன்றனர்.

10.07.90 அன்று கல்முனையில் கறுப்பு உடையணிந்த சிங்களக் கொலைக்கும்பலினாலும் முஸ்லிம் காடையர்களினாலும் 31 தமிழர்கள் வெட்டிக் கொலைசெய்த பின் தீ வைத்து எரிக்கப்பட்டனர்.

05.08.90 சாகமம் எனும் இடத்தில் இருவர் விசேட அதிரடிப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

04.08.90 ஆலையடிவேம்பைச்சேர்ந்த 3 பேர் அக்கரைப்பற்றில் சிங்களக் காவல்துறையினரால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

06.08.90 சங்கமாள்கண்டியில் 19 தமிழர்கள் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

07.08.90 இராக்கேணி கிராமத்தில் 47 தமிழ்மக்கள் முஸ்லிம் கும்பலால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டனர்.

08.08.90 அலிகம்பையில் 10 தமிழர்கள் கொல்லப்பட்டு, 5 பெண்கள் பாலியல்வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டனர்.

11.08.90 சம்மாந்துறை அகதிமுகாமில் வைத்து 37 தமிழ்மக்கள் முஸ்லிம்கும்பலால் வெட்டிக்கொல்லப்பட்னர்.

12.08.90 அக்கரைப்பற்றில் இருவர் அதிரடிப்படையினரால் சுட்டு எரிக்கப்பட்டனர்.

13.08.90 வீரமுனை அகதிமுகாமில் பல தமிழர்கள் முஸ்லிம்களால் வெட்டிக்கொல்கப்பட்டனர்.

14.08.90 அக்கரைப்பற்றில் வீசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட 46 தமிழர்களின் நிலை என்னவென்று இதுவரை யாருக்கும் தெரியாது.

15.08.90 கோமாரியில் 8 தமிழர்கள் வீசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
17.08.90 திருக்கோயிலில் வீசேட அதிரடிப்படையினரால் 2 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

18.08.90 கண்ணகி கிராமத்தில் 3 தமிழர்கள் வீசேட அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டனர்.

19.08.90 13ம்கிராமத்தில் விமானக்குண்டுவீச்சால் 13 தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர்.

22.08.90 கோணாவிலில் கைதுசெய்யப்பட்ட 40 தமிழ்மக்கள் குறித்த விபரம் இல்லை.

23.08.90 தம்பிலுவில் திருக்கோயிலில் அகதிகளாக இருந்த 9 தமிழர்கள் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

24.08.90 திருக்கோயிலில் 8 தமிழ்மக்கள் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்1990ம் ஆண்டு ஜூன் ஜூலை மாதங்களில் அரச படையினரால் 2509 தமிழர்கள் படுகொலை, 4736 வீடுகள் சேதம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின்போது 27 பெண்களும் 779 ஆண்களும் கொல்லப்பட்டதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் 1664 ஆண்களும் 39 பெண்களும் கொல்லப்பட்டனர்.

இவ்விரு மாவட்டங்களிலும் 5000ற்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விமானத்தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் விமானத்தாக்குதலில் 36 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இரு மாவட்டங்களிலும் விமானத்தாக்குதலால் 52 பேர் காயமடைந்தனர்.

சேதமாக்கப்பட்ட, எரிக்கப்பட்ட வீடுகள் - மட்டக்களப்பு - 1697, அம்பாறை - 2839

விமானத்தாக்குதலால் மட்டக்களப்பில் 7 வீடுகளும் அம்பாறையில் 12 வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டன.

# 1990ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகள்

07.05.90 கந்தளாயில் 24 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

10.05.90 கிண்ணியா மற்றும் வீரமாநகரில் 35 தமிழர்கள் வெட்டிக்கொலைசெய்யப்பட்டனர்.

15.06.90 ஜெயபுரம் என்ற இடத்தில் பேருந்தில் சென்றுகொண்டிருந்த 13 தமிழர்களை சிங்கள இராணுவத்தினர் வழிமறித்து கொலை செய்தனர்.

16.06.90 திருகோணமலை நகர்ப்பகுதியில் 100ற்கும் மேற்பட்ட தமிழ்மக்களை சிங்கள இராணுவத்தினரும் காடையர்களும் சேர்ந்து வெட்டிக் கொலைசெய்தனர்.

18.06.90 கப்பற்துறை, வெள்ளைமணல், கம்பர்மலை ஆகிய ஊர்களின்மீது சிங்கள முப்படைகளும் சேர்ந்து நிகழ்த்திய தாக்குதலில் 40ற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர்.
சீனன்குடாவிலும் 40 தமிழர்கள் சிங்களக் காடையர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

23.06.90 3ம்கட்டை, 6ம்கட்டை, சாம்பல்தீவு ஆகிய ஊர்களில் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழர்களின் சடலங்கள்

கண்டுபிடிக்கப்பட்டன. நிலாவெளியில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்தவர்கள்மீது வான்படையின் குண்டுவீச்சுத் தாக்குதலில் 35 அகதிகள் படுகொலைசெய்யப்பட்டனர்.

05.07.90 மூதூர் பிரதேசத்தில் வான்படையின் தாக்குதலினால் 30ற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 40 பேர் படுகா்யமடைந்தனர்.

06.07.90 மட்டக்குளி, நல்லூர் ஆகிய இடங்களில் சிங்கள இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் 30 தமிழர்களின் கழுத்தை வெட்டிக்கொன்றனர்.

# 1990ம் ஆண்டு வந்தாறுமூலை படுகொலை

05.09.90 கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்த அகதிகளில் 158 பேரை கைதுசெய்து கொண்டுசென்று சித்திரவதையின் பின் படுகொலை செய்யப்பட்டனர்.

# 1990ம் ஆண்டு சத்துருக்கொண்டான் படுகொலை

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமம் 11.09.90 அன்று இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு வீடுகளில் இருந்தவர்களை வெளியே வருமாறு அழைத்து. வெளியே வந்தவர்களில் 150 தமிழ்மக்களை படுகொலை செய்தனர்.

# 1990ம் ஆண்டு வீரமுனைப் படுகொலைகள்

அம்பாறை வீரமுனை கிராமத்தில் 17.08.90 அன்று சிங்கள, முஸ்லிம் ஊர்காவற்படையினர் 97 அப்பாவித் தமிழர்களை படுகொலைசெய்தும் 120ற்கு மேற்பட்வர்களைக் காயப்படுத்தியும் அவர்களது வீடுகள், கடைகள் எல்லாவற்றையும் கொள்ளையடித்தும் எரித்தும்விட்டனர்.

# 1991ம் ஆண்டு கொக்கட்டிச்சோலை படுகொலைகள்

12.06.91 அன்று கொக்கட்டிச்சோலை கிராமத்துள் புகுந்த சிங்களக் காடையர்கள், தமிழர்களை கண்மூடித்தனமாகத் தாக்கினர். இதில் 172 ரோ் படுகொலைசெய்யப்பட்டனர். பல100 பேர் படுகாயமடைந்தனர். வீடுகள், கடைகள் நாசமாக்கப்பட்டன. இது கொக்கட்டிச்சோலையில் நடந்த இரண்டாவது படுகொலைச் சம்பவமாகும்..
1987ம் ஆண்டு செரண்டிப் இறால் பண்ணையில் வேலை செய்த 200ற்கும் மேற்பட்ட தமிழர்ளை சிங்களக்காடையர்கள் படுகொலைசெய்தனர்.

# 1993ம் ஆண்டு கிளாலிப் படுகொலைகள்

02.01.93 கிளாலி கடல்நீரேரியில் பயணித்த 4 படகுகளை கடற்படையினர் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் 35 பயணிகள் பலியாகினர். இப்படியாக ஆரம்பித்த பயணிகள் மீதான தாக்குதல்கள் 93 டிசம்பர் வரையிலும் 100ற்றுக்கு மேற்பட்ட பயணிகளை பலியாக்கியது. பலரை படுகாயப்படுத்தியது.

# 1993ம் ஆண்டு யாகப்பர் தேவாலய படுகொலை

13.11.93 வான்படையின் சுப்பசொனிக் விமானம் யாழ் குருநகர் தேவாலயத்தின்மீது தாக்குதலை மேற்கொண்டது. தேவாலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 10 பேர் கொல்லப்பட்டார்கள். 25 பேருக்குமேல் காயமடைந்தார்கள். தேவாலயம் முற்றாகச் சேதமடைந்தது.

# 1995ம் ஆண்டு நவாலி தேவாலய படுகொலை

09.07.95 அன்று இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த தேவாலயத்தின்மீது வான்படைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது சிறுவர்கள். பெண்கள். வயோதிபர்கள் என 120 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 400ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். புனிதமான தேவாலயம் நாசமாக்கப்பட்டது.

# 1995ம் ஆண்டு நாகர்கோவில் படுகொலைகள்

22.09.95 அன்று வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பாடசாலைமீது நடத்திய அகோர குண்டுவீச்சில் 25 பாடசாலை மாணவர்கள் உட்பட 40ற்கு மேற்பட்ட மக்கள் உடல்சிதறிப் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தார்கள். பாட-சாலையும் அருகிலிருந்த வீடும் முற்றாகச் சேதமடைந்தன.

# 1996ம் ஆண்டு குமரபுரம் படுகொலை

12.02.96 அன்று மூதூர் குமரபுர கிராமத்துள் புகுந்த சிங்களக்காடையர்கள் வயது வேறுபாடின்றி அக்கிராமத்து மக்களை வெட்டிக்கொன்றார்கள். 30ற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும். 30க்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கு முள்ளானார்கள்.

# 1996ம் ஆண்டு நாச்சிக்குடா படுகொலைகள்

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புகள்மீது 16.03.96 அன்று விமானப்படை உலங்குவானூர்தி நடத்திய அகோர தாக்குதலினால் 16 பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டு. 60 பேர் படுகாயமடைந்தனர்.

# 1997ம் ஆண்டு வவுனிக்குளப் படுகொலைகள்

15.08.97 அன்று வவுனிக்குளம் கிறிஸ்தவ தேவாலயம்மீதான விமானப்படையின் தாக்குதலில் தமிழர்கள் பலியானார்கள். 25க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# 1998ம் ஆண்டு சுதந்திரபுரம் படுகொலைகள்

10.06.98 முல்லைத்தீவு சுதந்திரபுர கிராமத்துள் நுளைந்த கிபீர்விமானங்கள் அகோர குண்டுத்தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலின்போது அப்பாவிப் பொதுமக்கள் 23 பேருக்குமேல் பலியானார்கள். 46 பேருக்குமேல் படுகாயமடைந்தார்கள்.

# 1998ம் ஆண்டு சவுக்கடி படுகொலை

ஏறாவூர் சவுக்கடி கிராமத்துள் புகுந்த காடையர்களால் 20.10.98 அன்று கொலைவெறியாட்டம் நடத்தப்பட்டது. இதில் 31 தமிழ்மக்கள் பலியானார்கள்.

# 1998ம் ஆண்டு களுத்துறை சிறை படுகொலைகள்

12..12.1998 அன்று தம்மை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதமிருந்த தமிழ்க்கைதிகள்மீது சிங்களக்கைதிகள் மேற்கொண்ட காட்டுமிராண்டித் தாக்குதலில் 3 தமிழ்க்கைதிகள் படுகொலைசெய்யப்பட்டனர். 17பேருக்குமேல் படுகாயப்பட்டனர்.

# 2000ம் ஆண்டு பண்டாரவளை பிந்துநவெவ தடுப்புமுகாம் படுகொலை

25.10.2000 அன்று தமிழ் இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த முகாமிற்குள் புகுந்த காவலுக்கு நின்ற படையினரும் சிங்கள கிராமவாசிகளும் கத்தி, கோடரி, பொல்லுகளால் தமிழ்க்கைதிகளை வெட்டியும் அடித்தும் கொன்றனர். 29பேர் படுகொலைசெய்யப்பட்டனர். 16பேர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

# 2000ம் ஆண்டு மிருசுவில் படுகொலைகள்

யாழ் மாவட்ட மிருசுவில் பகுதியில் 19.12.200 அன்று தமது வீடுகளைப் பார்க்கச் சென்றவேளை இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு காணாமல்போன 8 பொதுமக்களும் 25.12.2000 அன்று புதைகுழியில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டனர்.

# பிரான்சில் ஈழத்தமிழர்களின் ஆரம்பகாலம் பற்றிய குறிப்புக்கள்

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழர்களின் தொன்மையான அறிவியல் சார்ந்த சொல்லாடல். பண்டைத் தமிழர் பெரும் கடலோடிகளாக கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்பது வரலாறு. பின்னர் போர் வீரர்களாகவும் ஆக்கிரமிப்பாளர்களாகவும் கடல் கடந்து சென்றார்கள். இவை நடந்து பல நூற்றாண்டுகளாக இருந்தாலும், பின்னர் அன்னிய - காலனித்துவ - ஆக்கிரமிப்பாளர்களால் கூலிகளாகவும், அரச நிர்வாகிகளாகவும் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஈழத் தமிழர் புலம்பெயர்வு இந்த காலனித்துவ காலத்தில் தான் ஆரம்பித்தது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் பர்மா (இன்றைய மியன்மார்), மலேசியா, ஜாவா, சுமாத்திரா தீவுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் வேலை செய்வதற்காக புலம்பெயர்ந்து சென்றனர். சென்றவர்களில் ஒருசிலர் சேவைக் காலம் முடிந்ததும் தமது குடும்பத்துடன் திரும்பினர். ஏனையோர் குடும்பங்களுடன் அந்தந்த நாடுகளிலேயே தங்கிவிட்டனர். இதைத் தவிர உயர் கல்வி கற்கும் நோக்கில், மேற்குலகம் நோக்கியும் அக்காலத்தில் ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். இவர்களில் பெரும்பாலானோர், தமது கல்வியை முடித்துக்கொண்டு நாடு திரும்பினர். ஒரு சிலர் தமது கல்வித் தகமை, அனுபவம், திறமைகேறப தொழில்களைப் பெற்றுக்கொண்டு அந்தந்த நாடுகளிலேயே தங்கினர். வேறு சிலர் ஏனைய பிரித்தானிய காலனித்துவ நாடுகளில் சென்று வேலை செய்தனர்.

பிரான்ஸ் நாட்டைப் பொறுத்தவரை ஈழத் தமிழர்களின் வருகை 1960களின் பிற்பகுதியிலிருந்து ஆரம்பித்தது எனலாம். இது இலங்கையில் மதசேவையாற்ற வந்த மேற்கத்தேய கத்தோலிக்க, கிறிஸ்தவ குருமார்களின் உதவியுடன் ஆரம்பித்தது எனலாம். பிரான்சிலிருந்து வந்து ஏழாலையில் பங்குக்குருவாக இருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பாதிரியார், வண பிதா. ஒன்றி ஜெஸ்லான் (Henri Gesland) என்பவர் ஏழாலையைச் சேர்ந்த திரு. நாயகம் ஜோசப் பிரான்சில் வந்து குடியேறுவதற்கு உதவி செய்திருந்தார்.

அக்காலத்தில் திரு. நாயகம் ஜோசப் கொழும்பில் இருந்து நீராவிக் கப்பல் மூலமாகவே பிரான்சை வந்தடைந்தார். தனது பயண அனுபவத்தை வீரகேசரிப் பத்திரிகையில் ஒரு தொடராக அவர் எழுதியிருந்தார். இவரைத் தொடர்ந்து இவரது குடும்ப அங்கத்தவர்கள் இங்கு வந்து சேர்ந்தனர். சமகாலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பல நெருக்கடி பல தமிழ் இளைஞர்களை இலங்கையைவிட்டு வெளியேற வைத்தது் இவர்களில் ஒருசாரார் கப்பல்களில் வேலைசெய்தவர்கள் வரும் வழியில் பிரான்சிலேயே தங்கி விட்டனர்.

அக்காலத்தில் அந்நிய செலவாணியைப் பெற்றுக்கொள்வது பெரும் கடினம். இதனால் ஒரு சிலர் தமக்குத் தெரிந்த வழிகளில் பணத்தை (அமெரிக்கன் டாலர்) ஒழுங்கு செய்து இந்தியா வந்து பின்னர் அங்கிருந்து தரை வழியாக பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்கி, முன்னைய யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளைக் கடந்து இத்தாலியை வந்தடைந்தனர். 70வதுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் நெருக்கடியால், ஐரோப்பிய நாடுகளில் குடியேற்ற வதிவிட அனுமதி வழங்குவதை 72ம் ஆண்டிலிருந்து நிறுத்திவிட்டனர். இதனால், 72ம் ஆண்டிற்கு பின்னர், பிரான்ஸ் நாட்டிற்கு வந்தவர்கள் உடனடியாக குடியேற்ற வதிவிட அனுமதி பெறுவது கடினமாக இருந்தது. ஒரு சிலர், மாணவர் வதிவிட அனுமதி பெற்று, கல்வியையும் கற்று வேலையும் செய்தனர். காலப்போக்கில் குடியேற்ற வதிவிட அனுமதியைப் பெற்றனர். வேறு சிலர், பெரும் தனவந்தர்களிடமும், தொழிலதிபர்களிடமும் கார்ச் சாரதிகளாகவும் வீடு பராமரிப்பவர்களாகவும் வேலை செய்து அவர்களின் தனிப்பட்ட செல்வாக்கின் ஊடாக வதிவிட அனுமதியைப் பெற்றனர். இன்னும் சிலர், மற்றவர்களின்உதவியுடன் எந்தவிதமான வதிவிட அனுமதிப் பத்திரமும் இன்றி சிறு தொழில் நிலையங்களில் வேலை செய்தனர்.

அந்தக் காலத்தில் வேலை செய்வதற்கு வதிவிட அனுமதியும் தொழில் செய்வதற்கான அனுமதியும் பெற்றிருத்தல் வேண்டும். இந்நிலை 1981ம் ஆண்டு சோசலிசக் கட்சி ஆட்சிக்கு வரும் வரை நிலைத்திருந்தது.

www.padippakam.com



1979 வரையிலும் பிரான்சில் வாழ்ந்து வந்த ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை நூற்றுக்கும் குறைவாகவே இருந்தது. 1979ம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பைத் தொடர்ந்து ஈரானில் வேலை செய்த ஈழத் தமிழர்களில் ஒரு பிரிவினர், ஐரோப்பா நோக்கி நகர்ந்தனர். இவர்களின் பிரதான தங்குமிடமாக பிரான்ஸ் அமைந்தது.

இலங்கை பொது நலவாய நாடுகளில் அங்கத்தவராக இருந்தபடியினால், விசா இன்றி பிரான்சிற்கு வருவது இலகுவாக இருந்தது. இருந்தாலும் போதிய பொருளாதார வசதி இல்லாது பிரான்சிற்குள் நுழைய முற்பட்டவர்கள் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவங்களும் அக்காலத்தில் நிறைய நடைபெற்றது.

இது ஒருபுறம் இருக்க இன ஒடுக்குமுறையும், 1972ல் ஏற்பட்ட அரசியல் அமைப்பு மாற்றமும், சிறீலங்கா அரசுக்கு எதிரான வன்முறைச் செயற்பாடுகளில் தமிழ் இளைஞர்களை ஈடுபட வைத்தது. இதன் விளைவாக இத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள், உடந்தையாக இருந்தவர்கள் என பல தமிழ் இளைஞர்கள் காவல்துறையின் விசாரணை, கைது, சித்திரவதை போன்ற செயல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இத்தகைய அரச வன்முறைகளால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள், குறிப்பாக தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புகளைச் சார்ந்த ஒருசிலர் பிரான்சுக்கு வந்து சேர்ந்தனர். அன்றைய காலகட்டத்தில் இங்கிலாந்து செல்வதாயின் மாணவர் அனுமதி விசா ஒன்றே வழமையில் இருந்தது. வசதி படைத்தவர்களும் கல்வியைத் தொடரக்கூடிய தராதரம் உள்ளவர்களும், துறைசார் நிபுணர்களும் மட்டுமே இங்கிலாந்து செல்லக்கூடியதாக இருந்துது.

இது ஒரு புறம் இருக்க, 1972ற்கு பின்னர், குடியேற்ற வதிவிட அனுமதி மறுக்கப்பட்டிருந்தாலும், வேறு ஒரு சாராருக்கு வதிவிட அனுமதி வழங்கப்பட்டது. கம்யூனிச ஆட்சி நாடுகளில் இருந்து தப்பி வருவோருக்கும், இன மொழி பண்பாட்டு காரணங்களினால் தங்கள் நாட்டு அரசுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசியல் புகலிடம் வழங்கும் முறையாகும். 1972ற்கு பின், இலங்கையில் ஏற்பட்ட தமிழர்களுக்கு எதிரான அரசியல் ஒடுக்குமுறையினால் பிரான்சில் ஈழத் தமிழர்கள் அரசியல் தஞ்சம்கோரும் உரிமையை அளித்தது.

இந்த வழிமுறையைப் பயன்படுத்தி, 1972ற்கு பிறகு பிரான்சிற்கு வந்த சிலர், அரசியல் தஞ்சம் கோரினர். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலருக்கு அகதி அந்தஸ்து கிடைத்தது. அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கு பிரான்சில் தற்காலிக வதிவிட அனுமதி வழங்கப்பட்டதுடன், வேலை செய்யும் அனுமதியும் வழங்கப்பட்டது. இவற்றைப் பயன்படுத்தி நிரந்தர வேலையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் பிரான்சில் திருமணமாகி குழந்தைகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும், காலப்போக்கில் வதிவிட அனுமதி வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில்பிரான்ஸ்நாட்டிற்குவந்தவர்கள்மொழிப்பரீட்சயம்அற்றவர்களாகஇருந்தனர்.ஆனால்பெரும்பாலானோர் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இருப்பினும் நிர்வாக காரியங்களை நடாத்துவதற்கும் தொடர்பாடல்களைப் பேணுவதற்கும் அவர்களுக்கு பிரெஞ்சு மொழி அத்தியாவசியமாக இருந்தது. இந்நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய புதுச்சேரி தமிழர்கள் முன்வந்தனர். காலப்போக்கில் ஏற்பட்ட முரண்பாடுகளால், ஈழத் தமிழர்கள் பிரிந்து தாமே தமக்கென ஒரு சங்கத்தை உருவாக்க முன்வந்தனர். அந்த முயற்சியும் வெற்றிகரமாக அமையவில்லை. சமகாலத்தில் சுய திறமையால் பிரெஞ்சு மொழி அறிவை பெருக்கிக்கொண்டோர், தவிர பாரீஸ் கத்தோலிக்க மேற்றிறாணியார் காரியாலயத்தில் சங்கைக்குரிய சகோதரி அந்தனெத் போர்ஜே (யுவெழைநைவவந குழசபநவ) இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்து வந்தார். இவரின் உதவியுடன் 1979ம் ஆண்டில் பிரான்சில் உள்ள தமிழ் மக்களுக்கு உதவுவதற்கென ஒரு சங்கத்தை உருவாக்கும் முயற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கைத் தீவில் பிரச்சினை குறித்தும், சமகால நிகழ்வுகள் குறித்தும் பிரெஞ்சு நிர்வாகச் செயற்பாடுகளில் இருந்தவர்களுக்கும், தொண்டு நிறுவன அலுவலர்களுக்கும் பயன்படும் முகமாக, இலங்கைத் தீவின் அரசியல் வரலாறு பற்றியும், தமிழ் மக்கள் எதிர்கொண்ட அரசியல் பிரச்சினைகள் பற்றியும் சுமார் 40 பக்கங்கள் கொண்ட ஒரு அறிமுக ஏட்டினை பிரெஞ்சு மொழியில் எழுதி தட்டச்சு செய்து எமக்கு வழங்கியிருந்தார். இது பிரான்சில் இலங்கைத் தமிழர் பற்றிய அறிமுகத்திற்கு உதவியது மட்டுமல்லாது, அரசியல் தஞ்சம் கோரியவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது. மேலும் எமது பிரச்சினைகள் குறித்து பிரான்சிலிருந்த பல அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களுக்கு எமது பிரச்சினைகள் குறித்து பல வேலைப் பட்டறைகளையும் ஏற்பாடுசெய்திருந்தார்.

இந்த முயற்சிற்கு பக்கபலமாக பிரபல சட்டத்தரணியான திரு. மிசேல் இயோனிய்பிரா (Michel Iognaparat) எமக்கு உதவியது மட்டுமல்லாது, வேறு பல அறிமுகங்களையம் பெற்றுத் தந்தார்.. இவர் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மிகவும் தெளிவாக அறிந்தவர். பல அரசசார்பற்ற

நிறுவனங்களுக்கும் மனித உரிமை அமைப்புகளுக்கும் ஆலொசகராக இருந்தவர். இந்த நல்ல முயற்சியின் தொடர்ச்சியாக இலங்கைத் தமிழர் நலன்புரிச் சங்கம் என்ற அமைப்பு உருவானது. இதில் ஒரு பெண் உட்பட பன்னிரெண்டு பெயர் செயற்குழு அங்கத்தவர்களாக இருந்தனர். முதலில் இதை ஒரு கத்தோலிக்க சங்கமாக உருவாக்க வேண்டும் என சிலர் முன்மொழிந்திருந்தாலும், அது மத சார்பற்ற அமைப்பாக இருக்கவேண்டும் என அனைவரும் வலியுறுத்தியதால், அது மத சார்பற்ற தன்மையைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. உண்மையில் பிரான்சில் இருந்த ஈழத் தமிழர்களில் பெரும் பாலானோர்கள் சைவர்களே. இருந்தும் கிறீஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் எந்தவித வேறுபாடும் இன்றி ஐக்கியமாக இருந்தனர்.

தமிழர் நலன்புரிச் சங்கம் எந்தவித லாப நோக்கும் அற்ற சேவை மனப்பான்மை கொண்ட அமைப்பாகவே செயற்பட்டது. அக்காலத்தில் வந்தவர்களுக்கும் புதிதாக வந்துகொண்டிருப்பவர்களுக்கும் தங்குமிடம் ஒரு பிரச்சினையாகவே அமைந்திருந்தது. உறவினர்கள், நண்பர்கள் என்று முன்னரே அறிமுகமானவர்களுக்கு ஒருசில உதவிகள் கிடைத்தன. தங்குவதற்கு இடமின்றி பூங்காக்கள், மெற்றோக்கள் போன்ற வற்றில் தங்கியவர்களும் உண்டு. அக்காலத்தில் நிக்கோலா எயிட் பிளாமெல் (Nicolas Aide Flamel), ஆர்மே தே சலு (Armée de Salut) போன்ற ஒரு சில அமைப்புகள் இரவில் தங்குவதற்கு வசதிகளை வழங்கினர். குறிப்பாக குளிர்காலத்தில் அனைவருக்கும் இந்த வசதிகள் இல்லை. இதனால், நல்லெண்ணம் படைத்த ஒரு சிலரின் அறையில் பலர் தங்கும் நிலை ஏற்பட்டது.

காலப்போக்கில் சிறிது வேலைகளைப் பெற்றுக்கொண்டவுடன் தங்களுக்கென வசதியை அமைத்துக்கொண்டனர். அன்று எதிர்கொண்ட பிரச்சினைகள் இன்றும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இலங்கைத் தமிழர் நலன் புரிச் சங்கம் முழுமையாக பிரான்சில் வாழும் ஈழத்தமிழர் நலன் குறித்தே சேவை செய்து வந்தது. இது ஒரு பதிவுசெய்யப்பட்ட ஸ்தாபனமாக இருக்கவில்லை.

இதேவேளையில்இலங்கையில்ஈழவிடுலைக்கானசெயற்பாடுகளில்ஈடுபட்டுகைதாகிவிடுதலைசெய்யப்பட்டவர்கள் பிரான்சில் அடைக்கலம் புகுந்திருந்தனர். இவர்களில் ஒரு சிலர் நாட்டில் உள்ள விடுதலை அமைப்புகளுடனான தமது தொடர்பை பேணி வந்தனர். இவர்கள் மத்தியில் இருந்த விடுதலைப் புலி ஆதரவாளர்கள் இணைந்து பாரீஸ் தமிழ் சங்கம் என்ற ஒன்றை நிறுவி திரு. ஏரம்பு தலைமையில் தமது ஆதரவு செயற்பாடுகளை ஆற்றிவந்தனர். அப்பொழுது திரு. உமாமகேஸ்வரன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவராக இருந்தார்.. அவ்வேளை ஏனைய விடுதலை அமைப்புகளுடன் தொடர்புகளை பேணியவர்கள் தனியாகச் செயற்பட்டனர். அவர்கள் அனைவர் மத்தியிலும் நட்பும் தோழமை உணர்வும் நிலைத்திருந்தது.

ஒருபுறம் பிரான்சிற்கு புலம்பெயர்ந்து வந்தவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்த அதேவேளை ஈழத்திலிருந்த மக்களுக்கும் உதவ வேண்டிய தேவை இருந்தது. குறிப்பாக 1977 இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு வன்னியில் சென்று குடியேறியவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளில், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (TRRO) வன்னியில் செயற்பட்டு வந்தது. இதன் தலைவராக திரு. ரவீந்திரன் இருந்தார். செயலாளராக மனித உரிமைவாதியும் வழக்கறிஞருமான திரு. கந்தசாமி செயற்பட்டார். அக்காலத்தில் ரி.ஆா.ஆர்.ஒ அமைப்பை பிரான்சிலுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தோம். இதனால் ஒற்றுமையின் அவசியம் உணரப்பட்டு, அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆரம்பிக்கப்பட்டது. இதில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்று உருவாகிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழக ஆதரவாளர்கள் இணைந்து கொள்ளாது தனித்து நின்றனர். தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக திரு. தேசிங்கம் ராஜசிங்கம் (அப்பன்), செயலாளராக திரு. பாலசுப்பிரமணியம் முருகதாஸ் (முருகன்), இணைப் பொருளாளர்களாக திரு. பெனெடிக்ட் சிங்கநாயகம் (சிங்கம்), திரு. மனோகரன் வேலும்மயிலும் (மனோ) ஆகியோர் உத்தியோக பூர்வ அங்கத்தவர்களாக பதிவுசெய்யப்பட்டனர். இதில் திரு பெனெடிக்ட் சிங்கநாயகம் அகால மரணம் அடைந்துவிட்டார். இவர் 1979ம் ஆண்டு கியூபாவில் நடைபெற்ற உலக இளைஞர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் சார்பில் கலந்து கொண்டவர்.

இவ்வாறு ஆரம்பித்ததே பிரான்சு ஈழத்தமிழர்களின் ஆரம்பகால செயற்பாடுகளாகும்.

வே.மனோகரன்
கட்டுப்பத்தை பல்கலைக்கழக பொறியியல்பீட பட்டதாரி
சமூக, அரசியல் செயற்பாட்டாளர்
தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னைநாள் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர்

# Nous détenons la possibilité d'évoluer dans un monde artistique.

Il est important de rappeler les deux types d'art qui coexistent : celui de l'artisan et celui de l'artiste. L'art de l'artisan est son métier, le savoir-faire par lequel il fabrique des objets utiles : sa technique et l'art de l'artiste qui désigne tout production de la beauté par les œuvres d'un être conscient ou encore toute création d'œuvres qui ont un intérêt, une valeur esthétique. On distinguera ici une production industrielle qui repose sur une technique de plus en plus consciente de ses règles des manières artisanales de produire où le talent et l'ingéniosité de l'ouvrier en particulier dans le chef d'œuvre ne diffèrent pas essentiellement des manières artistiques de produire. C'est un milieu captivant pour diverses raisons. Il n'y a pas de diplôme pour un artiste, personne qui sait mettre en scène des désirs inconscients sans provoquer gêne, angoisse ou désintérêt chez les autres, mais au contraire une émotion libératrice. Le talent et l'imagination ne s'apprennent pas et ne s'enseignent pas davantage.

Il n'y a aucune école qui apprend à concevoir une œuvre d'art. Cette créativité est dans le sang et n'est pas donnée à tout le monde. Mais le talent et l'imagination ne sont pas suffisants. On peut se former en autodidacte comme un génie artistique. La capacité de l'artiste à produire des œuvres capables de plaire ainsi universellement est ce qu'Emmanuel Kant appelle le génie. Selon lui, le génie est le talent, don naturel, qui dicte la règle de l'art ; mais le talent, faculté innée de production de l'artiste, appartient à la nature, on pourrait donc dire que le génie est la disposition innée de l'esprit par laquelle la nature donne ses règles à l'art. Le génie se caractérise par l'originalité, produire ce dont on ne saurait donner de règles déterminées, l'exemplarité, les productions doivent être des modèles, et l'incapacité à formuler scientifiquement la manière dont il réalise son œuvre.

Mais les métiers artistiques comme le métier de comédien tendent à se professionnaliser. Des conservatoires et des grandes écoles nationales existent pour devenir comédien, artiste qui manifeste son imagination et sa personnalité dans son œuvre. Mais pour être reçu il faut passer et réussir les concours. Il existe aussi des formations universitaires, l'enseignement et les formations privés et d'autres établissements reconnus comme l'École du théâtre National de Bretagne, l'École du Centre dramatique national de Saint-Étienne, etc.

Peu d'artistes parviennent à percer et à vivre uniquement de leur talent. Car même ceux qui ont débuté tôt doivent se battre pour trouver de nouveaux contrats afin d'être connus. De même pour devenir chanteur ou chanteuse il ne suffit pas d'avoir une jolie voix, il faut savoir maîtriser toutes les techniques vocales et avoir un grand bagage musical. Avec la crise de la diffusion il est difficile de s'intégrer à cet univers. Il existe pour cela une formation dans les conservatoires nationaux et supérieursde musique et les écoles nationales de musiques. Pour se faire connaître, il existe de grands moyens comme la télévision ou Internet, qui sont des médias efficaces.

www.padippakam.com



Pour être artiste peintre il faut passer par l'École nationale supérieure des beaux arts (ENSBA. Pour être admis dans cette école il faut réussir un examen d'entrée.

Ceux ou celles qui aiment la littérature, les langues doivent se diriger vers une université de lettres, enseignement qui append l'art d'interpréter les textes, d'écrire, l'histoire de la littérature. Cependant il ne suffit pas de disposer de toutes ces connaissances pour écrire, il faut au-delà des techniques faire preuve d'imagination, de créativité, d'originalité, toutes qualités qui ne s'enseignent pas.

Pour ceux ou celles qui aiment la traduction il existe un institut qui s'appelle l'INALCO (Institut national des langues et civilisations orientales), plus connu sous le nom de Langues O' où plus de 90 langues sont enseignées dont le tamoul, l'hindi, le chinois et maintes langues dites rares.

Par ailleurs j'aimerais souligner le fait qu'il n'y ait pas de diplôme de « création ». La création par définition c'est le nouveau, c'est l'inattendu.

Chacun à sa place il faut juste savoir la conquérir sur le champ artistique. Il existe plusieurs situations, celui qui a fait des études de beaux arts n'apprendra pas à faire des choses nouvelles il peut être artiste éventuellement mais les artistes ne sont pas enseignants, les professeurs commentent par défier un auteur dans l'art, de façon générale les enseignants sont ceux qui transmettent leur savoir à ceux qui révolutionnent. Ils peuvent être diplômés, c'est le talent l'originalité qui fait la différence entre créativité, qualité nécessaire de l'art, et le simple commentaire qui vient après la création et ne saurait suffire à la susciter.

Enfin nous avons le devoir de créer sur cette terre un art qui nous permettra de s'exprimer avec les êtres humains. Il faudra créer un espace où on encouragera les échanges interculturels. Promouvoir et encourager la connaissance française et tamoule par tous les moyens artistiques, par exemple, comme le chant, la littérature, le théâtre, la poésie, la danse, la traduction, la cuisine, créer un échange culturel entre la génération nouvelle et l'ancienne voilà le but de certaines associations comme Kala Ignis qui a pour ambition de fédérer les artistes, d'encourager leur création et de la communiquer à un public large et divers. Une association est souvent le lieu ou les solitudes (la solitude créatrice est un fait) réunies mettent en commun leurs talents et s'encouragent mutuellement.

Meera Balakanesan
Secrétaire de l'association Kâla Ignis - Feu du Temps
Traducteur-Interprète
Diplômée en Licence Lettres modernes



படிப்பகம்

# Sans conscience du passé, pas d'avenir !!!

Les premiers arrivés ont beaucoup souffert, chef d'entreprise, cadre, ouvrier ou autres se sont tous retrouvés avec des emplois non qualifiés (ménage, laveur de vitre, éboueur). Ces premiers, qui étaient nos parents, ont durement travaillé pour sauver l'avenir de leurs enfants, de leurs proches qui sont restés au pays. Leurs priorités étaient de gagner de l'argent afin de surmonter les difficultés et de reconstruire une nouvelle vie pour pouvoir sauver leur destin.

Certains jeunes sont arrivés il y a 10 ans, 20 ans et d'autres 30 ans. La majorité est née dans les pays expatriés, la minorité est venue du pays. Tous deux occupent et occuperont une place importante dans la société et seront amener à s'assimiler à la culture française.

Assimilation : l'assimilation est le processus qui permet à un étranger ou à une minorité de s'intégrer à un groupe social plus large en adoptant ses caractéristiques culturelles. L'assimilation culturelle s'accompagne en général de l'adoption de la langue, de l'adhésion au système de valeurs du groupe dominant et de l'abandon de son ancienne façon de vivre. L'assimilation peut être choisie ou être le résultat d'une politique volontariste, comme dans le cas d'un pays colonisateur désirant assimiler un peuple colonisé.

Aujourd'hui nous nous retrouvons dans une situation où nous sommes dans l'obligation de vivre deux vies. Un pour nos parents et l'autre pour s'assimiler dans la communauté française. Etant tamoul, nous avons l'obligation de respecter les codes de la vie imposés par la culture et la tradition tamoule. Parfois nous avons un sentiment d'être des prisonniers. Les jeunes rencontrent de plus en plus de problème face à leur exigence. La plupart du temps, ce sont les parents qui décident de leur parcours scolaire de leurs enfants, « tu devras devenir un docteur ou ingénieur », pas de choix dans l'orientation scolaire, Interdiction de se marier avec quelqu'un d'autre qu'un tamoul alors que l'enfant est né en France. Durant l'enfance, les parents éduquent leurs enfants comme des français mais arrivé au mariage, il devra épouser une personne de même origine, religion et surtout de caste. Les parents ordonnent de respecter les chartes de leurs castes tout en sachant qu'en France ceux de la caste supérieure et inferieure se retrouvent avec des métiers non qualifié.

Dur à accepter les méthodes de vie des français. Les filles Tamoules ne peuvent pas sortir seule, parler aux garçons même s'il est tamoul (surtout pas), d'inviter des français chez soi, sortir et rentrer tard. Parfois interdiction de sortir avec un ami français, simplement par crainte des rumeurs de l'entourage. Bref deux cultures qui s'opposent l'une à l'autre.

Aujourd'hui malheureusement, nos parents n'arrivent pas à réguler la culture française et Tamoule. Les courants de pensés de la première génération des tamouls ne sont pas les mêmes que les nôtres. Par cette irrégularité, les bienfaits de notre culture ou les raisons de notre expatriation ne sont pas correctement transmis à leurs enfants. Par peur que l'enfant se consacre la totalité du temps à des actions humanitaires ou échoue dans sa scolarité et se retrouve avec un emploi non qualifié. Les parents gardent la cause Tamoule pour soi. Depuis la défaite militaire des Tigres, tout à basculer, la participation des jeunes a totalement baissé dans les actions associatives.

Les parents ont la nécessité de motiver leurs enfants à consacrer leur temps libres aux actions humanitaires et les guider à s'orienter dans les domaines d'activités qui seront utiles pour la création d'un état en exile. Par Volonté de certain, ignorance ou incapacité, aujourd'hui par manque de communication, coordination et de

leadership, on a tendance à oublier notre cause.

Quel sera l'avenir de nos enfants ou celui des enfants de nos enfants, si les parents ne transmettent pas l'histoire à leurs enfants, si les jeunes ignorent notre cause de la lutte et notre identité ?

Dans 60 ans, les enfants de nos enfants auront une vie totalement française. Ils parleront très rarement tamoul. Le métissage prendra part, ils seront entièrement non assimilés mais totalement intégrés.

Ils n'auront plus les parents derrière eux pour les obliger à respecter leur culture. Le temps aura changé. Ils ressembleront aux mauriciens et réunionnais de l'heure actuelle. La ressemblance physique indiquera leurs origines, mais malheureusement, n'auront plus une vision en faveur de leurs pays ou culture. Dans 120 ans, notre ethnie n'existera plus. La situation sera de même au pays. Il y aura un métissage entre les Cinghalais et Tamouls car faute de transmissions de l'histoire, nous perdrons notre autonomie. Par la suite nous serons un peuple métissé et non Tamoul.

La population tamoule déplacée depuis le conflit, reste encore aujourd'hui parquée dans des camps de concentration, privée de nourritures, de logements et de toutes libertés publiques. Les droits économiques, sociaux et culturels des Tamouls se sont considérablement dégradés. La terreur règne au Sri Lanka pour cette minorité opprimée et condamnée à vivre sous la menace d'un gouvernement raciste lui imposant sa religion et sa langue. La loi du vainqueur se traduit donc par une entreprise générale de «cinghalisation».

Au Sri Lanka, le génocide des tamouls ne cesse de croitre. Aujourd'hui, la main est mise sur la culture. On assiste ainsi au génocide culturel, qui est employé pour la destruction intentionnelle du patrimoine culturel d'un peuple ou d'une nation pour les raisons politiques, militaires, religieuses, idéologiques, ethniques ou raciales.

## La nécessité de l'héritage culturel :

La culture, dans son sens le plus large, est considérée comme l'ensemble des traits distinctifs, spirituels et matériels, intellectuels et affectifs, qui caractérisent une société où un groupe social. Elle englobe, outre les arts et les lettres, les modes de vie, les droits fondamentaux de l'être humain, les systèmes de valeurs, les traditions et les croyances.

## Il fournit une identité :

« Comment tu veux faire pour savoir qui tu es et d'où tu viens si tu ne t'intéresses pas à ce qui a existé avant toi ? » Etienne Gruillot, Petites chroniques de la vie comme elle va (2002).




Dessin de Plantu (Le Monde, 12 novembre 1999)

www.padippakam.com



Notre avenir deviendra comme ceci, si l'histoire n'est pas correctement transmise à la prochaine génération. Sans la culture, mémoire de l'humanité, l'individu ne serait qu'une abstraction.
« Un homme sans patrie, c'est un rossignol sans chanson »
De Proverbe russe

On peut bien sûr penser au devoir de mémoire comme un hommage, une dette envers le passé qui permet de restituer ainsi une continuité dans le temps, une filiation, transmettre un héritage. Se libérer totalement du passé pourrait être prendre le risque de se perdre en perdant ses racines, ce qui nous constitue et permet ensuite de s'orienter. La connaissance du passé permet de libérer présent et avenir en ayant une compréhension du présent (conséquences du passé), une vue des mécanismes de l'histoire et des éléments sur la nature humaine qui permettent d'éclairer l'action.

Souvenez-vous de ceux pourquoi nos héros ont sacrifié leur vie. Ils ne désiraient pas qu'on leurs glorifient avec des chansons, des monuments ou des poèmes de bravoures ou de batailles. Ce qu'ils souhaitaient été simple, « souvenez vous de nous, de notre histoire, ceux pourquoi nous avons donné nos vie ».

Hélas, la réalité qui a été il y a 5 ans est devenue une histoire aujourd'hui. Une histoire qui a couté tant de vie, de sacrifice, de douleurs, de séparation. Pas de mot pour décrire le courage des héros et de notre peuple qui sont resté protecteur. Nous avons perdu ce qu'il ne fallait pas perdre. Nous devons savoir accepter la réalité et poursuivre le chemin. Aujourd'hui, nous les jeunes Tamouls expatriés dans les pays du nord ont des devoirs envers notre Patrie. Prenons conscience de notre responsabilité.

KAMALANATHAN Karikalan (kani)
Etudiant en master
Marketing et Gestion des Entreprises






படிப்பகம்

www.padippakam.com



Mes chers compatriotes,

C'est avec un grand plaisir que je souhaite participer à la 15ème Grande Rencontre Sportive Tamoule en France.

Mes écrits étaient auparavant destinés à faire le louange de celles et ceux qui ont travaillés pour promouvoir la culture tamoule en France et également de souligner le formidable travail des personnes bénévoles qui participent à l'intégration des Tamouls en France. Je n'oublie jamais les jeunes qui répondent toujours présent aux diverses manifestations culturelles organisées en France et qui contribuent à la survie de la culture tamoule.

Cependant, étant donné que nous célébrant la 15ème édition de cette rencontre sportive où la communauté tamoule de France s'y rassemble chaque année, je me dois de rendre ce moment exceptionnel.

De ce fait, je tiens à donner un message fort à la communauté franco-tamoule à travers la vision d'un spécialiste français.

Ce spécialiste n'est autre que M. Frédéric Fappani qui est le Président du Cercle National de Réflexion sur la Jeunesse en France et qui travaille depuis quelques années sur le conflit tamoul. Ses repères de travail sont internationaux, notamment via l'ONU.

Voici ici le point de vue de M. Fappani sur le rôle important de la Diaspora tamoule par rapport à la lutte des Tamouls du Sri Lanka.
Enfin, je tiens particulièrement à remercier M.Fappani d'avoir accepté de nous donner ses lumières sur cette question.

A Paris, le 21/06/2012
M.Mahinthan Sivasubramaniam,
Conseiller financier
Diplômé de licence de Sciences Economiques
Et licence Management Comptabilité, Finance et Contrôle
Elu de Paris au sein du TGTE

# « Pour un Conseil Représentatif des Tamouls de France » Par Frédéric Fappani

Mesdames, Messieurs,

A la demande de certains membres de votre gouvernement en exil, je vous propose ici, mon point de vue.

Vous êtes à un moment historique de l'histoire Tamoul !

En effet, l'Humanité entière traverse une crise majeure, qui se décline dans de nombreux domaines (individus, économie, finance, culture, famille, autorité etc.

Cette crise ne sera surmontée que par les personnes et les nations qui auront réussi à entrer dans deux processus : L' « Individuation » pour les personnes et « Humanisation » plus grande pour les nations.

Si certaines personnes ne changent pas, elles vivront des vies sans aucuns sens, aucun bonheur et leur nation seront en danger de disparaître. Si certaines nations ne changent pas elles disparaî-tront.

## Le Passé :

La nation Tamoul est riche d'un passé, d'une tradition, d'une culture. Ce passé et cette expérience se doivent d'éclairer le présent.

Les projets, comme la mise en place de structure accueillant les jeunes enfants afin qu'ils puissent savoir écrire et lire le tamoul ou l'organisation de la Grande Rencontre Sportive Tamoule qui ac-cueillent entre 15 a 20 000 personnes par an, les classes de danse, les évènements socioculturels sont l'expression de cette culture toujours vivace.

Mais aussi plus largement, ce passé, irrigue chacun-e mais aussi toute la nation en exil.

Cependant, vous devrez néanmoins faire attention à ce que certains démons du passé ne vous dévorent pas.

## Les anciens :

Certains anciens le savent bien, les démons du passé sont encore là.

En effet la guerre, les pertes des proches, la violence, qui ont été vécumais aussi parfois celle que vous avez fait vivre … sont aussi là.

Elles représentent un danger pour vous, si vous ne remettez pas en question.

Il ne faut pas que cette violence s'exprime dans vos projets actuels et en particuliers envers les enfants et les jeunes.

Si vous voulez que votre passé soit positif, bannissait la violence et les représentations positives de la violence dans vos projets. Car vous, plus que tout autre peuple actuel, doit y faire attention.

Parmi les anciens vous ne devrez pas suivre ce qui dans vos aînés veulent poursuivre la violence ou ceux qui ne croient pas que les choses puissent changer.

Les anciens vont devoir devenir des passeurs de valeurs encore plus authentiques et aidant. Ils ne doivent plus forcément exercer le pouvoir mais permettre à une nouvelle génération d'y accéder !

# La place des Jeunes :

La jeune génération franco-tamoule a un grand rôle à jouer:

En France, si vous ne voulez que la génération nouvelle n'oublie pas d'où elle vient et s'implique vous n'avez pas le choix que de lui faire une place sinon elle laissera « les aînés » garder le pouvoir et mourir.

Sans l'aide des aînés elle n'aura plus rien à voir avec la nation Tamoul si ce n'est qu'un vague souvenir.

Soyons clair si les anciens ne font rien, garde le pouvoir et ne permette pas l'implication de plus de jeunes ... la nation tamoul en exil se fera elle-même disparaître.

# Le Futur :

Vous êtes à un moment historique de l'histoire Tamoul car vous allez devoir comprendre ce qu' « Individuation » pour les personnes et ce qu'« Humanisation » pour votre nation peuvent vouloir dire.

Cela ne fait pas plaisir à entendre mais il faut se le dire pour changer et ne pas disparaître vous avez aussi des repères malheureux.

Ils sont par exemple : posséder des douleurs de guerre, être guerrier ou agressif, être dans le non-sens, dans la violence et parfois de manière quasi-pathologique etc.

Toutes les nations, toutes les personnes au monde sont concernées par ces repères et ces maux mais pour envisager un avenir où vous et vos enfants pourraient être des humains heureux et des tamouls à la culture rayonnante il va vous falloir travailler sur tous ces maux mais les vôtres !

Votre passé, vos anciens, vos jeunes seront les clefs de votre avenir à la seule condition, d'accepter de lâcher certains repères malheureux et d'accompagner la jeunesse différemment. Par contre vous allez devoir le faire, en situation d'exil. C'est là, le défi qui vous est posé.

Il ne vous reste plus qu'a bâtir une institution capable de piloter ce changement en France. Et pourquoi pas un « Conseil Représentatif des Tamouls de France ».

## Frédéric Fappani

Président du Cercle National de Réflexion sur la Jeunesse.

PS : Un groupe de réflexion travaille actuellement par rapport au « Conseil Représentatif des Tamouls de France ». Les personnes intéressées peuvent prendre contact.

www.padippakam.com



# தமிழர் விளையாட்டு விழாவின் வழித்தடம்

நாடுகடந்த - பிரான்சுத்தமிழ் - சமூகமாக முகிழ்ந்து வரும் ஈழத்தமிழ் சமூகம் தன்னை வாழ்நிலை சார்ந்தும் - எதிர்காலம் சார்ந்தும் ஒழுங்குபடுத்தும் பயணம்

தாய்நிலத்திலிருந்து அகதிகளாக 'தூக்கிவீசப்படல்' என்பது வார்த்தைகளுக்குள் அடங்காத துன்பியல் நிகழ்வாகும். 'உறவுகள்', 'உரித்துடையவை' என இயற்கை வழங்கிய பாதுகாப்பான கூட்டிலிருந்து போரினாலும், வன்முறைகளாலும் 'பிய்த்து' எடுக்கப்பட்டு - எதுவுமே தெரியாத புதிய நிலங்களிற்கு தூக்கி எறியப்படல் என்பது தனிமனிதர்களுக்கும், சமூகத்திற்கும் தாங்கொண்ணா வேதனைகளையும், இடர்களையும் கொடுக்கும் வாழ்வியல் அனுபவமாகும். இந்த இடர்மிகுந்த அனுபவங்கள் பல்வேறு தருணங்களில் பல்வேறு வடிவங்களில் மனிதகுலத்திற்கு கிடைக்கப்பெற்றே வந்துள்ளன. போரும், ஒடுக்குமுறையும், இயற்கைப் பேரிடர்களும் பல பாவப்பட்ட சமூகங்களை புலம்பெயரவைத்து வருகின்றது. டயஸ்போறா என்ற சொல்லாடலின் தொடக்கமான யூதர்களின் வேதனை மிகுந்த புலப்பெயர்வுகள் தொடக்கம் ஆர்மேனியர்கள், குர்திஸ்கள் எனப் பல மக்கள் திரள்களின் கண்ணீராலும் நிரம்பியதுதான் மனிதகுல புலப்பெயர்வு வரலாறு.

எங்களது வரலாறும் அவ்வாறானதுதான்.

போர் எங்களை எங்கள் கூடுகளிலிருந்து 'திசைக்கொன்றாக' அல்லது 'திசைதெரியாது' பறக்க வைத்தது. நாங்கள் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்ரேலியக் கண்டங்களின் தாராளவாத சனநாயகங்கள் வழங்கிய வெளியில் தரையிறங்கி மீண்டும் பிறந்தும், தவழ்ந்தும், எழுந்தும் வாழத்தொடங்கினோம். இந்தப் பறப்பில் பல்லாயிரம் வேதனைகள் பதிவாகின. பெற்றோரையும், உறவுகளையும் விட்டு 'கள்ளப் பாஸ்போட்டில்' ஆண்களும், பெண்களும் நெஞ்சு நிறைந்த பீதியுடனும் - அழுகையுடனும் கரைகளை கடந்ததும், குளிர்நாடுகளின் எல்லைகளை பனிகாலத்து நடுஇரவில் இரகசியமாகத் தாண்டியதும், ஆபிரிக்க நாடுகளின் இரவல் கூரைகளுக்குள் வருடக்கணக்காக பதுங்கி இருந்து கண்ணீர் விட்டமையும், அரபு நாடுகளில் - துருக்கியில் எனப் பல நாட்டு நிழல்உலக வழியிலான பயண ஏற்பாட்டில் பயணித்தே பெரும்பான்மை புலம்பெயர்ந்த தமிழ்சமூகம் ஐரோப்பிய கரைகளைக் கண்டடைந்தது. இந்தப் பறப்பில் துன்பமும், கடினங்களும் மட்டுமல்ல ஏமாற்றுதல்களும் - ஏமாறுதல்களும், அதிஸ்டங்களும் - துர்அதிஸ்டங்களும் கூட பலவித அனுபவங்களை ஏற்படுத்தி வந்துள்ளது. இன்னமும் எங்கள் பயணங்களின் முழுமையான வரலாறும் - அனுபவங்களும் பதிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. எனினும், நாடுகடந்த தமிழ்சமூகம் நிறுவனமயப்பட்டு வரும் சூழலில் இந்தப் பதிவுகளுக்கான வாய்ப்புக்கள் உருவாகி வருகின்றது.

பிரான்சிற்கு ஈழத்தமிழ் சமூகத்தின் புலப்பெயர்வு எழுபதுகளில் மிகவும் சிறியதாக ஆரம்பித்து எண்பதுகளில் மிகத்தீவிரம் பெற்றது. தனித்தனி மனிதர்களாக ஈழத்தமிழ் சமூகம் பிரான்சிற்கு புலம்பெயரத்தொடங்கியது. மிகவும் கடின-மான ஆரம்பகாலங்கள். சின்னஞ்சிறிய அறையொன்றிற்குள் 'பத்திற்கு மேற்பட்டவர்கள்' நெரிசல்பட்டு வாழ்ந்த வாழ்வும், உருளைக்கிழங்கு குவியலுக்குள் ஒரு கோழியினை வெட்டிப்போட்டு வறுமையை 'சுவையாக' எதிர்கொண்ட கூட்டு வாழ்வனுபவங்களும் பிரான்சு தமிழ்சமூகத்தின் கடந்தகாலப்பாதையில் கிடக்கின்றது. பாரிஸ் நகரை மையப்படுத்தி ஒழுங்கு செய்யப்பட்ட பிரான்சின் நிர்வாக - சமூக அமைவு முறை போன்று தமிழ்சமூகத்தின் பெரும்பான்மையும் பாரிஸ் பிராந்தியத்தினை பிரதானப்படுத்தி கூடுகளை கட்டத்தொடங்கியது. 'விசாவிற்கு' விண்ணப்பித்தல், அகதி மனுக்களை எழுதிக் கொடுத்து அங்கீகரிக்க வைத்தல், அரச உதவிகளைப் பெறல், வேலைவாய்ப்புக்களைப் பெறல் என்கின்ற சவால்களை ஒருபுறமும், குடும்ப உறவுகளை புதிய வாழ்வொழுங்குக்குள் கொண்டுவரல் - தாயக விடுதலைப்போர் சார்ந்த தேவைகளை சார்ந்து ஒன்றுபடல் என்கின்ற ஆன்மா சார்ந்த பணிகள் மறுபுறமுமாக சமூகத்தினை ஒழுங்குபடுத்தத் தொடங்கியது.



படிப்பகம்

எண்பதுகளில் பிரான்சில் விழுந்த விதை தொன்னூறுகளில் மெல்ல மெல்ல முளைக்கத் தொடங்கியது. பிரான்சு ஈழத்தமிழ்சமூகம் பிரெஞ்சு பேசவும், வேலைவாய்ப்பு சந்தையில் மேல்நோக்கி நகரவும் தொடங்கியது. சமூக பொருளாதார புரிதல்கள் மெல்ல மெல்ல ஈழத்தமிழ் சமூகத்தினைப் பலப்படுத்தியது. உறவுகள் சார்ந்தும், தாயக அரசியல் தேவைகள் சார்ந்தும் நிறுவனமயப்பட்ட பாய்ச்சல்கள் நிகழ்ந்தன. சமூகம் பேசத்தொடங்கியது. சமூகம் இயங்கத் தொடங்கியது. மெல்ல மெல்ல இசையும், இயலும், நாடகங்களும் நிகழத்தொடங்கின. விடுதலை சார்ந்த அறம் சமூகத்தின் இந்தப் பயணத்திற்கு வீச்சினையும், மூச்சினையும் கொடுத்தது.

இத்தகைய பரிமாண வளர்ச்சியின் பின்னணியில்தான் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தமிழர் விளையாட்டு விழாவின் உருவாக்கத்தினை பார்க்க முடியும். ஒருநாளில் உருவான வித்தையல்ல இது. ஒரு சமூகம் இயங்கியதன் தொடர்ச்சி இது.

தமிழர் விளையாட்டு விழாவின் ஆரம்பகாலங்கள் - 90களின் பிற்பகுதி - நினைவிற்குள் வருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் - பிரான்சு இந்நிகழ்வினை நடத்துவதற்கான ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்ட காலகட்டங்கள். அதற்காக நடத்தப்பட்ட மதிப்பீட்டு முயற்சிகள். அதில் பங்கேற்ற பல்வேறு நிறுவனங்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலவிடயங்கள் நினைவிற்குள் வருகின்றது.

மாபெரும் விடுதலைப்போரின் கடினமான காலகட்டங்கள் அவை. யாழ் இடப்பெயர்வின் பிற்பாடு வன்னிபெருநிலப்பரப்பு தமிழர்களின் இதயபூமியாகி விடுதலைப்போரின் வீச்சும் - தேவைகளும் அதிகரித்த காலங்கள். ஜெயசிக்குறுய் என்ற பெயரில் மாபெரும் போர் வன்னிமீது நடத்தப்பட ஆரம்பித்த காலங்கள். புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள், குறிப்பாக பிரான்சு தமிழ்சமூகம் தொடர்ச்சியாக விடுதலைசார்ந்தும் - தாயகம் சார்ந்தும் கட்டமைக்கப்பட்டு இயங்கிய நாட்கள் அவை. அத்தகைய அழுத்தங்களின் மத்தியில் இயங்கிய பிரான்சு தமிழ்சமூகத்தின் நலன்களுக்கான திட்டமாகவே தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமிழர் விளையாட்டு விழாவினை அன்று முன்வைத்தது. முழு தமிழ்சமூகமும் ஒன்று கூடி, முழு நாள் பொழுதில் ஆடலும் - பாடலும் - விளையாட்டுமாக தன்னை மீள்உற்சாகப்படுத்தி - கரங்களைக் கோர்த்து - மகிழ்வதே இந்தத் திட்டத்தின் வெளிப்படையான நோக்கமாக இருந்தது. இவ்வாறு தலைமுறை இடை வெளிகளைக் கடந்து ஒன்றிணையும் சமூகம் தனது பாரம்பரிய விளையாட்டுக்களையும், கலைகளையும் நிகழ்த்திக்காட்டும் வாய்ப்புக்கள் திறக்கப்பட்டன. இது ஒரு சமூகப் பரிசோதனை முயற்சியாகவும் அமைந்தது. நாடுகடந்த பிரான்சு தமிழ் சமூகமாக முகிழ்ந்து வரும் எமது சமூகம் தன்னை வாழ்நிலை சார்ந்தும் - எதிர்காலம் சார்ந்தும் ஒழுங்குபடுத்தும் முனைப்பினை பரிசீலித்துப் பார்க்கும் அக முயற்சியாகவும் இது கருக்கொண்டு உருக்கொண்டது.

தமிழர் விளையாட்டுவிழாவின் ஆரம்ப காலகட்டம் முற்றிலும் புதிய அனுபவமாக அமைந்தது. பரந்து விரிந்த தமிழ்திடலெங்கும் காலாற நடக்கும் அனுபவம் - ஆங்காங்கே அமைக்கப்பட்ட பல்வேறு மரபு சார்ந்த விளையாட்டுக்களினை பார்க்கவும் பங்கேற்கவும் கூடும் தலைமுறை - உணவு கூடாரங்களில் சுடச்சுட ஓடியல் கூழை வாங்கிக்கொண்டு ஏதாவது ஒரு மரத்தடியில் ஒதுங்கும் நண்பர்கள் வட்டம் என்கின்ற காட்சிகள் பிரான்சில் தமிழ்சமூகம் சந்திக்காத அனுபவமாக அமைந்தது. மறுதளத்தில் பார்த்தால், முதியவர்கள் - நடுத்தர வயதினர் - இளையவர்கள் எனப்பலதரப்பும் ஒன்றாக கூடி ஏதாவது விளையாடி மகிழவும் - இடைவெளிகளைக் கடந்து ஒரு தலைமுறை மற்றத்தலைமுறையின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் பாலம் அமைக்கப்பட்டது போன்றதொரு காட்சி உருவாகியது. 'வேரிற்கு நீர் பாய்ச்சல்' என்ற சொல்லாடலின் சமூக அர்த்தம் மற்றுமொரு பரிமாணத்தில் அங்குபார்க்கப்பட்டது.

இந்த நிகழ்வின் அரசியல் சமூக பரிமாணமும் முக்கியமானதாகும். இரண்டு நிகழ்வுகளின் பின்னர் மூன்றாம் ஆண்டு நிகழ்வுக்கான திடல் இறுதி நேரத்தில் சிக்கலுக்குள்ளானது. அப்போது தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு பெரும் உதவியாக வந்தார் திரு.அலன் ஆனந்தன் அவர்கள். நிரம்பிய தமிழுணர்வாளரும் - பிரான்சு தேசிய அரசியலில் பங்கேற்பவருமான அலன் அவர்கள் டுனி மாநகர சபையின் தேர்வுசெய்யப்பட்ட உறுப்பினராவார். இறுதிநேரத்தில் திட-லே கிடைக்காது தள்ளாடிய நிகழ்வினை தனது தோள்களில் தாங்கி தனது மாநகராட்சி சபையின் திடலில் நிகழ்வினை நடத்த உதவிய அவர் புதிய பெரிய திடலுக்கு தமிழர் விளையாட்டு விழாவினை கொண்டு செல்ல உதவியதுடன் நிகழ்விற்கு மற்றுமொரு அரசியல் சமூக முக்கியத்துவத்தினை ஏற்படுத்தினார். அவரது இணைவுடன் இந்நிகழ்வில் பிரான்சு தேசிய தளத்து தலைவர்கள் பங்கேற்கும் வாய்ப்பு உருவாகியது. இடதுசாரி வலதுசாரி பேதமற்று தமிழ்சமூகத்தின் அரசியல் நிலைப்பாடு சில தரப்புக்களுக்கு ஏற்படுத்தி சங்கடங்களைக் கடந்து - அனைத்து பிரான்சு தேசிய அரசியல் தலைவர்களும் நிகழ்வில் பங்கேற்கத் தொடங்கியமை புலம்பெயர்ந்த தமிழ்சமூகம் சமூகத்தளத்தில் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட பொதுப்புள்ளியில் தேசியதளத்தினை சென்றடையும் முயற்சிக்கு வித்திட்டது.

பிரான்சு தமிழ்சமூகத்தின் அதுவரையிலான செயற்பாடுகளில் அரசியல் விவகாரங்கள் உள்ளடங்கியிருந்தது. பிரான்சின் முன்னாள் சனாதிபதி பிரான்சுவா மித்திரன் அவர்களின் எலிசே மாளிகை வரை எண்பதுகளில் பிரான்சு தமிழ்அரசியல் நடவடிக்கைகள் சென்றடைந்த போதும் விடுதலைப் போரின் வளர்ச்சி அதன் பிராந்திய உலகப் பரிமாணங்கள் பல்வேறு நடைமுறை இடைவெளிகளை அரசியல் தொடர்பாடல்களில் ஏற்படுத்தியிருந்தது. பிரான்சு தமிழ்அரசியல் செயற்பாடுகள் எதிர்கொண்ட அனுபவங்களே தமிழ்சமூகம் சமூக மட்டத்தில் தேசிய அரசியலை அணுகவேண்டும் எனும் அனுபவத்தினைக் கொடுத்தது. அதன் விளைவுகளாக நகரமட்டத்தில் சமூக அமைப்புக்கள் உருவாகத்தொடங்கின. எனினும் தொடர்பாடலின் மையப்புள்ளி தாயக அரசியல் சார்ந்த வேண்டுகோளாக அமைந்தமையினால் தேசிய உலக அரசியலின் நீட்சி தடங்கள்களை ஏற்படுத்தி வந்தது. மேலும் ஒன்றுதிரண்ட பெருமக்கள் திரள் என்கின்ற விம்பம் ஏற்படுவதற்கான காலம் நீணடதாகவிருந்தது. இதனால் பரஸ்பரம் இருதரப்பு தேவைகள் சார்ந்த சமூக உறவுகள் என்கின்ற தளத்தினை ஏற்படுத்துவது சிரமமானதாக அமைந்தது. அதற்கான வித்துக்கள் இடப்பட்டது என்று நிலையே நீடித்தது. மாறாக தமிழர் விளையாட்டு விழாவின் ஒன்றுதிரண்ட பண்பாட்டுத்தளத்திலான தொடர்பாடல் சமூகத்தளத்தில் பரஸ்பர புரிதலுடன் தேசிய தலைவர்களும், பிரான்சு ஈழத்தமிழ்சமூகமும் கைகுலுக்குவதற்கான சமூகத்தளத்தினை ஏற்படுத்தியது.

இந்நிகழ்வின் ஏற்பாட்டளார்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், உலகதமிழர் பண்பாட்டு இயக்கமும் மட்டுமல்ல பிரான்சின் முக்கிய மாநிலமொன்றின் நிர்வாகக் கட்டமைப்பும் விளங்கினார்கள். நகரசபைகள் உதவின. நகரபிதாககள் உதவினார்கள்.

எனது அனுபவத்தில் தமிழ்சமூகம் தேசிய அரசியலில் பங்குபெறலாம் என்ற 'ஆசைக்கு' வடிவம் கொடுத்த நிகழ்வுகளில் தமிழர் விளையாட்டுவிழா முக்கியமானது எனலாம். அது அதற்கான பாலத்தினை உருவாக்கியது. அலன் ஆனந்தனை இந்தவிடத்தில் முக்கிய வழிகாட்டியாக ஈழத்தமிழ்சமூகச் செயற்பாட்டாளர்கள் அன்று பார்க்கத் தொடங்கினார்கள். இன்று பத்திற்கு மேற்பட்ட தேர்வுசெய்யப்பட்ட நகரசபை உறுப்பினர்கள் இருக்கின்றமைக்கான உந்துதலை தமிழர் விளையாட்டு விழாவின் அனுபவங்கள் தமிழ்அரசியல் செயற்பாட்டுத்தளத்திற்கு வழங்கியது என்பதனை அதன் சாட்சியமாக இவ்விடத்தில் பதிவு செய்வது முக்கியமாகியுள்ளது.

தமிழர் விளையாட்டு விழாவின் பதினைந்து வருடப்பாதை இலகுவானதாக இருந்ததில்லை. தமிழ்சமூகத்தின் இந்த பன்முக வளர்ச்சியினை விரும்பாத சக்திகள் ஆரம்ப வருடம் தொட்டு இன்றுவரை இடையூறுகளை ஏற்படுத்தியே வந்துள்ளனர். நகரசபைகளுக்கும், உதவும் அரசியல்வாதிகளுக்கும் நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டன. எனினும் இந்நிகழ்வின் சமூக முக்கியத்துவமும், நிகழ்வு ஏற்பாட்டாளர்களின் அறமும் நிகழ்வினை இன்றுவரைப் பாதுகாத்து வருகின்றது.

தமிழர் விளையாட்டு விழாவின் எதிர்காலம் தமிழ்சமூகத்திற்கு முக்கியமானதாகவே அமையும். படிப்படியாக பிரான்சு தமிழ்சமூகத்தின் தலைமையும் - செயற்படும் வாய்ப்புக்களும் பிரான்சு தமிழ்சமூகம் என்று தன்னை முற்றிலும் அடையாளப்படுத்தும் இளையதலைமுறையிடம் செல்கின்றது. அந்த அடையாளம் ஏற்படுத்தும் சமூக அரசியல் தாக்கம் மிகவும் வீரியமானது. தாயக அரசியல் மற்றும் சமூக உறவுசார்ந்த உணர்வுதளத்தால் கட்டுண்டு கிடந்த மூத்த தலைமுறையிடமிருந்து தாயகவிடுதலையை நினைவுத்தளத்தில் - அறிவுத்தளத்தில் பார்க்கும் தலைமுறைக்கு சமூகத்தின் தலைமை மாற்றமுறும் காலகட்டம் இது. இந்த மாற்றமுறும் காலகட்டத்திற்கும், அதன் பிற்பாடும் தமிழர் விளையாட்டு விழா என்ற 'கட்டமைப்பு' முக்கிய பங்கினை ஆற்ற வேண்டியுள்ளது. தலைமுறைகள் சந்தித்தல் என்ற வடிவம், தலைமுறைகள் பாரம்பரியங்களை அறிதலும் – பங்கெடுத்தலும் என்ற தேவை, தேசிய அளவில் பிரதிபலிப்பதற்கான கூட்டு வலுவினை வெளிக்காட்டல் என்கின்ற அரசியல் புரிதல் என்பனவற்றிற்கான பொதுக்களம் தமிழர் விளையாட்டு விழா என்ற ஒன்று கூடல் என்பதே எனது புரிதலாகும்.

காலவோட்டத்தில் வாழும் நாட்டின் தாராளவாத அரசியல் பல்வேறு அரசியல் வடிவங்களை தமிழ்சமூகத்தில் உருவாக்கும். சமூகச்சிந்தனைகளில் கூட ஆயிரம் பூக்கள் மலரும். இவையனைத்தையும் தாண்டி, ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளாக அடுத்த நூறு ஆண்டுகளுக்கு கூட்டுத்தளத்தில் சந்திப்பதற்கான வாய்ப்பினை தமிழர் விளையாட்டு விழா போன்ற நெகிழ்வுமிக்க - உள்வாங்கும் வடிவினைக் கொண்ட சமூக நிகழ்வினால் மட்டுமே வழங்க முடியும்.

அடுத்த நூறுவருடங்களில், பொதுஅடையாளத்தின் அடிப்படையில் வருடத்தில் ஒருநாள் அனைவரும் கைகளைக் கோர்த்து பாரம்பரிய விளையாட்டுக்களை அடுத்தடுத்த தலைமுறைக்கும் அறிமுகப்படுத்தி, உணவுவகைகளை பரிமாறி ஒன்றுபட்டு நின்றால் அது பிரான்சு தமிழ்சமூகம் யூதசமூகம் போன்று வலுவாக வேறுபாடுகளிலும் ஒருமைப்பாட்டினை காண்கின்றது என்பதற்கு உதாரண சமூகமாகத் திகழும். அவ்வாறு வேர்விடும் விருட்சமே தாயகத்தினை தாங்கிப்பிடிக்கும் வலுக்கொண்டதாக உருவாகும். அதுவே பதினைந்து வருடத்திற்கு முன் தொடங்கபபட்ட முயற்சியின் இலக்காகும்.

ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளாய் ஒன்றுதிரளல் என்பதன் அர்த்தமும் அதுவே!

நடராஜா இளங்கோ

# தொழில் சங்கமும் தொழிலாளர் நலனும்

தொழில் சங்கம் என்பது தொழிலாளர்களின் நலன்களுக்காக இயங்கும் ஓர் அரசசார்பற்ற அமைப்பாகும் இதன் இலக்கு தொழிலாளர்களின் உளநீதியானதும் பொருளாதார தேவையினையும் முன்னெடுத்து நிறைவேற்றி வைப்பதாகும். பொருண்மிய முதலீட்டாளர்களின் முதலாளித்துவ வர்க்கமானது தொழிலாளியைக் கொண்டு அதிக வேலையைப் பெற்று அதற்காக குறைந்த ஊதியத்தை வழங்குவதாகும்.

தொழிலாளி தன் உரிமையை நிலை நிறுத்துவதானது முதலாளிக்கு அதிக செலவை ஏற்படுத்துகின்றது. ஊதிய மதிப்பாக தொழிலாளி வழங்கும் மேலதிக வேலைக்கு ஊதியம் எதுவும் வழங்கப்படு வதில்லை. அதனை-யே முதலாளிகள் தமது பெரும் மூலதனமாக திரட்டிக் கொள்ள வழிவகுக்கிறது. தொழிலாளர்களுக்கான உரிமைகளை தனித்து நின்று கேட்டால் பெறமுடியாது. தொழிலாளர்கள் அனைவரும் ஒரே பாதையின் கீழ் அணி திரண்டு உரிமை-களைப் பெற்றுக் கொள்ள முடியும் தொழிற்சங்கம் தொழிலாளர்களை தொழில் ரீதியாக வகைப்படுத்தி செயற்படுகின்றது.

அரசியல் மதம் வாழ்வியல் உரிமை பற்றிப் பார்ப்பதில்லை பெரும்பாலான தொழிலாளர்கள் சிறிய தொழில்ஸ்தாபனங்களில் குறைந்த ஊதியத்துக்கே பணியாற்றி வருகின்றனர் தொழிற்சங்கம் அவர்களைத் தனிமைப்படுத்தாது தொண்டர்களாக இணைத்து தொழிலாளர்களின் தொழில் நலன்களைக் கருத்தில் கொண்டு அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கின்றது தொழிற் சங்கத்தின் செயற்பாடானது அனைத்துத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை முன் வைப்பது. தொழிலாளர் செயற்பாடுகளை முன் நகர்த்துவது. துண்டுப்பிரசுரங்கள் மூலம் கோரிக்கைகளைப் பகிரங்கப்படுத்துவது போன்றவையாக அமையும் உதாரணமாக பாரீஸ் வர்த்தகத் தொழிற்சங்கம் ஞயிறு நாள் வேலை செய்வதை எதிர்த்து அனைவருக்கும் அந் நாளை விடுமுறை நாளாக்க வேண்டுமென்று போராடி வருகின்றது.

தொழிலகங்களில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தொழிற் சங்கம் தொழில் சட்ட உதவிகளை தொழிலாளர்களுக்கு வழங்கி அதன் அடிப்படையில் முதலாளிகளிடம் இருந்து தொழிலாளர் உரிமை-களைப் பெற்றுக் கொடுக்கின்றது முதலாளியைப் பொறுத்தவரை தொழிலாளியின் அனைத்து தொழில் சார் உரிமை-களை நன்கு தெரிந்திருந்தும் அதை அவர்கள் இலாப நோக்கின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதில்லை அதன-ால் தொழிற்சங்கம் சட்டத்தின் உதவியைக் கொண்டு போராட்டத்தை நடாத்தி உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கின்றது பிரான்சில் CGT என்ற தொழிற்சங்கம் மூன்று இலட்சம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மிகப் பெரிய தொழிற்சங்கமாக இயங்குகின்றது இச் சங்கத்தில் எத் தொழில் சார்ந்தவர்களும் உறுப்பினர்களாக இணைந்து கொள்ளலாம் நீங்கள் பணிபுரியும் தொழில்ஸ்தாபனத்தில் தொழில்ச் சங்கம் இயங்கிவரும் அதன் பிரதிநிதிகளோடு அல்லது நீங்கள் பணியாற்றும் இடத்திற்கு அண்மையில் தொழிற்சங்க மையங்கள் இருந்தால் அவர்களை நாடி உங்கள் தொழில் சார் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம் சங்கத்தில் சேரும்போது உங்கள் வருமானத்திலிந்து ஒரு வீதத்தை சந்தாப்பணமாக செலுத்துதல் வேண்டும் என்பது தொழிற்சங்க நடைமுறை.

CGT தொழிற்சங்கம் சார்பாக
Remy Frey

# உடல் உள ஆரோக்கியமும் விளையாட்டும்

ஒரு ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு கல்வி, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தனவோ அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டாகும். உலகில் எந்தவொரு நாட்டை எடுத்துக் கொண்டாலும் அந்த நாடுகளிலுள்ள கல்வி நிறுவனங்கள் கல்வியுடன் சேர்ந்து விளையாட்டையும் கற்பிப்பதைக் காணலாம். ஆரம்ப காலங்களில் விளையாட்டுகள் சகல சூழ்நிலைக்கேற்பவும், மனிதரின் அறிவாற்றலுக்கமையவும், படிப்படியாக தோற்றம் பெறத் தொடங்கின. அவ்வாறு பல்வேறு சமூகங்களுக்கிடையில் வேறுபட்ட விளையாட்டுகள் நடைமுறையிலிருந்தபோதிலும் அவற்றில் பல பொதுத்தன்மை வாய்ந்தனவாக காணப்பட்டன. அவை காலப்போக்கில் ஒருங்கிணைக்கப்பட்டனவாக விதிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டு போட்டிகளாக அமைக்கப்பட்டன. பின்னர் பாட-சாலை ரீதியாக, மாவட்ட ரீதியாக, மாகாண ரீதியாக, தேசிய ரீதியாக, சர்வதேச ரீதியாக மிகச் சிறந்த போட்டிகளாக நடைபெறத்தொடங்கின.

இன்றைய காலகட்டத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள் மட்டுமன்றி சமூகத்திலுள்ள அனைவருமே கால ஓட்டத்திற்கேற்க சக மனிதருடன் போட்டி போட்டுக்கொண்டு வாழவேண்டியவர்களாக இருக்கின்றோம். இதற்குப் பலம் வாய்ந்தத உடலும், உறுதியான மனமும் அவசியமானவையாக இருப்பதனால் அவற்றை பெற்றுத்தரக்கூடிய உடற்பயிற்சியும் விளையாட்டும் இன்றியமைதானவாகும். கிரேக்க பழமொழியொன்றில் 'உறுதியான உடலில் தான் உறுதியான மனம் குடியிருக்கின்றது. என்று கூறப்படுகின்றது. உறுதியான மனம் போட்டிகளில் எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலைக் கொடுப்பதுடன் இலகுவில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பையும் பெற்றுத் தருகின்றது. போட்டிகளில் வெற்றிபெறுகின்றவன் வாழ்க்கையிலும் வெற்றி பெறுவதற்கான திறனைப் பெறுகின்றான்.

மாணவர் பராயத்திலிருந்து சிலர் விளையாட்டில் எவ்வித ஈடுபாடுமற்றவர்களாக இருப்பதைக் காணலாம். அவர்களில் சிலர் கல்வியை மட்டும் முதன்மை நோக்காகக் கொண்டு தமது கவனத்தைச் செலுத்துவர். இன்னும் சிலர் விளையாட்டுக்கே முன்னுரிமை கொடுத்து கல்வியை இரண்டாந்தர நிலைக்கு தள்ளிவிடுவர். கல்வி மனிதனுக்கு அறிவை வளர்ப்பதுடன் வாழ்க்கைக்கு வழிசமைக்கின்றது. ஆனால் விளையாட்டு உடலுக்கு வலிமையளிப்பதுடன் அறிவை கூர்மைப்படுத்த உதவுகின்றது. 'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்' நல்ல உடல் வளம் இருந்தால் தான் உறுதியான மனவளம் இருக்க முடியும். அவ்வாறான உளவலிமையுடையவர்களால்தான் வாழ்க்கையில் எந்தவ் சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிபெறமுடியும்.

இங்கு விளையாட்டின் உண்மையான நோக்கத்தினையும் அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்களையும் நாம் உணர்ந்து கொள்வது அவசியமாகின்றது விளையாட்டு.

1. உடலுக்கு வலிமை அளிப்பதுடன் உடலின் சீரான இயக்கத்தை ஏற்படுத்துகின்றது.
2. இரத்தத்தை சுத்திகரிப்பதன் மூலம் நோய்கள் வராமல் தடுப்பதுடன் ஆரோக்கியத்தை வழங்குகின்றது.
3. உடலிலட சுறு சுறுப்பை ஏற்படுத்தி அன்றாட வாழ்க்கையின் செயற்பாடுகள் இலகுவாக்குகின்றது.
4. சம மனிதருடன் சீரான நட்புறவு வளர்வதற்கும், குழு ஒற்றுமை உருவாகுவதற்கும் வழிவகுக்கின்றது.
5. உடல் உள ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதன் மூலம் நல்ல உறக்கத்தை அளிக்கின்றது.
6. வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கும் மன நிலையை உருவதக்குகின்றது.
7. சமூகங்களுக்கிடையில் நாடுகளுக்கிடையில் சுமுகமான நட்புறவை வளர்க்க உதவுகின்றது.
8. நல்ல தொழில் வாய்ப்பை பெற்றுத் தருவதுடன் விளையாட்டு தொழில் வளமாக மாற்றமடைந்து கணிசமான ஊதியம் பெற்றுக்கொள்ள வழிவகுக்கின்றது.

மேற்குறிப்பிட்ட உன்னத நோக்கத்தினையும் சிறந்த பயன்களையும் விளையாட்டு கொண்டிருக்கின்ற போதிலும் அவற்றை கருத்தில் கொள்ளாது எவ்வித நோக்கமுமின்றி குறுகிய நலன்களுக்கும், சுயநலத்தேவைகளுக்கும் விளையாட்டை ஊக்குவிப்பது போன்று பாவனை செய்து அதனுடைய நோக்கத்தையே திசை திருப்புவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. எந்தவொரு நாட்டிலும் கல்வி, சுகாதாரம், நிதி, விவசாயம், பொதுப்பணி போன்ற ஒவ்வொரு விடயங்களுக்கும் துறைகள் உருவாக்கப்பட்டு செயற்படுவது போல விளையாட்டுத்துறைக்கென தனிய-ான விளையாட்டுத்துறை அமைக்கப்பட்டுள்ளன. இதற்கென துறைசார் தேர்ச்சியும், தகுதியும், அனுபவமும் பெற்ற பலர் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். இங்கு விளையாட்டுகள் நல்ல முறையில் திட்டமிடப்பட்டு விதிமுறைகள் உருவாக்கப்பட்டு போட்டிகள் ஒருங்கமைக்கப்படுகின்றது. அத்துடன் விளையாட்டு நடத்துனர்களுக்கும் விளையாட்டில் பங்குபற்றும் போட்டியாளர்களுக்கும் உரிய முறையில் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

சூழ்நிலைகளுக்கேற்பவும், ஒவ்வொருவருடைய தோற்றம், உடல்வலிமை, திறமை, ஈடுபாடு என்பனவற்றுக்கு அமையவும், தேர்ந்தெடுப்பதற்கு எத்தனையோ விளையாட்டுகள் இருக்கின்றன. ஏதேனும் ஒரு விளையாட்டில் ஈடுபடுகின்றவர் வாழ்நாள் முழுவதும் தனது உடல்நலத்தை நல்லமுறையில் பராமரித்துக் கொள்வதுடன் எப்போதும் மகிழ்ச்சியுடனும், இளமையுடனும் தோற்றமளிப்பதைக் காணலாம். இளமையில் தேடிக்கொள்கின்ற வலிமையும், சக்தியுமே முதுமையிலும் ஒருவருக்கு கைகொடுக்கும் என்வேதான் கல்வி, வேலை போன்ற முக்கிய விடயங்களைப் போன்று விளையாட்டுக்கும் நேரம் ஒதுக்கவேண்டும். ஓடுவதும், பாய்வதும், எறிவதும், மனிதனின் தோற்றத்திலிருந்தே இயற்கையாக இயல்பாக உருவான திறன்களாகும். இவை கால ஓட்டத்திற்கேற்ப திருத்தியமைக்கப்பட்டு விதிமுளைகளுக குட்படுத்தப்பட்டு விளையாட்டுப் போட்டியாக நடைபெறத்தொடங்கின. விளையாட்டுக்கள் தனிநபர் போட்டிகளாகவும், குழு நிலை போட்டிகளாகவும் மைதான விளையாட்டுக்களாகவும் உள்ளரங்க விளையாட்டுக்களாகவும் (ஐனெழயச பயஅநள) அமைக்கப்பட்டன.

விளையாட்டுப் போட்டிகளின் தோற்றத்தை சரியாக வயைறுத்துச் சொல்ல முடியாவிட்டாலும் கிரேக்க நாட்டின் 'ஒலிம்பியா எனும் மலையடிவாரத்தில் கி.மு.776 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கிரேக்கர்களின் தெய்வத்துக்கான கொண்டாட்டமாக தோற்றம் பெற்றதாக வரலாறு கூறுகின்றது. நான்காண்டுகளுக்கு ஒரு-முறை நடைபெற்று வந்த இப்போட்டிகள் காலப்போக்கில் இடை நிறுத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. சுமார் 1500 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறாதிருந்த ஒலிம்பிக் போட்டிகள் 1896 இல் மீண்டும் புத்துயிர் பெற்றது. பிரான்ஸ் நாட்டைச் சார்ந்தவரான பாரன்பியரே கோபோட்டன் என்பரே நவீன ஒலிம்பிக் போட்டிகள் மீண்டும் புத்துயிர் பெற வழிவகுத்தார். உலக மக்களுக்கிடையிலான நட்புறவை வளர்ப்பதற்கும், நாடுகளுக்கிடையேயான சுமூகமான உறவு நிலையை உருவாக்குவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களை இணைக்கும் அடையாளச் சின்னமாக ஒலிம்பிக் கொடியில் ஐந்து வளையங்கள் ஐந்து வர்ணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

நான்காண்டுகளுக்கொருமுறை நடைபெறும் இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான சான்றிதழ்களும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம், போன்ற பதக்கங்களும் வழங்கப்பட்டன. விளையாட்டு வீரர்களுக்கு உற்சாகம் அளிப்பதும், விளையாட்டில் அதிக ஆர்வத்தை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். உலகின் எந்தவொரு மூலையில் பிறந்த ஒரு விளையாட்டு வீரனிடம் திறமையும், ஆற்றலும் இருப்பின் சர்வதேச அரங்கில் அவனின் திறமையை வெளிக்கொண்டுவர வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டில் தொடர் ஈடுபாட்டைச் செலுத்துவதற்கும், உடல்உள ஆரோக்கியத்தை வளர்ப்பதற்கும் கிராம மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம்வரை விளையாட்டுப் போட்டிகள் இன்றியமைதானவாகும். விளையாட்டின் நோக்கத்தையும், முக்கியத்துவத்தையும் ஒவ்வொரு விளையாட்டு வீரனும் உணர்ந்து விளையாட்டில் ஈடுபாடு கொண்டு போட்டிகளில் நேர்மையுடன் கலந்து கொண்டு வெற்றி பெற்று தான் பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்க்க வேண்டும்.

றோணி மருசலீன் B.A (Hons)

Bonjour à tous,

Je suis très heureuse de partager ces quelques mots avec vous.

Tout d'abord, félicitations à O.R.T. France pour leur quinzième «  Grande Rencontre Sportive Tamoule ». C'est avec le plus grand plaisir et honneur que je me joins à vous pour partager cette magnifique journée.

Chaque année, c'est une journée tant attendue par les Tamouls depuis ces quinze dernières années. Non seulement, nous oublions nos souffrances quotidiennes pendant ces quelques heures mais nous revivons aussi nos bons souvenirs passés au pays.

O.R.T. France a été présent aux cotés des Tamouls dans les meilleures et dans les pires des situations. Leur chemin a été long. Beaucoup de personnes l'ont traversé. Des hommes et des femmes, de tous âges, ont été bénévoles dans cette organisation. Ils ont consacré tout leur temps libre pour aider la communauté Tamouls du Sri Lanka à travers l'O.R.T France. Les Tamouls n'ont pas été les seuls bénévoles, des étudiants de toutes communautés et des politiciens Français ont également soutenu les actions humanitaires menées par l'O. R.T France.

Victimes de la guerre et des catastrophes naturelles, les Tamouls ont souffert depuis toujours. Leurs souffrances continuent aujourd'hui. Personne ne pourra oublier le tsunami en 2004 et le génocide en 2009 qui ont fait des milliers de morts et de victimes. Les tamouls ont tout perdu. Leurs proches, leurs biens, la paix, encore et encore…

Actuellement, on entend souvent autour de nous : « La guerre est finie chez vous. Tout va bien ».

« Non », j'ai envie de crier en haut d'un toit. J'ai envie de dire une fois pour toute : « Non, rien est fini au Sri Lanka. Au contraire, tout a empiré ». Tous les jours, des hommes se font enlever. On retrouve leur cadavre quelques jours plus tard avec des cicatrices de violentes tortures. Les femmes et les petites filles de 11, 12 et 13 ans se font violer. Pas de nourriture, pas de toits, pas d'eau potable, pas d'écoles, pas d'hôpitaux, pas de travail, pas d'argent ! La liste est très longue.

Chaque jour, des mères de famille se suicident parce qu'elles ne peuvent pas nourrir leur enfant. Après 3 ans, de soit disant « fin de guerre », tout cela se passe au Sri Lanka, encore aujourd'hui en juillet 2012. Nous, les Tamouls vivant en France et dans le monde entier, souffrons également de cette situation. Nous ne savons plus trop quoi faire pour sauver nos familles au Sri Lanka. A ce jour, tout le monde est bien au courant de la réalité mais malheureusement, peu de personnes veulent nous aider.

Moi, femme Tamoule autant qu'une mère, demande à toutes personnes de ne pas abandonner cette communauté. Nous avons des devoirs et des obligations envers notre pays.

Que pouvons-nous faire pour subvenir aux besoins de nos proches en restant en France ? Nous avons deux choses importantes à faire :

- La première est d'apporter toute l'aide humanitaire possible pour ne plus laisser aucun enfant mourir de faim. Parrainer un enfant est la meilleure et l'urgente solution pour éviter les suicides.

- La deuxième est de parler de la réelle situation du Sri lanka autour de soi. Nous ne sommes pas obligés d'être membre d'une association pour le faire. Nos voisins de palier, nos collègues de travail, nos camarades de l'école peuvent aussi nous apporter une solution.

A cette occasion, je remercie, au nom des Tamouls et surtout des femmes et des enfants, toutes personnes qui ont été avec nous et qui continuent à être à nos côtés pendant nos souffrances.

Merci à l'O.R.T. France de m'avoir donné l'occasion d'exprimer mes sentiments avec mes amis.

Bonne journée.

Mme Suba KURUPARAN
Comptable



www.padippakam.com



# புலம்பெயர் வாழ்வும் தமிழர் விளையாட்டு விழாவும்

புலம் பெயர்தல் என்ற ஓர் வார்த்தையின் மூலம் பல இலட்சம் ஈழத் தமிழர்கள் வெளிநாடுகளிலே வசித்து வருகின்றார்கள் உயிரைக் காப்பதற்கே வந்த ஈழ அகதிகள் என்றும் முத்திரை குத்தப்பட்ட தமிழ் இனம் தனது இனம், மொழி, கலை, கலாச்சாரம் சார்பாக மிகப் பற்று உள்ள இனமாகவே வாழ்ந்து வருகிறது என்ற திண்ணத்தை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. துறை சார்ந்த விடயங்களிலும் ஈழத் தமிழர்கள் அன்று தொடக்கம் இன்று வரை சாதிக்கும் சக்தியாகவே இருந்து வந்துள்ளார்கள். தமக்கே உரியதாக தலைசிறந்த விடயங்களை துறைகளிலே நமது மூதாதையர்கள் புகுத்தி இருக்கிறார்கள்.

புகுத்தப்பட்ட துறைகளிலே விறையாட்டுத்துறையை எடுத்துக் கொண்டால் வடகிழக்கில் மட்டுமல்லாது இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்கள் அன்று தொட்டு இன்று வரை விளையாட்டின் ஒவ்வொரு பிரிவுகளிலும் கூடுதலான பதிவுகளை நிகழ்த்தி சாதனை புரிந்து வந்திருக்கிறார்கள். சாதனை புரிந்த பல விளையாட்டு வீரர்கள் புலம்பெயர்ந்து இன்று வெளிநாடுகளிலே வாழ்ந்து வருகிறார்கள். நவீன விளையாட்டுக்களிலே கவனம் செலுத்தி வாகை சூடும் தமிழர்கள் தமது பாரம்பரிய விளையாட்டுகளையும் நேசித்து அதைப் போட்டியாகவும் மாற்றி பின்பற்றி வருகிறார்கள். இந்த பாரம்பரிய விளையாட்டுகளிலே பல சுவாரசியங்கள் நிறைந்திருக்கிறது. பல தத்துவங்கள் பொதிந்து இருக்கிறது. சுவாரசியங்களை ரசிப்பதற்காகவும் தத்துவங்களை வெளிக்கொணர்வதற்குமாக தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் உருவாக்கப்பட்டதே தமிழர் விளையாட்டு விழா ஆகும்.

நமது ஊர்களிலே நாம் விளையாடிய அந்த விளையாட்டுக்களை மீட்டல் செய்ய வருடா வருடம் தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்கள் அனைவரும் சேர்ந்து விளையாட்டு விழாவை நடாத்துவது மகிழ்ச்சிக்குரிய விடயம் மட்டுமல்ல புதிய தலைமுறையினர் நமது தமிழ் மரபு ரீதியாக விளையாட்டுக்ளை கண்டு களிப்பதற்கும் எதிர்காலங்களிலே அதை பின்பற்றுவதற்கும் ஒரு தலைசிறந்த களமாகவே தமிழர் விளையாட்டு அமைகிறது. போட்டியாக இருந்த விளையாட்டுக்களை நடாத்தி பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பது பராட்டுக்குரிய விடயமாகும். Le Bourget மைதானத்தில் ஒரு நாள் எல்லா விளையாட்டுக்களையும் கண்டு களிப்பது மிகமிக களிப்பான விடயமாகவே இருக்கின்றது. தமிழர் விளையாட்டு விழா என்ற நாமத்தை உருவாக்கி அதை செயல்படுத்தி வருடா வருடம் அதை நெறிப்படுத்தி எம் மனங்களிலே பாரம்பரிய விளையாட்டுக்களை பதிய வைக்கின்றது தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

பல நிகழ்வுகளை நடாத்தி இளம் சமுதாயத்தின் திறன்களை வெளிக்கொணரும் புனர்வாழ்வுக் கழகம் விளையாட்டு விழா எனும் நிகழ்வை பாரம்பரிய விளையாட்டுக்களோடும் ஒப்பிட்டு நிகழ்த்துவது மகிழ்ச்சிக்குரிய சிந்தனை துளி ஆகும். இந்த சிந்தனை துளியை மேலும் வலுப்படுத்தி விளையாட்டு வீரர்களும் பார்வையாளர்களும் இயன்றளவு ஒத்துழைப்பு நல்குவோம்.

எமது பாரம்பரிய அடிச்சுவடிகள் தூசி தட்டி மீண்டும் மீண்டும் பொன் எழுத்துக்களால் நவீன யுகத்தில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றே ஆகும். ஆகவே எமது பாரம்பரிய மண்ணில் பிரான்ஸில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் விளையாட்டு விழாவுக்கு தமிழ் மக்களாகிய நாம் தோளோடு தோள் கொடுத்து நிற்போம்.

15 ஆவது தடவையாக நடைபெறும் விளையாட்டு விழாவை நேசித்து அதிலே பங்கெடுத்து பல விதங்களிலும் எமது ஒத்துழைப்பை நல்குவோம். இதைப்போலவே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் ஒவ்வோர் நிகழ்விலும் அவர்களோடும் இணைந்து ஓர் நல் நோக்கோடு சேவை செய்வோம்.

நன்றி

தங்கராசா சுதர்சன்



படிப்பகம்

அன்பு உறவுகளே,

## முயன்று பாருங்கள் - வாழ்வில் உயர்வு வரும்

சாதாரண மனிதர்கள் போல் நாமும் வாழ்வதற்காக, நமது உரிமைகளையும், நமது மண்ணையும் கேட்ட ஒரே காரணத்தால், சொந்த மண்ணில் இருந்து அடித்து விரட்டப்பட்ட பாவப்பட்ட இனம் எமது தமிழ் இனம். பிறந்த மண்ணில் சுதந்திரமாய் வாழ ஆசைப்பட்டோம், இன்று வேற்று மண்ணில் அகதிகளாய், பரிதவிக்கின்றோம். ஈழத்தில் இன ஒடுக்குமுறையாளர்களின் கையில் சிக்கி எமது இனம் பட்ட துன்பங்களும், இன்று வரை அனுபவித்துக்கொண்டிருக்கும் துயரங்களும் சொல்லில் அடங்காது. அதற்கு ஒரு விடிவு வராதா என்று ஏங்கி நிற்கும் இவ்வேளையில், பல தலை-முறைகளாக அகதிகளாக அலையும் எம்போன்ற புலம்பெயர் தமிழரின் நிலையும் கவலைக்குரியதே !

ஈழத்தில் அழிக்கப்படும் எம் இனத்தைக் காப்பதா ? இல்லை புலம்பெயர் தேசத்தில் சிதைந்து போகும் எமது உறவு-களை எண்ணி வருந்துவதா ? மிக முக்கியமான காலகட்டத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இன்று 15வது மாபெரும் தமிழர் விளையாட்டு விழாவை நடாத்திக்கொண்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் களத்திலும் புலத்திலும் எமது மக்களுக்கு ஆற்றிய சேவைகள் மிகப்பெரியது. போரினால் மக்கள் அழிக்கப்படும் போதாகட்டும், இயற்கை அனர்த்தங்களில் மக்கள் பாதிக்கப்படும் போதாகட்டும் மக்களுடன் மக்களாக இணைந்து அவர்களுக்கு உதவு-வதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு இணை தமிழர் புனர்வாழ்வுக் கழகமே. அந்த வகையில் பிரான்ஸ் நாட்டில் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து சில வருடங்கள் பணியாற்றியவர் என்ற வகையில் நான் மிகுந்த மன நிறைவும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

குறிப்பாக 2004ம் ஆண்டு, எமது நாட்டையும் மக்களையும் சுனாமி எனும் பேரலை தாக்கியபோது, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து நான் செயற்பட்ட அந்த நாட்கள் எனக்குப் பல அனுபவங்களையும், பாடங்களையும் கற்றுத்தந்தது. அதே நேரம், இப்படியான பல செயற்பாடுகளின் போது, பல வருடங்களாக எமது மக்களையும், அவர்கள் புலம்பெயர் தேசங்களில் வாழும் வாழ்க்கை முறைகளையும் காணும் சந்தர்ப்பமும் எனக்கு அமைந்தது. அவற்றில் சில வகையானது எமது மக்களை எண்ணி மிகப் பெருமையடைய வைத்தன. எம்மை என்னதான் எமது நாட்டைவிட்டு துரத்தி அடித்தாலும், தமிழன் எங்கும் தலை நிமிர்ந்து நிற்கின்றான் பார் என்று மார்தட்ட வைத்த சம்பவங்கள் பல. அதே நேரம், புலம்பெயர்ந்தாலும், தமிழர் தலையெழுத்து மாறாதா என்று வருத்தப்பட வைத்த சம்பவங்களும் எத்தனையோ.

பிரான்ஸ் நாட்டில் நான் கடந்த 27 ஆண்டுகாலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். எனது 12வயதில் நான் இந்த நாட்டிற்கு வந்து மொழி தெரியாமல், பண்பாடு புரியாமல் பட்ட கஷ்டங்கள் பல. அதே நேரம் இப் புலம்பெயர் தேசத்தில் பல இனமக்களுடன் பழகும் வாய்ப்புக்களும், அவர்கள் இந்நாட்டில் தங்கள் வாழ்கை முறைகளை எப்படி அமைத்துள்ளார்கள், பிள்ளைகளை எப்படி வளர்க்கின்றார்கள் போன்ற முக்கியமான விடயங்களை அறிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களும் எனக்கு அமைந்தது. அவர்களுடன் எம்மையும், எமது வாழ்க்கை முறைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது ஓர் தவிர்க்கமுடியாத விடயமாக இருக்கின்றது. அதே நேரம் இத் தேசத்தில் பிறந்து வளர்ந்து வரும் எமது இளைய சமுதாயத்தினருடன் பழகும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் அவர்கள் மனநிலை பற்றி நான் ஆவலாக அறிந்துகொள்வேன். ஆனால் அவர்களிற்கும் எங்களிற்கும் நடுவில் பல விடயங்களில் பெரும் இடைவெளி இருப்பது என்பது பெரும் கவலைக்குரிய உண்மை. எந்தவொரு சமூகத்தையும், அதன் பண்பாடுகளையும் கட்டிக் காப்பதில் பெரும் பங்கையும், பொறுப்பையும் ஏற்பவர்கள் பெண்களே. அந்த வகையில், நானும் இந்தப் பகிர்வை ஒரு பெண்ணாக எனது பார்வையிலிருந்தே எழுதுகிறேன். அன்றிலிருந்து இன்று வரை, புலம்பெயர் தேசத்தில் எமது வாழ்கையை மீட்டுப் பார்க்கின்றேன்.

பல வருடங்களுக்கு முன் பெரும்பாலும் ஆண்களே அகதியாகவும் வேலை வாய்ப்புத் தேடியும் புலம் பெயர்ந்தார்கள். மனைவி மக்களை விட்டு வந்து, தனிமையில் பொருளாதாரம் தேடினார்கள். பின் மனைவி பிள்ளைகளை தங்களுடன் இணைத்துக்கொண்டனர். அந்தக் காலத்தில் எல்லாம் இப்பொழுது இருக்கும் எந்தவொரு வசதி வாய்ப்புகளும் இங்கு இருக்கவில்லை. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, வதிவிடம், வேலை வாய்ப்பு என்று அனைத்திற்குமே போராடவேண்டியதாக இருந்தது. ஒரு தூள் போத்தல் வாங்க வேண்டும் என்றாலும் எங்கெல்லாமோ அலைய வேண்டியிருந்தது. இன்று காணுமிடமெல்லாம் எம்மவர் தலைகள் தெரியும். ஆனால், இது அன்று இருக்கவில்லை. தமிழர் அதிகம் வாழும் இடமென்றால் அங்கே எம்மவர் இன்று சொந்த வீடு கூட வாங்க மறுக்கின்றனர். ஆனால் அன்று எங்கேயாவது தூரத்தில் ஒரு தமிழரைக் கண்டாலும் ஓடிச்சென்று, நீங்கள் தமிழா ? என்ற ஒரு கேள்வியோடு தொடங்கி முடிவில் அவர் சாதகமே எம் கையில் இருக்கும். போட்டி, பொறாமை, பேராசை, போலி கௌரவம் என்ற எதற்குமே இடமிருக்கவில்லை. ஒரு சிறிய அறையில் பலர் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் சமையல் முறை, இரவில் ஒருவர் தூங்கினால் பகலில் மற்றவர் அதே இடத்தில் தூங்குவார். ஒரு ஒழுங்கான, ஒழுக்கமான வாழ்வு முறை இருந்தது. இன்று ஸ்கைப் (Skype), பேஸ்புக் (Facebook), என்று 24 மணி நேரத்தையும் அதனுடன் கழிக்கும் காலம்போல் அன்றில்லை. வீட்டிலிருந்து எப்படா கடிதம் வரும், ஊர்ச்செய்தி வரும் என்று ஏங்கிய காலம் அவை. ஒருவர் கஷ்டத்தில் மற்றவர் மனதாரப் பங்கெடுத்துக்கொண்டனர், ஆறுதலாக இருந்தனர். பெரும் பாலானவர்கள் நல்ல படிப்பும் தொழிலும் புரிந்துவிட்டு வந்து, இங்கே கஷ்டமான, மனதிற்கு வேதனையான வேலைகள் செய்து வந்தனர். இருந்தும் மனதைத் தளரவிடாமல் செயற்பட்டனர். முதலாவது புலம்பெயர்ந்தவர்களின் வாழ்வு இப்படியாக இருந்தது.

அடுத்து இரண்டாமவர். அவர்களில் சிலர் என்னைப் போல் பொருளாதாரம் தேடி வந்த பெற்றோர்களுடன் வந்து இணைந்தவர்கள். கூடுதலானவர்கள் நாட்டுப் பிரச்சினை காரணமாக அகதிகளாக வந்த இளம் வயதைச் சேர்ந்தவர்கள். அதிலும் அதிகம் ஆண்களாகவே இருந்தனர். அவர்களின் நிலை பெரும் கவலைக்குரியது. பெற்றோரை உறவுகளை விட்டு, சொந்த மண்ணை விட்டு, உயிரைக் காப்பதற்காக ஓடி வந்தவர்கள். வீடுகளை காணிகளை விற்று, அதுவும் போதாதென்று கடன் வாங்கி, வட்டிக்கெடுத்து, வீட்டில் உள்ள நகை நட்டுக்கள் எல்லாவற்றையும் விற்று, பிள்ளையின் உயிர் மட்டும் காத்தால் போதுமென்று எத்தனை பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இப் புலம்பெயர் நாடுகளுக்கு அனுப்பிவைத்தார்கள். நாட்டைவிட்டு பிள்ளை வெளியேறியதும், தங்கள் பிள்ளையின் உயிரைக் காப்பாற்றி விட்டோம் என்ற மன நிறைவோடும், நிம்மதியோடும் அவர்கள் அங்கே இருக்கின்றார்கள். ஆனால் ஒவ்வொரு பிள்ளையும் தான் சேரவேண்டிய நாட்டை வந்தடையும் வரை எத்தனை கஷ்ரங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகிறான். சொந்த மண்ணில் அறிந்திராத பசி பட்டினி, குளிர், பயம், அவமானம் என்று எத்தனை வகை துன்பங்களுடன் வந்தடைகிறான். எத்தனையோ பேர் பாதி வழியிலேயே செத்து மடிந்தனர், காணாமல் போயினர். இப்படியெல்லாம் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்து வந்தவர்கள். இங்கு வந்து சேர்ந்த பின்பாவது நிம்மதியாக வாழ்கிறார்களா? இல்லை. அவர்களின் அடுத்த கட்ட துயரமான வாழ்க்கை இங்கு தான் ஆரம்பிக்கின்றது.

பெரும் பாலானோர் இங்கு எந்தவொரு சொந்த பந்தமும் இல்லாமல் தனிமையில் வந்தவர்கள் தான். 16 வயதிலிருந்து 20 வயதிற்கு உட்பட்டவர்கள் தான் பெரும் தொகையாக வந்து சேர்ந்தனர். அங்கு அம்மா சமைத்துச் சாப்பாட்டைத் தட்டில் போட்டுக்கொண்டு சாப்பிடடா தம்பி, சாப்பிடு என்று பின்னாலும் முன்னாலும் திரிந்தாலும், பசி இல்லை, ருசி இல்லை என்று சாக்குப் போக்குச் சொல்லித் திரிந்தவர்களெல்லாம் இங்கு வந்து தம் கைகளாலேயே, அவிந்ததோ இல்லையோ, உப்போ உறைப்போ, சமைத்து உண்டுவிட்டு மெற்றோ (Métro) பிடிக்க ஓடுவதும், பத்துறோன் (Patron) இன் பேச்சிற்கும், செப் (Chef) இன் பார்வைக்கும் பயந்து பயந்து வேலை செய்வதும் நாளாந்த வாழ்க்கை ஆகிவிட்டது. அப்படி கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை எல்லாம், கேஸ் எழுதுவதற்கும் புருவ்ஸ் (proofs) எடுப்பதற்கும், வழக்கறிஞருக்கும், மொழிபெயர்ப்பாளருக்கும் கொடுத்தே நொந்து விடுவார்கள். அப்படிக் கொடுத்தும் பல வருடங்களாக விசா கிடைக்காமல் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் எத்தனையோபேர். இவர்களில் எப்படியோ கஷ்டப்பட்டு விசா கிடைத்தவர்கள், ஒரு வழியாக உழைத்து வீட்டில் வாங்கிய கடன்களை எல்லாம் கொடுத்து முடித்து, அக்கா தங்கைகளிற்குத் திருமணம் செய்து வைத்து, ஊரில் அப்பா அம்மாவிற்கு புது வீடும் கட்டிக்கொடுத்து, காணி பூமி என்று வாங்கிவிட்டு, திரும்பவும் வெளிநாட்டில் கடன் வாங்கி (கிரெடிட் எடுத்து) மிச்சம் இருக்கும் தம்பி தங்கைகளை வெளிநாட்டிற்கு கூப்பிட்டு விட்டு, அவர்களுக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்தபின் அப்பாடா என்று சொல்லும் போது, இவர்களின் வயதுகள் 35 - 40 தொட்டுவிடும்.

அப்போது தான், சொந்த பந்தம், உற்றார் உறவுகள் எல்லோரும் கூறுவார்கள் உனக்கும் வயது வந்துவிட்டது, இனி உனக்கென்று ஒரு வாழ்க்கை வேண்டாமோ ? என்று, அதன் பின் அவர் வெளிநாட்டு மாப்பிள்ளை ஆகிவிடுவார். ஈபிள் கோபுரம் முன்பும், றாவைந உஊரசஉஊ முன்பும் நின்று எடுத்த பல- வகைப் புகைப்படங்கள் ஈழத்தைப் போய்சேரும். அங்கு விசா உள்ள நல்ல மாப்பிள்ளை என்ற பெரும்

தகுதியுடனே மணமகள் தேடும் படலம் தொடரும். அழகான பெண்ணாக, படித்த, சாதி, சீதனம் எல்லாம் சரிவர அமைந்த பெண்ணாக தேர்ந்தெடுத்து இங்கு அனுப்பி வைப்பார்கள். அந்தப் பெண்ணும், தான் பெரும் அதிர்ஷ்டக்காரி என்ற பெருமிதத்துடன், சொர்க்கத்திற்கே போகும் எண்ணத்துடன் இப் புலம்பெயர் நாட்டிற்கு (தானும் ஒரு அகதியென அறியாம-லேயே) வந்திறங்குவாள்.

அதன் பின் அவர்கள் இருவரும் இணைந்து வாழும் வாழ்க்கையும், அவர்கள் பிள்ளைகளின் வாழ்க்கை முறையும் தான் இன்று பலதரப்பட்ட ஏற்ற இறக்கங்களாக உள்ளன. நாம் அனைவரும் இது பற்றிச் சற்று சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். பெரும் பாலான எமது தமிழ்க் குடும்பங்களில் நாம் ஒரே வகையான பல பிரச்சினைகளைத்தான் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். குடிப்பழக்கம், அளவிற்கதிகமான கடன் (Crédits) பிரச்சினைகள், குழந்தைகளிற்கும் பெற்றோரிற்கும் நடுவிலான இடைவெளிகள், இளம் வயதினரின் திடீர் மரணங்கள், தற்கொலைகள் என்று நீண்டு கொண்டே போகிறது. நான் முன்பு கூறியது போல், தமது இளம் வயதில் படாத பாடுகள் எல்லாம் பட்டுவிட்டு, சுமக்கமுடியாத சுமைகள் எல்லாம் சுமந்துவிட்டு, 35-40 வயதிற்கு பின் தமக்கென்ற ஒரு வாழ்வை அமைத்துக்கொள்ளும் எமது ஆண் சகோதரர்களில் சிலர் பெரும் பாலும், ஆசையுடனும், உற்சாகத்துடனும் ஆரம்பிக்க வேண்டிய தமது இல் வாழ்க்கையை பெரும் சலிப்புடனேயே ஆரம்பிக்கின்றனர். பலர் விதி விட்ட வழியென்று தமது குடும்பத்திற்காக தொடர்ந்தும் உழைத்துக்கொண்டே இருக்கின்றனர். பெற்றோருக்காக, சகோதரர்களிற்காக, மனைவி பிள்ளைகளுக்காக தமது வாழ்வையே மெழுகுவர்த்தியாக உருக்கிக்கொண்டு இருக்கின்றனர். எனக்காக என்று தமக்காக எதையுமே செய்ய விரும்புவதோ முன்வருவதோ இல்லை. தமது உடல் நலத்தில் கூட கவனம் செலுத்துவதும் இல்லை. மன-தில் உள்ள குறைநிறைகளை மற்றவரிடத்திலும் பகிர்ந்துகொள்ளுவதுமில்லை. பெரும் மன அழுத்தங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அடிக்கடி நாம் கேள்விப்படும் இளவயது மரணங்கள் இப்படியானவர்களுக்குத் தான் நிகழ்கின்றது. நல்லாத் தான் இருந்தார், திடீரென்று போய்விட்டார் என்று வருத்தப்படுகின்றோம். முடிந்தபின் வருந்துவதில் என்ன பயன் ?. வருமுன் காப்போம் என்பதை நிச்சயம் எமது சகோதரர்கள் கடைப்பிடிக்கவேண்டும். வருடத்திற்கு ஒரு-முறையாவது மருத்துவப் பரிசோதனைக்குச் செல்ல வேண்டும். சின்னச் சின்ன நோய்கள் வந்தாலும், ஒவ்வொரு முறை இல்லாவிட்டாலும் ஒரு சில முறையாவது மருத்துவரிடம் சென்று பரிசோதிக்க வேண்டும். அத்துடன் உடற்பயிற்சி செய்வதும் முக்கிய ஒன்றாகும். நாங்கள் ஓடும் ஓட்டத்திற்கு உடற்பயிற்சி தேவையா என்று கேட்கலாம். நிச்சயம், தகுந்த முறையில் எமது உறுப்புகள் எல்லாவற்றையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உடற்பயிற்சி மிக முக்கியமே.

முடிந்தவரை மனதை இலகுவாக வைத்திருக்கவேண்டும். மனைவியிடமோ, வேறு யாரிடமோ தங்கள் கஷ்டங்கள் கவலைகளைப் பகிர்ந்துகொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். பெரும்பாலும் மனக்கவலைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாதவர்களும் அதை விரும்பாதவர்களுமே தனிமையை நாடுகிறார்கள். காலப் போக்கில், தனிமையை மறப்பதற்கென்றும், உழைப்பின் களைப்பை மறப்பதற்கென்றும் குடிப் பழக்கத்தைத் தொடங்குகிறார்கள். குடி குடியைக் கெடுக்கும் என்பதைப் போல், இந்தக் குடிப்பழக்கம் தன் குடியை மட்டுமல்லாது அது உயிரையும் சேர்த்தே குடித்துவிடும். அது மட்டுமல்லாது, உயிரினும் மேலான, மானம் மரியாதை, சுயகௌரவம் எல்லாவற்றையும் அழித்துவிடுகின்றது. தெரிந்தோ தெரியாமலோ, மதுவிற்கு அடிமையானவர்களும் அவர்களைச் சுற்றி இருப்பவர்களும் ஒன்றில் தெளிவாக இருக்கவேண்டும். எவருமே தான் மாபெரும் குடிகாரனாக வரவேண்டும் என்ற குறிக்கோளோடும், இலட்சியத்தோடும் அப்படி வருவதில்லை. சந்தர்ப்ப சூழலில் அப்படி ஆகிவிடுகிறார்கள். அப்படியானவர்கள் குடும்பத்திலிருந்தும், சமூகத்திலிருந்தும் ஒதுங்கி வாழ விரும்புகிறார்கள். ஒரு வகையில் அது அவர்களின் தாழ்வு மனப்பான்மை என்றே சொல்லலாம். இவர்களை இப்படியே விட்டுவிடுவதும் பெரும் தவறு. இவர்களைச் சுற்றியிருக்கும் உறவுகளுக்கு இவர்களால் எவ்வளவு கஷ்டம் என்பதை நான் நன்கு அறிவேன். இவர்கள் மேல் கோபமும் வெறுப்பும் வருவதும் இயற்கையே. ஆனால், இதில் தான் நாம் மிகுந்த கவன-மாக இருக்கவேண்டும். அவர்களை நாமும் ஒதுக்கி வைத்துவிட்டோம் என்றால், அதையே விரும்பும் அவர்களுக்கும் அது ஒரு நல்ல சந்தர்ப்பமாகிவிடும். ஆகையினால், எம்மால் முடிந்தவரை பொறுமையாய் இருந்து அவர்கள் பொறுப்புகளையும் கடமைகளையும் அவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டும். அவர்கள் செய்ய மறுக்கும் வேலைகளை, நாம் ஒரு நாளேனும் செய்யத் தொடங்கினால், அது தொடர்ந்தும் எமது தலையில் தான் வந்து முடியும். அவர்கள் இப்படியே இருந்துவிடுவார்கள். தாம் நல்ல நியைில் இருக்கும் போது ஒவ்வொரு குடிகாரரும் கூறுவது தாங்கள் எவ்வளவோ முயன்றும் தங்களால் குடியை நிறுத்த முடியவில்லை என்பது தான். அந்த நேரங்களில் அவர்களுடன் பேசிப் புரிய வைத்து அவர்களின் முழுச் சம்மதத்தையும் வாங்கி அவர்களுக்கு உதவுவதே சரியானதாக இருக்கும். குடிகாரன் தானாகத் திருந்தினால் தான் உண்டு என்பார்கள். அது முற்றிலும் உண்மை. இந்த நாடு எமக்கு பல வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும் அமைத்துத் தந்திருக்கின்றது. அதிலொன்று இப்படியான தீய பழக்கங்களுக்கு அடிமையானவர்களைத் திருத்த உதவுவதே ஆகும். ஆனால் அப்படி உதவுவதற்கு அவர்கள் கோரும் ஒரே நிபந்தனை, சம்மந்தப்பட்டவர்கள் அவர்களினுடைய முழுமையான விருப்பத்தில் மட்டுமே சிகிச்சை பெற வரவேண்டும் என்பதாகும். மனைவி, மக்கள், சொந்தங்களின் கட்டாயத்தின் பெயரில் வரக்கூடாது.

அதனால் தமது முழு மனதுடன் சென்று சிகிச்சை பெற்று இனியாவது எமது சகோதரர்கள் பயனடைய வேண்டும்.

பொதுவாக இப்படி மதுவிற்கு அடிமையானவர்களின் மனைவிமாரின் வாழ்க்கை சொல்லிலடங்காத் துயரம் கொண்டவை. வெளிநாட்டில், கணவருடன் சுகபோக வாழ்க்கை வாழப் போகிறோம் என்ற பல கனவுகளுடன் வரும் பெண்களுக்கு இங்கு வந்தவுடன் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி தான். அனேகமான எமது ஈழத்துப் பெண்கள், அடிப்படைக் கல்வியாவது பயின்றுவிட்டுத் தான் இங்கு வருகின்றார்கள். தமது பல திறமைகளை அங்கு செயற்படுத்தியவர்கள் தான். கலையில், ஓவியத்தில், கவிதை நாடகங்கள் என்று எத்தனையோ திறமைகளை உள்ளடக்கிக்கொண்டு தான் இங்கே வருகின்றனர். ஆனால் இங்கு வந்தவுடன் இந்த வாழ்கைச் சூழலில் சிக்கி பெரும்பாலானவர்கள் அவர்களின் தனித்துவத்தை இழந்துவிடுகின்றார்கள். தம் சுயவிருப்பு வெறுப்புகள் எல்லாவற்றையும் மறந்து, திறமைகள் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு புதிதான வாழ்வொன்றை வாழுகின்றனர்.

இப்படியான வாழ்கை முறைகளில் பலதரப்பட்ட பெண்களை நாம் நாள்தோறும் சந்திக்கின்றோம். தமிழ்ப் பெண்களாகிய நாம், இப் புலம்பெயர் தேசத்தில் ஓர் இக்கட்டான கால கட்டத்தில் உள்ளோம். எமக்குப் பல பொறுப்புக்களும் கடமைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் தான் உள்ளோம். அப்படி எமக்கு தரப்பட்ட கடமைகளை செய்யும் பொழுது, தேவையற்ற பல பழிச்சொற்களும் எம்மீது சுமத்தப்படுகின்றது. அவர்றில் சிலவற்றிற்கு எம்மையறியாது நாமே காரணமாகி விடுகின்றோம்.

சில பெண்களின் வாழ்க்கை கண்மூடி முழிப்பதற்கு முன் தடம் மாறி விடுகின்றது. வீட்டில் செல்லப்பிள்ளையாக, பட்டாம் பூச்சியாக சுற்றித்திருந்து விட்டு, திருமண பந்தம் என்ற புதிய உறவினால் எத்தனை பெண்கள் எம் கண் முன்னால் சிக்கிச் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றார்கள். பொறுப்பற்ற கணவன்மார்கள், குடிகாரர்கள், சந்தேகப் பேய்கள் என்று எத்தனை விதமான ஆண்களால் எமது பெண்களின் வாழ்க்கை அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் முள்ளின்மேல் நிற்கின்றனர். இந்த நாட்டிற்கு வந்து மொழி, வாழ்க்கை முறை என்று எதையுமே அறிந்து கொள்ளுவதற்கு முன், கையில் இரண்டு வயிற்றில் ஒன்று என்று வருடத்திற்கு ஒரு குழந்தைக்கு தாயாகி விடுகிறாள் எமது பெண். அதன் பின் வைத்தியரிடமோ, பாடசாலைக்கோ எங்கு போவதென்றாலும் மற்றவருடைய உதவிகளை நாடவேண்டிய சூழலில் இருக்கிறார். ஒரு இரண்டு வருடம் தாமதித்து, மொழியை வாழ்க்கை முறையை சரிவர பழகிவிட்டுப் பின் குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்றால், அது கௌரவக் குறைவாம். இத்தனை வருடங்களுக்குப் பின் திருமணம் செய்துவிட்டு, உடனே குழந்தை பெற்றுக்கொள்ளாவிட்டால், அது ஆணுக்கு அவமானமாம். ஒரு குழந்தைக்கு தகப்பனாகி விட்டு, நான் ஆண் மகன் என்ற கர்வத்துடன் எத்தனை ஆண்கள் தலை நிமிர்ந்து நடக்கின்றனர். ஆனால், அதன் பின், தான் தந்தை கணவன் என்ற பொறுப்பைச் சரிவரச் செய்கின்றனரா ?

சாதாரணமாக எமது ஒரு தமிழ்க் குடும்பம் தெருவில் போகும் பொழுது கவனித்துப் பாருங்கள். கணவர் இரு கைகளையும் வீசிக்கொண்டு முன்னால் போவார். அவர் பின், இரண்டடி தள்ளி மனைவி ஒரு பிள்ளையை வண்டிலில் தள்ளிக்கொண்டு, அந்த வண்டிலில் பல பைகளையும் தொங்கவிட்டுக்கொண்டு, இரண்டு பக்கமும் ஒவ்வொரு பிள்ளைகள் அவரைப் பிடித்துக் கொண்டுவர நடக்க முடியாமல் கஷ்டப்பட்டு நடந்துசெல்வார். அடிக்கடி நான் இப்படியான காட்சிகளை பல இடங்களில் கண்டுவருகின்றேன். அப்பொழுதெல்லாம் எனக்கு அந்தப் பெண்கள் மேல் பரிதாபமும் ஆண்கள் மேல் கோபமும் வரும். ஏன் அந்த பிள்ளைகள் இரண்டையும் அவர் தன்கைகளில் பிடித்துக்கொண்டு, மனைவியுடன் இணைந்து நடந்துசென்றால் குறைந்துவிடுவாரா ? என்று தோன்றும். ஒரு பிரெஞ்சுக் குடும்பம் வெளியில் நடந்து செல்வதைப் பாருங்கள். பெற்றோர் பிள்ளைகள் என்று ஒற்றுமையாக கதைத்துச் சிரித்துக் கொண்டு எத்தனை சந்தோசமாக செல்வார்கள். அப்படி ஏன் நாமும் இருக்கக்கூடாது ? பிரெஞ்சு மக்களிடம் இருந்து தேவையற்ற பல பழக்க வழக்கங்களை எளிதில் பின்பற்றும் நாம், இப்படியான நல்ல விடயங்களையும் பின்பற்றலாமே !

சில பெண்களின் வாழ்க்கை இப்படிப் போகின்றது என்றால், வேறு சிலருடையது அதற்கு நேர் எதிராக உள்ளது. இந் நாட்டில் எமக்குக் கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்புகளையும், சுதந்திரத்தையும் பயனற்ற விடயத்தில் செலவிடுகின்றார்கள் என்பது இப்போதெல்லாம் எம்மீது சுமத்தப்படும் ஓர் குற்றச்சாட்டாகும். அவை வெறும் குற்றச்சாட்டுகள் மட்டுமல்ல, அவற்றில் சில உண்மைகளும் இருக்கின்றன. ஆடம்பரச் செலவுகள், தொலைக்காட்சியில் மூழ்கிக் கிடக்கும் நேரங்கள் என்று பல உண்டு.

இந்த புலம்பெயர் நாட்டில் ஆண்களோ பெண்களோ, நாளும் ஓடியோடி உழைக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். அப்படிக் கடினமாக உழைக்கும் உழைப்பை சரியான வகையில் தான் நாம் செலவிடுகின்றோமா ? தேவையானவற்றிற்குத் தான் செலவிடுகின்றோமா ? எம்மவர் வீடுகளில் இப்பொழுதெல்லாம் தொடர்ந்தும் நடந்துகொண்டிருக்கும் திருட்டு என்பது எதனால், எதற்காக, யாரால்

ஆரம்பிக்கப்பட்டது ? அதற்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார் ? இவற்றிற்கெல்லாம் பொறுப்பு நிச்சயம் பெண்களே.

நாம் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தையெல்லாம் விதவிதமான நகைகள் வாங்கிக் குவிப்பதற்கே செலவிடுகின்றோம். ஒரு பெண்ணிற்குத் தேவையான ஒரு சில ஆபரணங்களை விட்டுவிட்டு, அளவிற்கு அதிகமாகச் சேர்க்கின்றோம். வெறும் மஞ்சள் கயிறு, அல்லது சிறிய அளவில் போதுமான எமது தாலிக்கொடிகள் இன்று மற்றவர் கண்களை உறுத்தும் வகையில் உள்ளது. எத்தனை வடிவில் புதிய நகைகள் வந்தாலும் அத்தனையும் எமது பெண்கள் கழுத்துகளிலும் கைகளிலும் மின்னுகிறது. அது மட்டுமல்லாது, விளம்பரங்களுக்காக, புதிய திரைப்படங்களின் பெயர்களிலும், நடிகைகளின் பெயர்களிலும் வரும் அத்தனை வகையான புடவைகளும் எமது பெண்களை அலங்கரிக்கிறது. விலையைப் பற்றி பலர் கவலைப்படுவதே இல்லை. ஒரு மாத, இரு மாதச் சம்பளங்கள் கூட ஒரு நாள் நடக்கும் யாரோ ஒருவரின் வீட்டு விசேஷத்திற்கு செலவாகிவிடுகின்றது. இந்தச் செலவை ஈடுகட்ட எத்தனையோ ஒறுத்தல்கள். சத்தான உணவுகள் வாங்காமல் விலை குறைந்த பொருட்களை வாங்குவது, குளிருக்கு சரியான தேவையான உடைகளை காலணிகளை வாங்காமல் அதில் சிக்கனம் செய்வது போன்ற பல விடயங்கள் அதில் அடங்குகிறது.

இப்படியெல்லாம் வாழ்ந்து எதைக் கண்டோம் ? யாருக்குக் காட்டுகிறோம் ? எமது பொருளாதார வளர்ச்சியை இதில் தான் காட்டுவதா ? சொந்தச் சகோதரர்களுக்குள் மைத்துனி மாருக்குள் என்று எமது நெருங்கிய சொந்தங்களுக்கு உள்ளேயே போட்டி போட்டுக்கொண்டு இப்படி நடந்தால், பாதிக்கப்படுவது எம் ஒவ்வொருவருடைய குடும்பங்களுமே. அது மட்டும் அல்லாமல், அளவிற்கு அதிகமாக நாம் சேர்த்து வைக்கும் நகை நட்டுகளும், ஒரு சில நிமிடங்களில் திருடர்கள் கையில் போய்விடுகின்றது. அதன் பின் அழுது என்ன பயன் ? அழுதுவிட்டாவது நாம் திருந்துகிறோமா ? இல்லையே. விட்டதைப் பிடிக்கவும், அதற்கு அதிகமாகச் சேர்க்கவும் மீண்டும் ஓடுகிறோம்.

இப்படி ஒருவகையினர் இருக்க, அடுத்தவர் தமது நேரங்கள் காலங்கள் எல்லாவற்றையும் தொலைக்காட்சிகளின் முன்பும், தொலைபேசிகளுடனும், பேஸ்புக் (கயஉநடிழழம) உடனும் செலவிடுகின்றோம். பெற்ற பிள்ளைகள் ஆவலுடன் எம்முடன் கதைக்க வந்தாலும், அவர்களைப் புறம் தள்ளிவிட்டு நாம் எம் பொழுது போக்குகளைத் தொடருகின்றோம். இந்த விரைவு வாழ்வில், வீட்டில் எல்லோரும் சேர்ந்திருக்கும் நேரங்களே குறைவாக இருக்கும் காலத்தில், கிடைக்கும் நேரங்களையும் இப்படிக் கழித்தோம் என்றால், எமது பிள்ளைகள் எங்கு செல்வார்கள் ? அன்றெல்லாம், எமக்கு நிலாக் காட்டி, நல்ல நல்ல கதைகள் கூறி, சோறூட்டி, சீராட்டி வளர்த்தார்கள். தாத்தா பாட்டி என்று எம்மைத் தூக்கி அணைக்கவும் செல்லம் கொஞ்சவும் பல உறவுகள் இருந்தார்கள். ஆனால், இங்கே எமது குழந்தைகள் கிட்டத்தட்ட அனாதைகள் போலவே வளர்கின்றனர். ஒட்டுமொத்த எல்லா உறவுகளிடமும் இருந்து கிடைக்கவேண்டிய அன்பையும் பாசத்தையும் பெற்றோராகிய நாம் மட்டுமே எமது குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளோம். அதை நன்கு உணர்ந்து நடந்துகொள்வது நமது கடமையாகும். அதைவிடுத்து எமது வேலைப்பளுவையும் வேறு காரணங்களையும் காட்டி நாமே எமது குழந்தைகளைத் தனிமைப் படுத்துவது பெரும் தவறாகும். முடிந்தவரை ஒருவாரத்தில் ஒரு நேர உணவையாவது, குடும்பத்தில் உள்ள எல்லோரும் ஒன்றாய் இருந்து அருந்தவேண்டும். தொலைக்காட்சியை நிறுத்தி விட்டு, எல்லோருமாகப் பேசி மகிழவேண்டும். அவர்கள் பாடசாலையில் நடந்தவைகளைப் பற்றி, சிநேகிதர்கள் பற்றி, வரும் காலத் திட்டங்கள் பற்றி, எமது நாடு பற்றி, உலக நிலைபற்றி எத்தனையோ விடயங்கள் உள்ளன அவர்களுடன் பகிர்ந்துகொள்ள. அப்படி சிறுவயதிலிருந்தே நாம் பழகி வந்தோம் என்றால், காலப் போக்கில் எமக்குள் இடைவெளிகள் அதிகரிக்காது. நாம் சிறுவயதிலிருந்தே அவர்களிடம் இருந்து விலகி நின்றுவிட்டு, வளர்ந்த பின் அவர்கள் எமக்கு பிடிக்காதவற்றை செய்யத் தொடங்கும் போது கட்டுப்பாடுகள் வைத்தோம் என்றால், அதை நிச்சயம் அவர்கள் ஏற்க மறுப்பார்கள். அது இன்னும் பிரச்சினைகளை அதிகமாக்கும்.

எம்மில் பலரிற்கு ஒரு பழக்கம் இருக்கின்றது. பிள்ளைகளுடன் கருத்து வேறு பாடுகள் வரும்பொழுதெல்லாம், அவர்கள் நாம் கூறுவதை ஏற்க மறுக்கும் பொழுதெல்லாம் ஒன்று கூறுவோம் உங்களுக்காகத் தானே நாங்கள் இப்படி ஓடி ஓடி உழைக்கிறோம், வீடு வாசல் சொத்து என்று தேடுகிறோம் என்று. உண்மையில் நாம் ஒவ்வொருவரும் எமது மனச் சாட்சியைத் தொட்டுக் கேட்டுப் பார்ப்போம். எமது பிள்ளைகள் யாராவது எம்மிடம் கேட்டார்களா நான் சொந்த வீட்டில் தான் இருப்பேன், சொத்துடன் தான் வாழ்வேன் என்று. நிட்சயம் இல்லை. வாடகை வீடு என்றாலும், சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழவே அவர்கள் ஏங்குகிறார்கள். நாங்கள் எங்கள் சந்தோசத்திற்காகவும், எமக்காகவும் தான் சொந்த வீடு வாங்கவேண்டும் சொத்துச் சேர்க்கவேண்டும் என்று ஓடுகிறோம். பரம்பரை பரம்பரையாக நம் சொந்த மண்ணில் வாழும் பிரெஞ்சு மக்களுடன் எம்மை ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களுக்கு சமமாக வாழ வேண்டும் என்று ஓடுகிறோம். அப்படி ஓடியோடி நாம் சாதிப்பதெல்லாம், பூப்போல உள்ள எம் குழந்தைகளின் சிறு உள்ளங்களைக் கசக்கிப் பிழிவதே ஆகும். அவர்கள் வாழவேண்டிய அனுபவிக்க வேண்டிய குழந்தைப் பருவத்தை, எமது சுயநலத்தால் களவாடுகிறோம். எமது அளவிற்கு அதிகமான பேராசையினால்,

ஏழு, எட்டு வயதுகளே ஆன சிறு பிள்ளைகளை அவர்களிற்குக் கீழ் இருக்கும் தம்பி தங்கைகளைப் பார்க்கும் படி கூறிவிட்டு நாம் வேலைகளுக்குச் செல்கின்றொம். பாடசலை விட்டு வந்து அந்தப் பிஞ்சுகள் எவ்வளவு ஒரு பெரிய பொறுப்பைச் சுமக்கின்றார்கள். இப்படியெல்லாம் உழைத்தும் போதாதென்று, வீடு வாங்க வேண்டும் கடன் (Crédits) எடுக்க வேண்டும் என்று தவறான பத்திரங்களைத் தயாரித்து வங்கிகளுக்குக் கொடுக்கின்றோம். இன்று பல வங்கிகளில் இலங்கைத் தமிழர் என்றால் வங்கிக்கடன் கொடுக்க வேண்டாம் என்று கூறுமளவிற்கு எமது நிலை இருக்கின்றது.

இவைகள் எல்லாம் தேவைதானா ? பணமாக, பெருளாக எமது பிள்ளைகளுக்கு சொத்துக்கள் சேர்ப்பதற்கு முன்னர், கல்விச் சொத்தையும், நல்லொழுக்கத்தையும், பண்பாட்டையும் அவர்களிடம் சேர்ப்பதே முதற்கடமையாகும். அதுவே அவர்களுக்கு நாம் சேர்க்கும் மிகப் பெரும் அழியாத சொத்தாகும்.

வாழ்க்கை வாழத்தானே என்ற ஒரு திரைப்பட பாடலுக்கு இணங்க நாமும் ஏன் நமது வாழ்க்கையை இன்பமாக, இலகுவாக வாழக்கூடாது. இனியாவது இவற்றைப்பற்றி கொஞ்சம் சிந்திப்போமா, செயற்படுவோமா ?

இந்தப் பகிர்வின் மூலம் நான் யாரையும் குற்றஞ்சாட்டவோ, பழி சுமத்தவோ வரவில்லை. எம்மைச்சுற்றி நடப்பவற்றை

நினைவுபடுத்துகின்றேன். நிச்சயம் இவற்றில் சில தவறுகளை நானும் செய்து கொண்டுதானிருப்பேன். முடிந்தவரை என்னைத்திருத்த நானும் முயல்கின்றேன். நீங்களும் முயன்று பாருங்கள் வாழ்வில் உயர்வை, இனிமையை நாமும் எட்டலாம். பணி செய்வதே தன் பணியென இயங்கும் புனர்வாழ்வுக் கழகத்துக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.

திருமதி சுபா குருபரன்.



# புலத்தில் நாடகங்கள்

புலத்தில் நம்மவர்களின் நாடகங்கள் என்னும் இந்தத் தலைப்பில் நமது நாடகக் கலையைப் பற்றி ஆய்வு செய்வதென்பது மிகக் கடினமானாதொன்றாகும்! காரணம் புலம் பெயர்ந்த நமது கலைஞர்கள் ஐரோப்பாவில் மட்டுமல்ல அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியாவென இன்னும் பல நாடுகளில் பரந்து விரிந்து வாழ்கின்றார்கள். தாங்கள் வாழ்கின்ற நாடுகளில் தங்களால் முடிந்தவரை எமது நாடகக் கலையை எமது சமூகத்திற்கு பயனுள்ளவகையில் வெளிப்படுத்திக்கொண்டேவருகின்றார்கள்.அந்தக்கலைஞர்களின்படைப்புக்களைப்பற்றியெல்லாம்இந்தக்கட்டுரைக்குள் கொண்டு வருவதென்றால் அது மிகக் கடினமானதும், அதிக காலத்தை செலவழிக்க வேண்டியதுமாகும். ஆதலால் புலத்தில் நாடகங்கள் என்ற இந்த தலைப்பில் இங்கு நாம் பிரான்சையே பொதுவாக எடுத்துக்கொள்கின்றோம்.

மேலும் நேரடியாகவே தலைப்பிற்குள் நுளைந்துவிடாமல் முதலில் எமது தாய் நிலத்தில் வாழ்ந்த பிரபலமான கலைஞர்களில் எவ்வளவு பேர் புலம் பெயர்ந்திருக்கின்றார்கள் என்பதைப் பார்ப்போம்..

தாய் மண்ணில் மேடை நாடகங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தவர்களான தாசீயஸ், பாலேந்திரா ஆனந்தராணி தம்பதிகள் லண்டனில் வாழ்ந்து வருகின்றார்கள். அண்ணை றைற் பாலச்சந்திரன் கனடாவில் வாழ்கின்றார். இளைய பத்மநாதன் என்னும் கூத்து நாடகக் கலைஞரும், மாவை நித்தியானந்தன் போன்றவர்களும் அவுஸ்ரேலியாவில் வாழ்கின்றாஉகள். புழுகர் பொன்னையா புகழ் குணபதி கந்தசாமி சுவீஸிலும் நிர்மலா ஏ.ரகுநாதன், அப்புக்குட்டி ராஜகோபால், முகத்தார் யேசுறட்ணம் (அமரத்துவமடைந்துவிட்டார்) போன்றவர்கள் பிரான்ஸில் வாழ்கின்றார்கள். இவர்கள் எல்லாம் தாய் நிலத்தில் பிரபலமான நாடகக் கலைஞர்கள். ஆனால் அதிக பிரபலமில்லாமலும், ஓரளவு கலை ஆர்வத்தோடு உள்ளவர்களுமான ஏராளமான கலைஞர்கள் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து எங்கள் நாடகக் கலையை இன்றைய தேவைக்கேற்ப பயனுள்ள வகையில் அரங்கேற்றி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இங்கே இன்னொரு விடயத்தையும் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். கலைகளை கட்டிடக் கலை, அச்சுக் கலை வாய்ச்சொற் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, வரை கலை, ஆற்றுகைக் கலை என இன்னும் பல பிரிவுகளாக பலவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குள் ஆற்றுகைக் கலைக்குள் இசை, நடனம், சினிமா போன்றவற்றுடன் நாடகக் கலையும் அடங்குகின்றது.

ஆற்றுகை என்பது ஆற்றப்படுவது. ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை போன்றவற்றில் இருந்து ஆற்றுகைக்கலை ஏன் மாறுபடுகின்றது என்றால் அந்தக் கலைகள் ஒரு இடத்தில் நிரந்தரமாக இடம் பிடித்துக் கொள்கின்றன. ஆனால் இசை, நாட்டியம், நாடகம் என்பன அவ்வாறானவை அல்ல. ஆற்றுகையின் பொழுது கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கும். ஒரு நாடகத்தை நாங்கள் பார்க்கின்றபோது அங்கு காட்சிகள் மாறும், பாத்திரங்கள் மாறும், பாத்திரங்களின் முக பாவனைகள் மாறும், பாத்திரங்களின் குரல்கள் மாறும். இவைதான் நாடகக் கலைக்கு உள்ள மிகப் பெரிய சிறப்பாகும்.

மேலும் ஒரு நாடகத்தின் வெற்றி என்பது அந் நாடகத்தில் நடிக்கின்ற நடிகர்களிடமோ, அல்லது இயக்குனரிடமோ மட்டும் தனியே தங்கி இருப்பதல்ல. பல்வேறு கலைஞர்களின் பங்கு அரங்கிற்குப் பின்னாலேயே அடங்கி இருக்கின்றது. முதலில் நாடகத்தை பிரதியாக்கம் செய்யும் நாடக ஆசிரியர், அதன் பின்தான் நடிகர்கள். இவர்களோடு ஒப்பனையாளர், இசையமைப்பாளர், ஒளிப்பதிவாளர்களும், திரை மறைவில் நின்று வசனங்களை நினைவூட்டிக் கொடுப்பவர்கள் என பலர் ஒருங்கிணைகின்றார்கள். இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து அந்த நாடகத்திற்கு முழு வடிவம் கொடுப்பவர்தான் இயக்குனர்.

சின்னக்குட்டி தயாநிதி அவர்கள். இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட கலைஞர்களும் அதிகமாகும். அது மாத்திரமல்ல நாடகத்தை தொழிற்துறைக் கலையாக மாற்றி ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்ல அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் தனது நாடகங்களை அரங்கேற்றி வருபவர் கலைஞர் தயாநிதி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். தயாநிதி அவர்களின் நாடகங்களில் ஒன்றான 'பொன்னாடை என்னும் நாடகம் ஐரோப்பாவில் பல மேடைகளில் அரங்கேறியதுடன் ஜேர்மனியில் நடைபெற்ற ஒரு போட்டி நாடக விழாவில் முதல் பரிசையும் பெற்றிருக்கின்றது|. இதேபோல பாரிஸ் தமிழர் விளையாட்டு விழா ஒன்றில் வீதி நாடகத்தையும் பாரிஸில் அறிமுகப்படுத்தியவரும் தயாநிதி அவர்கள்தான்.

இதேபோல பல மேடை நாடகங்களில் நடித்திருந்த பல்துறைக் கலைஞர் பிரியாலயம் துரைஸ் அவர்களின் எழுத்து இயக்கத்தில் உருவான 'புள்ளிகள் போட்ட கோடு என்னும் நாடகமும் பல அரங்கங்களைக் கண்டதுடன் பாரிஸில் நடந்த நாடகப் போட்டி ஒன்றில் இரண்டாவது இடத்தையும் பெற்றிருக்கின்றது. இவருடைய துணைவியார் திருமதி. வளர்மதி துரைஸ் அவர்களும் பல நாடகங்களில் நடித்து சிறந்த நடிகை என்ற பெயரைப் பெற்றிருப்பதுடன் இளம் கலைஞர்களை வைத்து ஒரு நாடகத்தையும் இயக்கி அரங்கேற்றியும் இருக்கின்றார்.

புலத்தில் நாடகங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது கலைஞர் இரா குணபாலன் அவர்களும் முக்கியமானவர். இவர் யாழ்ப்பாணத்தில் ஆயிரம் தடவைகளுக்குமேல் அரங்கேற்றம் கண்ட 'அடங்காப்பிடாரி நாடகத்தை தங்களது ஆர்.ரி.எம். பிரதேஸ் ஸ்தாபனத்தின் மூலம் தயாரித்து பாரிஸிலும், ஐரோப்பாவின் வேறு சில நாடுகளிலும் மேடையேற்றியதையும் குறிப்பிட்டாகவேண்டும். அந்த நாடகத்தில் யாழ்ப்பாணத்தில் அதே நாடகத்தில் சவுக்காரக்காரியாக நடித்திருந்த என். ரி.குணம் அவர்கள்தான் இங்கும் நடித்திருந்தார். பெண் பாத்திரத்தில் அவ்வளவு சிறப்பாக நடித்திருந்த அந்தக் கலைஞர் இப்பொழுது பலதரப்பட்ட குணசித்திர பாத்திரங்களில் எல்லாம் நடித்து பலராலும் பாராட்டுப்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு குறிப்பிடப்படவேண்டிய இன்னும் சிலரில் இன்னொரு முக்கியமான கலைஞர் 'நிர்மலா ஏ.ரகுநாதன் அவர்கள். புலத்தில் சினிமாத் துறையிலேயே அதிக கவனத்தை செலுத்திவரும் இந்தக் கலைஞர் திருமறைக் கலாமன்றம் பிரமாண்டமாக அரங்கேற்றிய 'பலிக்களம் நாடகத்தில் ஹைப்பாஸ் என்னும் பாத்திரம் ஏற்று கம்பீரமாக நடித்திருந்தார். அதற்கு எதிர்மாறான ஒரு பாத்திரமாக மாறி கவிஞர் சுபாஸ் அவர்கள் எழுதிய ஒரு ஓரங்க நாடகத்தில் நவரசங்களையும் காட்டி சிறப்பாக நடித்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இதுபோல குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய மற்றுமொருவர் பல்துறைக் கலைஞர் கே.பி.லோகதாஸ் அவர்கள். இவரும் சில நாடகங்களை எழுதி நெறிப்படுத்தியிருக்கின்றார். இவரின் கிடு-குவேலிக் கீதங்கள் என்னும் நாடகம் இதில் முக்கியமானது.

கலைஞரும், இலக்கியவாதியுமான ஓசை மனோ அவர்களின் நாடகங்கள் ரசிகர்களால் அதிகமான வரவேற்பையும், அதிகமான விமர்சனைங்களைக் கொண்ட நாடகங்களாகவும் இருந்திருக்கின்றன. மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை மையமாக வைத்து இவர் படைக்கும் சிறு சிறு நாடகங்கள் பலவற்றை இவர் அரங்கேற்றுவதற்கு பிரான்ஸ் திருமறைக் கலா மன்றம் பக்கபலமாக நின்று வருகின்றது.

இவர்களைப்போல சமூக நாடகத்துறையில் அதிக நாட்டம் கொண்டவரான அமரர் ரமேஸ் சிவரூபன் அவர்களும் தனது வான்மதி கலைக்கழகம் மூலமாக கருத்தாளம் மிக்க சில நாடகங்களை எழுதி, இயக்கி, அரங்கேற்றியிருக்கின்றார். எழுத்துத்துறையில் அனுபவம் இல்லாவிட்டாலும் நாடகத்துறையில் நீண்ட அனுபவம் உடையவர் கலைஞர் பெஞ்சமின் இமானுவல் அவர்கள். யாழ்ப்பாணத்தின் பிரபல ஒப்பனைக் கலைஞரான அமரர் சாமுவேல் பெஞ்சமின் அவர்களின் மூத்த மகனான இவரும் ஒப்பனை, மற்றும் அரங்க அமைப்புகளை உருவாக்குவதிலும் திறமை மிக்கவர். பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் அருட்தந்தை மரியசேவியர் அவர்கள் அரங்கேற்றிய யேசுவின் திருப்பாடுகளில் ஆண்டவராக நடித்து பலரின் பாராட்டுதலைப் பெற்றதனால் சக கலைஞர்களால் ஆண்டவர் என்றே அழைக்கப்படுகின்றார்.

பல்துறைக் கலைஞர்களில் நம்மால் மறக்க முடியாத இன்னொருவர் தி.சாம்சன் அவர்கள். நடிப்பு, ஓவியம், ஒப்பனை என இன்னும் பல துறைகளின் இருப்பிடமான சாம்சன் அவர்கள் சிறந்ததொரு பல்குரல் கலைஞரும் ஆவார்.

நகைச்சுவை நாடகங்களில் இலங்கையிலிருந்து புலத்தில் வாழ்கின்ற அனைத்து தமிழ் மக்களாலும் அறியப்பட்டவர்களான அமரர் 'முகத்தார் யேசுரட்ணம், 'அப்புக்குட்டி ராஜகோபால் ஆகியவர்கள். இந்த இரு கலைஞர்களின் புகழுக்கு வானொலி, சினிமா, போன்ற ஊடகங்கள் முக்கிய காரணங்களாக இருந்தாலும் மேடை நாடகங்களே இவர்கள் விருப்பமாக நாடிக்கொள்ளும் இவர்களது காதலிகளாக இருந்தன. இந்த இருவருக்கும் ஐரோப்பா எங்கும் பல விருதுகள் கிடைத்திருக்கின்றன. அதில் தமிழர்

புனர்வாழ்வுக் கழகம் ஆண்டுதோறும் கலைஞர்களைக் கௌரவித்து வளங்கிவரும் 'ஈழத்தமிழ் விழி என்னும் விருதை இருவரும் பெற்றிருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

புலத்தில் நமது கலைஞர்கள் நம்மவர்களுக்காகவே கலைகளை படைத்துவரும் இந்த வேளையில் பிரெஞ்சு மக்களுக்காக பிரெஞ்சு மொழியில் ஒரு நாடகத்தை அரங்கேற்றிய பெருமைக்குரியவர் கவிஞர் சுபாஸ் அவர்கள். பிரெஞ்சு நாடகப்பட்டறைக் கலைஞர்களிடம் பயிற்சி பெற்றவரான சுபாஸ் அவர்கள் பிரெஞ்சு பரீட்சியம் நிறைந்த இளம் கலைஞர்களை நடிக்கவைத்து மேடையற்றப்பட்ட அந்த நாடகத்தை பிரெஞ்சு மக்கள் மட்டுமல்ல பிரெஞ்சு மொழி முழுமையாக விளங்காத நம்மவர்களாலும் பாராட்டப்பட்டது வரவேற்கப் படவேண்டியதாகும்.

நாடகக் கலைக்கு தாய் என்று கூறப்படும் கூத்துக்கலைபற்றியும் புலத்தில் உள்ள அந்தக் கலைஞர்கள் பற்றியும் இப்பொழுது பார்ப்போம். கூத்துக்கலையில் நாட்டுக்கூத்து, ஆட்டக்கூத்து, வட்டக்கூத்து என பல பிரிவுகள் இருக்கின்றன. இதில் வட்டக்கூத்திற்குள்ளேயே கால்வட்டம், அரைவட்டம், முழுவட்டம் என பிரிவு பிரிவுகளாக இருக்கின்றன. இதில் விசேடம் என்னவென்றால் தாய் நிலத்தில் பாசையூர், குருநகர், வட்டுக்கோட்டை, மன்னார், நெருஞ்சிமுனை போன்ற ஊர்களில்த்தான் கூத்துக் கலைஞர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இதில் ஒவ்வொரு ஊர்களில் வாழ்கின்ற கலைஞர்களும் மேற்கூறப்பட்ட கூத்துக்கலையின் ஒவ்வொரு வடிவங்களிலும் வித்தகர்களாக இருக்கின்றார்கள்.

பாரிஸ் நகரைப் பொறுத்த அளவில் கூத்துக்கலையை மிக ஈடுபாட்டுடன் தான் மரணிக்கும்வரை தொடர்ந்தும் முன்னெடுத்து வந்தவர் அமரர் கிறெகரி தங்கராசா அவர்கள். இன்று கூத்துக்கலையை நேசிக்கும் கலைஞர்களாக வாழ்பவர்கள் பாசையூர் அன்ரன், டேமியன் சூரி, பெஞ்சமின் இமானுவல், ஜேம்ஸ் கிறிஸ்ற்றி, டேவிற் ராஜேந்திரன், சேயோன், மன்னார் ஆனந்தன், செல்றோன் சுதா இப்படி இன்னும் சிலர் இருக்கின்றார்கள். நாட்டுக்கூத்துக்களை மக்கள் ரசிக்கும் விதமாக இப்பொழுதெல்லாம் அனேகமாக நவீனப்படுத்தியே அரங்கேற்றுகின்றார்கள். மா.கி கிறிஸ்ற்றியன் எழுதி நெறிப்படுதி அமரர் கிறெகரி தங்கராசா அவர்கள் நடித்த' 'காட்டிக்கொடுத்தவன் நாடகம் அந்த வரிசையில் ஒன்றாகும்.

நாட்டுக்கூத்து வரிசையில் இணைந்திருக்கும் காத்தான் கூத்து நாடகம் பாரிஸில் அரங்கேற்றப்பட்டதாக அறிய முடியவில்லை. ஆனால் பாடகர் இந்திரன் அவர்கள் பல மேடைகளில் காத்தான் கூத்து மெட்டுக்களில் பாடல்களைப் பாடி அந்தக் கலைக்கு உயிர் கொடுத்து வருகின்றார் என்பது பாராட்டிற்குரிய விடயமாகும்.

இசைக் கலைஞர்கள் எல்லோராலும் கூத்துக்களுக்கு இசை அமைத்துவிட முடியாது. கூத்துக்களுக்கு இசையமைப்பதற்கு விசேட பயிற்சிகளும், விசேட வாத்தியங்களும் வேண்டும். ஹார்மோனியம், உடுக்கு, உருமி மேளம் போன்றவை இதில் முக்கியமானவை. ஆரம்பகாலத்தில் கிறெகரி தங்கராசா அவர்களின் கூத்துக்களுக்கு பின்னணி இசை கொடுத்தவர் இசைக் கலைஞர் ஜெயா அவர்கள். (பிரியாலயம் துரைஸின் நீதியின் சோதனை என்னும் வீடியோப் படத்திற்கும் இவர்தான் இசையமைத்திருந்தார்) அதன் பிற்பாடு பாரிஸில் மேடையேற்றப்பட்ட அனேகமான நாடகங்களுக்கு பின்னணி இசை வழங்கியவர்களில் முக்கியமானவர் அமரர் றொபேட் அவர்கள். இவர் கூத்திசைக் கலைஞர்களால் இன்னமும் மறக்கமுடியாதவராகவே இருக்கின்றார். கூத்திசைப் பின்னணி வாத்தியக் கலைஞர்களில் இன்னொரு முக்கியமானவர் தபேலாக் கலைஞர் மனோ அவர்கள்.

பாரிஸில் பல நாடகக் கலா மன்றங்கள் இருந்தாலும் பிரான்ஸ் திருமறைக் கலாமன்றம்தான் வருடா வருடம் 'கலைவண்ணம் என்னும் பெயரில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதும், கலைஞர்களை கௌரவிப்பதிலும் முதன்மை நிலையில் உள்ளது திருமறைக் கலா மன்றத்தின் இன்னொரு முக்கிய சிறப்பு, நிகழ்ச்சியை குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பிப்பது. பாரிஸில் வேறெந்த நிகழ்ச்சி அமைப்பாளர்களும் நேரத்திற்கு இப்படி மரியாதை கொடுப்பதை பார்க்க முடிவதில்லை.

கலைஞரும் எழுத்தாளருமான திரு. எம். அரியநாயகம் அவர்கள் இப்பொழுது கூத்துக்கலை பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார். இது காலத்தின் தேவையும்கூட. இன்று புலத்தில் வாழ்கின்ற கலைஞர்களே எமது கலை வடிவங்களைக் காத்து வருகின்றார்கள் என்பது நிரூபணமாகி வருகின்றது.

நாம் அறிந்திருந்த வகையில் இந்தக் கட்டுரையைத் தொகுத்திருக்கின்றோம். இக் கட்டுரையில் இணைக்கப்படாத கலைஞர்கள் பற்றிய விபரங்களைத் தெரிந்தவர்கள் எங்களுக்கு அறியத்தந்தால் இதனை முழுமைப்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலைநேசன்

புலம் பெயர்ந்த பத்திரிகைகள் சார்ந்த படைப்பாளிகள்

நான் மேலே குறிப்பிட்டது போல தாய் மண்ணில் எழுத்துத்துறையைச் சார்ந்தவர்கள் மட்டும் புலம் பெயர்ந்த பின்னரும் எழுத்துத்தான் தங்கள் தொழில் என்று அதைச் சார்ந்து நின்றவர்கள் அல்ல! பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்களும் அனேகமாக அப்படித்தான்! அங்கு பத்திரிகைகளில் பணிபுரிந்து இப்பொழுது லண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாலி என்கின்ற மகாலிங்கமும், பாமராஜகோபால் என்ற ஈ.கே.ராஜகோபாலும், பாரிஸில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எஸ்.கே.காசிலிங்கம் மற்றும் எஸ்.எஸ்.குகநாதன் போன்றவர்களும் ஆரம்பகாலத்தில் வாழ்க்கையை நிலைப்படுத்துவதற்காக ஏதேதோ தொழில்களைச் செய்திருந்தாலும் பிற்காலங்களில் பத்திரிகைத்துறைதான் அவர்களது முழுநேர வேலையாயிற்று.

நாவலாசிரியர்கள்

இலக்கியப் படைப்பாளிகளைப் பார்க்கும்போது கவிதை எழுதுவது மிகச் சுலபமானதோ? என நாம் அனைவரும் எண்ணத்தோன்றுகின்ற வகையில் புலத்தில் வாழ்கின்ற படைப்பாளிகளில் பலர் கவிஞர்களாகவே இருக்கின்றார்கள்! நாவலாசிரியர்கள் மட்டும் மிகக் குறைவாகவே இருக்கின்றார்கள். நாவலாசிரியர்கள் என்று பார்க்கும்போது லண்டனில் வாழ்ந்து வரும் முல்லை அமுதன் என்னும் புனைபெயர் கொண்ட ஆர்.மகேந்திரன் அவர்களே புலத்தில் அதிகமான நாவல்களையும், அதிகமான நூல்களை எழுதியவராகவும் இருக்கின்றார். அதுமாத்திரமல்ல லண்டனில் வருடா வருடம் ஈழத்துப் படைப்பாளிகளின் நூல்களின் கண்காட்சியையும் தொடர்ந்து நடாத்தி வருகின்றார். மேலும் லண்டனில் வாழ்கின்ற ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், விமல் குழந்தைவேல், ஜேர்மனில் வாழ்கின்ற பொ.கருணாகரமூர்த்தி, காசி வி.நாகலிங்கம், கனடாவில் வாழ்கின்ற குரு அரவிந்தன், டென்மார்க்கில் வாழ்கின்ற டென்மார்க் துரை போன்றோர்களும் நாவல்களை எழுதுவதில் அதிக ஆர்வம் காட்டியிருக்கின்றார்கள். இந்த வரிசையில் 'கரையைத் தேடும் கட்டுமரங்கள் என்ற நாவலை எழுதி கனடாவில் வாழ்கின்ற கலைஞர் அண்ணை றைற் கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்களும் 'கசகறணம் என்னும் நாவலை எழுதியதன் மூலமாக லண்டனில் வாழ்கின்ற விமல் குழந்தைவேல் அவர்களும் நாவலாசிரியர் வரிசையில் இணைந்திருக்கின்றார்கள். பிரான்ஸில் எழுத்தாளர் அகஸ்த்தியருக்குப் பின் மா.கி. கிறிஸ்ற்ரியன் அவர்களின் 'புயலுக்குப் பின் என்ற நாவலும் சோபாசக்தி அவர்களின் 'கொரில்லா என்ற நாவலும் வெளிவந்திருக்கின்றது.

குறுநாவல்கள்

குறநாவல்கள் என்று பார்க்கும்போது 1991ல் பிரான்சில் இருந்து திரு.எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் ரஜனிகுகநாதன் என்ற பெயரில் 'தவறுகள் என்னும் குறுநாவலை எழுதி சென்னை காந்தளகம் மூலமாக வெளியிட்டிருக்கின்றார். மேலும் பாரிஸில் இருந்து கலைஞர் 'நிர்மலா ஏ.ரகுநாதன் அவர்கள் சந்துவி என்னும் புனை பெயரில் 'உனக்காகப் பூக்கும் என்னும் குறுநாவலும், லண்டனில் வாழ்கின்ற விமல் குழந்தைவேல் அவர்களின் 'மண்ணும் மல்லிகையும் என்ற குறுநாவலோடு ஜேர்மனியில் வாழ்கின்ற ஜோச் புஸ்பராணி அவர்கள் எழுதிய 'அழியாத சுவடுகள் என்னும் குறுநாவலை திரு.காசி நாகலிங்கம் அவர்கள் தங்களது 'வண்ணத்துப்பூச்சி சிற்றிதழ் சார்பில் வெளியிட்டிருக்கின்றார். குறுநாவல்கள் பகுதியில் இவைகள் மட்டுமே இந்தக் கட்டுரைக்கான கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

குழந்தைகளுக்கான கவிதைகள்

இதே நேரத்தில் புலத்தில் பிறந்த நம்மவர்களின் குழந்தைகள் தமிழை ஆர்வமாகப் படிக்கவேண்டும் என்ற நன் நோக்கோடு இலகு தமிழில் 'மழலைப் பாடல்கள் குழந்தைப் பாடல்கள் பாப்பாப் பாடல்கள் என்று பலவிதமான தலைப்புகளில் எழுதியவர்களில் பிரான்ஸில் வாழ்கின்ற திருமதி.பத்மா இளங்கோவனின் எழுத்தில் சிறுவர்களுக்கான பல நூல்கள் வந்திருக்கின்றன. அந்த வரிசையில் ஜேர்மனியில் வாழ்கின்ற சின்னத்துரை ராஜகருணா, என்.சிவனேசன், திருமதி. விக்னா பாக்கியநாதன், திருமதி.நகுலா சிவநாதன், ஆகியோரோடு சுவிஸில் வாழ்கின்ற திருமதி.ஜெயந்தி ஜீவா, லண்டனில் வாழ்கின்ற திருமதி.வரதா சண்முகநாதன் ஆகியோர்களின் சிறுவர்களுக்கான படைப்புக்கள் பல புலத்தில் வெளிவந்திருக்கின்றது.

சிறுவர்களுக்கான நாடகங்கள். குழந்தைகள் வளர்ப்புமுறை நூல்கள்

இதேபோல சிறுர்களுக்கான சிறு சிறு நாடகங்கள் அடங்கிய ஒரு நூலையும் 'உறவுக்குப் போராட்டம் என்ற தலைப்பில் சிறுவர்களுக்கான சிறுகதைத் தொகுப்பொன்றினையும் திருமதி விக்னா-பாக்கியநாதன் அவர்கள் வெளியிட்டிருக்கின்றார். எம்.ஏ. பட்டதாரியான திருமதி. விக்னா அவர்கள் இவை தவிர சிறுகதைத் தொகுப்பு. கட்டுரைத் தொகுப்பு. மாணவர்களுக்கான பாடநூல்த் தொகுப்பு என பல நூல்களை வெளியிட்டிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதுபோல திருமதி நகுலா சிவநாதன் அவர்களும் குழந்தைகளுக்கான பாடநூல். மற்றும் வெளிநாடுகளில் குழந்தை வளர்ப்புமுறை பற்றி எழுதிய நூல்களும் வெளிவந்திருக்கின்றன.

சிறுவர்களுக்காக லண்டனில் வாழ்கின்ற லக்கஷ்மி-ஸ்ரீஸ்க்காந்தராஜா என்ற பன்னிரண்டு வயதுச் சிறுமியால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட முரவ யனெ யுழரவ என்ற சிறுவர் நூல் 1995ம் ஆண்டில் வெளியாகியிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுகதைப் படைப்புகள்

சிறுகதைத் தொகுப்புகளும் புலத்தில் அதிகமாக இல்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்க அளவு வெளிவந்திருக்கின்றன. இதே நேரத்தில் பிரான்ஸில் இருந்து வெளியான 'ஈழநாடு 'ஈழமுரசு பத்திரிகைகளிலும் லண்டன் 'புதினம் பத்திரிகையினுடன் வேறு சில பத்திரிகைகளுடனூடாகவும் மற்றும் புலத்தில் வெளியான சிற்றிதழ்கள் மூலமாகவும் நிறைய சிறுகதை எழுத்தாளர்கள் அறிமுகமாகி இருக்கின்றார்கள். ஆனால் தற்பொழுது சிறுகதைகளைத் தாங்கி வருவதற்கு எந்தப் பத்திரிகைகளும் இல்லாத காரணத்தால் சிறுகதைப் படைப்பாளிகளையும் இனம்காண முடியவில்லை. இருந்தபோதும் நான் அறிந்த வகையில் புலத்தில் சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்ட படைப்பாளிகளை இங்கு அறியத்தருகின்றேன்.

லண்டனில் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். இளைய அப்துல்லாஹ் என்ற அனஸ் (தீபம் தொலைக்காட்சி அறிவிப்பாளர்). விமல் குழந்தைவேல். மு.புஸ்பராஜன். திருமதி. நவஜோதி யோகரட்ணம். ஜேர்மனியில் பொ. கருணாகரமூர்த்தி. வெற்றிமணி சிவகுமாரன். விக்னா பாய்க்கியநாதன். வ.சிவராசா (மண் சஞ்சிகையின் ஆசிரியர்) பொன் புத்திசிகாமணி. ராஜன் முருகவேல். எம்.ரி.செல்வராஜா. சாந்தி ரமேஸ் வவுனியன். கனடாவில் குறமகள் என்ற வள்ளிநாயகி இராமலிங்கம். கவிஞர் வி.கந்தவனம். அமரர் எஸ்.கே.மகேந்திரன். வீரகேசரி மூர்த்தி. குரு அரவிந்தன். சுவிஸில் கல்லாறு சதீஸ். விக்கி நவரட்ணம். அமெரிக்காவில் அ.முத்துலிங்கம். அவுஸ்ரேலியாவில் அ.முருகபூபதி போன்ற படைப்பாளிகளுடன் இனி பிரான்ஸில் சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்ட படைப்பாளிகளைப் பார்ப்போம்.

அமரர் அகஸ்த்தியரின் 'அகஸ்த்தியர் கதைகள் அமரர் சிவலிங்கம் சிவபாலனின் 'சுரங்கள் மாறி அமரர் ரமேஸ் சிவரூபனின் 'இன்னுமொரு சந்ததி புஸ்பராணி என்னும் இயற்பெயர் கொண்ட தமிழ்ப்பிரியா இளங்கோவனின் 'காம்பு ஒடிந்த மலர் 'ஒரு நியாயம் விழிக்கின்றது மா.கி.கிறிஸ்ரியனின் 'திருப்பம் 'புலமும் புறமும் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் சார்பாக அதன் தலைவர் எம்.அரியநாயகம் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட 'மண்ணைத் தேடும் மனங்கள் 'நம்பிக்கை நாற்றுக்கள் 'தேசம் தாண்டிய நதிகள் வி.ரி.இளங்கோவனின் 'இளங்கோவன் சிறுகதைகள் வண்ணை தெய்வத்தின் 'பொல்லாத மனிதர்கள் கே.கணேசமூர்த்தி அவர்கள் இந்திரா கணேஸ் என்னும் புனைபெயரில் எழுதிய 'சொல்லாமல் சொல்லிவிட்டாள் ஞானம் பீரிஸின் 'கடல் கடந்த காதல் போன்ற சிறுகதைத் தொகுப்புகள் பிரான்ஸில் வெளிவந்திருக்கின்றன.

உருவகக் கதைகள்

புலத்தில் இரண்டே இரண்டு உருவகக் கதைகளே வெளிவந்திருக்கின்றன! ஒன்று ஜேர்மனியில் சு.பாக்கியநாதன் எழுதி 'கலைவிளக்கு சஞ்சிகையில் வெளியான கதைகளின் தொகுப்பான 'மானிடம் எங்கே போகின்றது? இரண்டாவது வண்ணை தெய்வத்தின் 'கொந்தல் மாங்காய் ஆகியவனவே. ஆனால் உருவகக் கதைகள் என்ற தலைப்புக்குள் அடங்காமல் 'வினாடிக் கதைகள் என்னும் தலைப்போடு ஜேர்மனியில் வாழ்கின்ற தமிழீழ முருகதாசன் என்னும் புனைபெயரில் சி.இராசகருணா எழுதிய 'தமிழனாக உன்னை அழைக்கின்றேன் என்ற நூல் வெளிவந்திருக்கின்றது.

கவிதைத் தொகுப்புகளைப் பொறுத்தவரை புலத்தில் மிக அதிகமான கவிதைத் தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன! இவற்றில் நானறிந்த படைப்பாளிகளாக லண்டனில் அமரர் இளவாலை அமுதுப்புலவர், முல்லை அமுதன், அமரர் வித்துவான் க.ந.வேலன், கவிஞர் ராஜமனோகரன், மு.புஸ்பராஜன், இளைய அப்துல்லாஹ் என்ற அனஸ், த.சு.மணியம், நடராசு கண்ணப்பு, ஜேர்மனியில் விக்னா பாக்கியநாதன், ரமேஸ் வவுனியன், சாந்தி ரமேஸ் வவுனியன், மட்டுவில் ஞானக்குமரன் (தற்பொழுது கனடாவில் வாழ்கின்றார்) வெற்றிமணி சிவகுமாரன், கோசல்யா சொர்ணலிங்கம், ஜெயா நடேசன், அம்பலவன் புவனேந்திரன், சுவிஸில் வல்வை கஜன், அருள் தெய்வேந்திரம், விக்கி நவரட்ணம், திடலூர் ஞானி, சுவீடனில் இருந்து சு.சுதந்திராஜா, நோர்வேயில், வ.ஐ.ச.ஜெயபாலன், நோர்வே நக்கீரனார் என்ற திலீபன், கனடாவில் கவிஞர்.வி.கந்தவனம், கவிஞர் சேரன், டென்மார்க்கில் வேலணையூர் பொன்னண்ணா, இணுவை சக்திதாசன் போன்றோர்களைக் குறிப்பிடலாம். இவஉகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் தமிழாக வாழ்ந்த அமரர் வித்துவான் க.வேந்தனார் அவர்களின் கவிதைகளைத் தொகுத்து ‘கவிதைப் பூம்பொழில் என்னும் பெயரில் லண்டனில் வாழ்கின்ற அவரது மகன் இளஞ்சே அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்.

பிரான்ஸிலும் அதிகமான கவிதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. அவைகளாவன கவிஞர் வி.ரி.இளங்கோவனின் கரும்பனைகள், சிகரம், மா.கி.கிறிஸ்ற்ரியனின் உயிர்ப்பில் வீணாகிப் போகாத நாட்கள், ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் சார்பாக அதன் தலைவர் எம்.அரியநாயகம் அவர்களின் தொகுப்பில் தூரத்து விடிவெள்ளி, சு.கருணாநிதியின் ஒரு மனிதன், கி.பி.அரவிந்தனின் கனவின் மீதி, இனி ஒரு வைகறை, புதுநகர் செல்லத்துரையின் தொகுப்பில் திவ்வியா, பிரியாலயம் துரைஸின் ராஜாவின் ராகங்கள், எ.ஜோயின் அந்தக் கரையில், எரிவதும் சுகமே, த.சரீஷின் தென்றல் வரும்தெரு, கடற்கரையில் அந்தக் கல்லறைகள், விடியலின் முகவரி, ஈழமுரசு ஆசிரியராக இருந்த அமரர் கஜ ன் அவர்களின் அழுகின்ற தேசமும் ஒளிர்கின்ற சூரியனும், சுபாஸ் என்ற பாலகணேச-னின் வர்ணங்கள் கலந்த வெளி, பண் உடைந்துபோன கடலாழ், அருந்ததியின் இரண்டாவது பிறப்பு, வாசுதேவனின் தொலைவில், எஸ்.செல்லத்துரையின் என்னைச் சூடாத மலர்கள், வண்ணை தெய்வத்தின் தொகுப்பில் வானலைகளில் எங்கள் கவிதைகள் (ஏ.பி.சி வானொலியில் கவிதை பாடிய கவிஞர்களின் கவிதைகளின் இரண்டு பாகங்கள்) மற்றும் அவரின் விடிவை நோக்கி, மெலிஞ்சி முத்தனின் ‘மெலிஞ்சி முத்தன் கவிதைகள் கலைச்சுடர் தீபனின் மனசெல்லாம் உன் வாசம், இதயம் பேசும் கவிதைகள், கலைஞர் தயாநிதியின் ரணங்கள், கவிதாயினி வினோதினியின் ‘ஆத்மாவின் ராகங்கள் ‘நெருங்கிய பொருள் கைப்படவேண்டும் ஆகிய நூல்களுடன் தனது கவியரங்கங்களில் பாடிய கவிதைகளை ‘கவியரங்கக் கவிதைகள் என்னும் பெயரில் ஒலித்தட்டாகவும் வெளியிட்டிருக்கின்றார். இவைகளுடன் திவ்வியா என்ற திவ்வியராஜாவின் சிதறல்கள், ஜெயந்தி சாம்சனின் தேடல் வலி, செவ்றோன் சுதாவின் கடலினுள் ஒரு யாகம், வி.பாஸ்கரனின் கவிதை சிந்திய கண்ணீர், தீரனின் சுடலைகளாகும் நகரங்கள் ஆகிய படைப்பாளிகளின் படைப்புகள் பற்றிய தகவல்களே எனது தேடுதலில் கிடைக்கப்பெற்றவையாகும்

நாடக நூல்கள்

புலத்தில் நாடக நூல்களின் வருகையென்பது மிக மிகக் குறைவாகவே இருந்திருக்கின்றது. அவைகளாவன ஜேர்மன் பிறேமன் நகரில் வாழும் வில்லுப்பாட்டுக் கலைஞர் நாச்சிமார்கோவிலடி ராஜனின் ‘எதிர்பார்ப்புகள் கனடா றொறன்ரோ நகரில் வாழும் சின்னையா சிவநேசனின் ‘தங்கச்சி கொழும்புக்கோ போகின்றாய் லண்டனில் வாழ்கின்ற எம்.ரி. செல்வராஜா எழுதிய லண்டனில் நாரதர், பிரான்ஸ் பாரிஸில் இருந்து அமரர் முகத்தார் யேசுறட்ணத்தின் ‘முகத்தார் வீட்டுப் பொங்கல், கலைஞர் எம்.அரியநாயகத்தின் ‘அறுவடை ஆகிய நாடக நூல்களுடன் கவிதை நாடக வடிவில் லண்டனில் தீபம் தொலைக்காட்சியில் பணியாற்றுகின்ற சாம் பிரதீபனின் ‘நீதியின் இருக்கைகள் அமரர் இளாலை அமுதுவின் ‘மருதமடுமாதா காவிய மல்லிகை ஆகிய இரண்டு நூல்களும் புலத்தில் கவிதை நாடக நூல்கள் வரிசையில் இணைகின்றன. இவற்றோடு அமரர் முகத்தார் யேசுறட்ணம் அவர்களின் ஐம்பதிற்கும் மேலான வானொலி நாடகங்களில் இருந்து பன்னிரண்டு நாடகங்களைத் தொகுத்து ‘ஆகாயக் கனவுகள் என்னும் பெயரில் ஒலித்தட்டாகவும் வெளியிட்டிருக்கின்றார்.

கட்டுரைத் தொகுப்புகள்

அடுத்து புலத்தில் வெளியான கட்டுரைத் தொகுப்புகளை எழுதியவர்களைப் பார்ப்போம். லண்டனில் வாழ்கின்ற டாக்டர் ஸ்ரீதரன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அமரர் டாக்டர் க.இந்திரகுமார், க.உமாமகேஸ்வரன், பாவை ஜெயபாலன், சபேசன், இரவி அருணாச்சலம், கனடாவில் பொ.கனகச-பாபதி, அவுஸ்ரேலியாவில் முருகபூபதி, ஆ.சி.கந்தராஜா, ஜேர்மனியில் எழிலன், ‘ஏலையா

முருகதாசன், 'கலைவிளக்கு திரு.பாக்கியநாதன், திருமதி விக்னா பாக்கியநாதன், 'வெற்றிமணி சிவகுமாரன், ஊரவன் என்ற இரா சிவரஞ்சன், டென்மார்க்கில் இருந்து கி.செ.துரை, வேலணையூர் பொன்னண்ணா போன்றவர்கள் முக்கியத்துவப் படுகின்றார்கள்.

பிரான்ஸில் அமரர் அகஸ்த்தியர், சோபாசக்தி, இரயாகரன், வி.ரி.இளங்கோவன், கி.பி.அரவிந்தன், மா.கி. கிறிஸ்ரியன், வண்ணை தெய்வம், அமரர் எஸ்.புஸ்பராஜா, லக்ஷ்மி, அசோக், அமரர் கலைச்செல்வன் ஆகியோர்கள் நூல்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் கட்டுரையாசிரியர்களாக மிளிஉகின்றார்கள்.

சமய நூல்கள்

புலத்தில் வெளியான சமய நூல்களாக கனடா முருகு.வே பரமநாதன் அவர்கள் எழுதிய 'ஈழத்துச் சித்தர் குடைச் சுவாமிகள் லண்டன் க.ந.வேலன் எழுதிய 'காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வாக்கும் என்.நாகேந்திரம் எழுதிய 'லண்டன் லூசியம் சிவன்கோவில் கீர்த்தனைகள் ஜேர்மன் ஜெயநாத சர்மா எழுதிய 'ஜேர்மனியில் இந்துசமயம், ஆகிய நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

வாழ்க்கை வரலாற்று நூல்கள்

புலத்தில் தங்களது வாழ்க்கை வரலாறுகளை எழுதியவர்கள் மிக மிகக் குறைவானவர்களே! லண்டனில் வாழ்ந்த அமரர் இளவாலை அமுது அவர்கள் எழுதிய 'இந்த வேலிக்கு கதியால் போட்வர்கள் என்ற நூல் ஓரளவு அவரது வாழ்க்கையின் வரலாறுதான். தனது வாழ்க்கையின் உயர்விற்குக் காரணமானவர்களையெல்லாம் அந்த நூலில் பதியவைத்திருக்கின்றார். டென்மார்க்கில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா அவர்கள் 'பனிமலை தாண்டிய பாதச் சுவடுகள் என்னும் பெயரில் முழுமையாக தனது வாழ்க்கை வரலாற்றை நூலாக்கியிருக்கின்றார். ஜேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பிரபல இசையமைப்பாளர் எம்.பி.பரமேஸ் அவர்கள் 'என் இனிய இசைப் பயணங்களில் என்ற பெயரில் எழுதிய நூல் அவருடைய வாழ்க்கை வரலாற்றின் முக்கிய பகுதி-களை வெளிப்படுத்துகின்றது. கனடாவில் வாழ்கின்ற கலைஞர் 'அண்ணை றைற் பாலச்சந்திரன் அவர்கள் தனது வாழ்க்கையின் சுவாரிசியமான பகுதிகளை எல்லாம் தொகுத்து 'நேற்றுப்போல இருக்கின்றது என்ற நூலும் அவரின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியே..

பிரான்ஸில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பத்திரிகையாளர் திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் 'என்னுள் என்னோடு என்ற நூலை எழுதியிருக்கின்றார். இந்த நூல் பத்திரிகை அனுபவங்கள், அரசியல், புலம்பெயர் வாழ்வியல் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருப்பவை அனைத்தும் அவரது வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள்தான். இளமைக்காலங்கள் மட்டும் எழுதப்படாவிட்டாலும் இந்த நூலும் அவரது வாழ்க்கை வரலாற்று நூல்தான். வண்ணை தெய்வம் அவர்கள் எழுதிய 'எடுத்துக்காட்டாக விளங்கிய நாகேந்திரம் குடும்பம் என்ற நூல் வாழ்க்கை வரலாற்று நூலாக இல்லாவிட்டாலும் அவரது குடும்ப வரலாற்றை தொகுத்து எழுதி இருக்கின்றார். இவைகளோடு பாரிஸில் வாழ்ந்த குடும்பி என்ற பட்டப்பெயர் உடைய ஜெயா எழுதிய 'கம்பிகள் ஊடாக என்ற நூலும் அவரது வாழ்க்கை வரலாற்றையே குறிப்பிடுகின்றது. இவைகள்தான் புலத்தில் வெளிவந்த வாழ்க்கை வரலாற்று நூல்களாக இருக்கின்றன. இவற்றில் வேலணையூர் பொன்னண்ணா, மற்றும் குடும்பி ஜெயா ஆகியோர் எழுதிய இரண்டு நூல்கள் மட்டுமே புலத்தில் இருந்து வெளியான முழுமையான வாழ்க்கை வரலாற்று நூல்களாக இருக்கின்றது.

ஈழத்து வரலாற்று நூல்கள்

புலத்தில் வாழ்ந்துகொண்டே நமது ஈழத்தின் வரலாற்றுப் பதிவுகளை ஆவணப்படுத்திய அறிஞர்கள் பரந்தே வாழ்கின்றார்கள். 1930ம் ஆண்டளவில் வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவிற்கு கடல் மார்க்கமாக கப்பலோட்டிச் சென்ற தமிழர்களின் வீரமிகு வரலாற்றை நூலாக்கி வெளியிட்டவர் லண்டன் 'புதினம் பத்திரிகையின் ஆசிரியர் திரு.இ.கே.ராஜகோபால். அதேபோல பல்வேறு உலக சாதனைகள் நிகழ்த்தி ஆங்கிலக் கால்வாயில் தனது உயிரை நீத்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்களின் வரலாற்றினையும் திரு.ராஜகோபால் அவர்கள் நூலாக பதிவு செய்திருக்கின்றார்.

இலங்கையில் தமிழர்கள் என்ற ஒரு இனம் வாழ்கின்றார்களா என்பதே தெரியாமல் பல நாட்டவர்கள் இருந்த காலத்தில் ஐ.நா. சபையில் அத்துமீறிப் பிரவேசித்து ஒரு நிமிடம் தமிழில் உரையாற்றி முழு உலகத்தையும் இலங்கையின் பக்கம் பார்க்க வைத்தவர் லண்டனில் வாழ்ந்த திரு.கிருஸ்ணா வைகுந்தவாசன் அவர்கள். அந்த விபரங்கள் அடங்கிய வரலாற்றை 'ஐ.நாவில் தமிழன் என் முதல் முழக்கம் என்னும் நூலை அவரே எழுதி நூலாக்கியிருக்கின்றார்.

தமிழாராட்சி மாநாட்டிற்கு வித்திட்ட தமிழறிஞர் தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணிகளின் விபரங்களை தொகுப்பாக்கி நூலாக வெளியிட்டவர் லண்டனில் வாழ்ந்துவரும் திரு.பற்றிமாகரன் அவர்கள். இவை தவிர பொதுவாக இலங்கைத் தமிழர்களின் வராலாறுகள் அடங்கிய நூல்கள் பல புலத்தில் வந்திருக்கின்றன. அவற்றில் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்கள் எழுதிய ஈழத்தமிழர் வரலாறு என்னும் நூல் உட்பட இன்னும் சில நூல்களை எழுதி வரலாற்றுப் பதிவுகளைச் செய்திருக்கின்றார். இதுபோல அமரர் க.ந.வேலன் அவர்களின் 'ஈழத் தமிழர் யார்? ஐ.தி.சம்பந்தனின் 'தமிழ் அகதிகளின் சோக வரலாறு கி.ஞானசூரியர் எழுதிய 'தமிழா விழித்தெழு (இவர்கள் மூவரும் லண்டனைச் சேர்ந்தவர்கள்) வ.ஐ.ச.ஜெயபாலன் எழுதிய 'தேசிய இனப் பிரச்சனையும் முஸ்லீம் மக்களும் திரு.சுப்பு (ஜேர்மன்) அவர்கள் எழுதிய 'தமிழ்த் தேசிய இனப் போராட்டம் எங்கே போகின்றது? போன்ற நூல்களுடன் இலங்கையில் 1983ம் ஆண்டு இடம்பெற்ற மிகப்பெரிய இனக்கலவரத்தை முழுமைமையாக ஆவணப்படுத்தி ஐ.தி.சம்பந்தன் அவர்கள் 'கறுப்பு யூலை குற்றச்சாட்டு என்னும் நூலை வரலாற்றுப் பதிவாக்கியிருக்கின்றார். அதே நேரம் 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் இலங்கை இராணுவம் பெரும் முற்றுகைப்போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவேளையில் புலம் பெயர் நாடுகள் அனைத்திலும் ஐம்பத்தொரு நாட்கள் இரவு பகலாக தொடர்ந்து ஆர்ப்பாட்டப் போராட்டங்கள் நடைபெற்றது அனைவரும் அறிந்ததே. அந்தப் போராட்டங்களின் பதிவை பிரான்ஸில் வாழும் எழுத்தாளர் மா.கி.கிறிஸ்ரியன் மட்டும் 'பிரான்ஸ் தமிழர் போராட்டம் என்னும் தலைப்பில் நூலாக்கியிருக்கின்றார்.

## விடுதலை வீரர்களின் வரலாறுகள்

மேலும் தாயகத்தில் நடந்த விடுதலைப்போராட்ட வீரர்களின் வரலாறுகள் அடங்கிய சில நூல்களும் புலத்தில் வெளியாகியிருக்கின்றன. அவைகளின் விபரங்கள் லண்டனில் இருந்து 'கிட்டு எங்கள் வரலாற்று நாயகன் நோர்வேயில் இருந்து "தளபதி கிட்டு ஒரு களத்தின் பதிவு 'தாய்நிலத்து வீரர் மாவீரர் நினைவுகள் 'சூரியக்கதிர் வென்றது யார்? ஆகிய நூல்களுடன் பிரான்ஸில் இருந்து 'மேஜர் கிண்ணி கஸ்ற்றோ மற்றும் 'போர் உலா உட்பட இன்னும் சில நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

## புலத்தின் நமது வாழ்வின் வரலாறு

புலத்தில் தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டின் தங்களது வாழ்வின் வரலாற்றுப்பதிவாக ஜேர்மனில் இருந்து மட்டும் இரண்டு நூல்கள் வெளிவந்திருக்கின்றன! ஒன்று திருமதி விக்கினா பாக்கியநாதன் எழுதிய 'சிந்திக்கத்தூண்டிய ஜேர்மன் கலாச்சாரம் இரண்டாவது திரு.அருந்தவராஜா எழுதிய 'ஜேர்மனில் தமிழர்கள் வரலாறு ஆகியவையே.

## ஆய்வு நூல்கள்

புலத்தில் வெளியான ஆய்வு நூல்களாக திரு.முருகர் குணசிங்ம் எழுதிய 'இலங்கை தமிழ் தேசியவாதம் அதன் ஆரம்பத்தோற்றம் பற்றியதோர் ஆய்வு என்ற நூலுடன் கனடாவில் வாழ்கின்ற கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் எழுதிய 'ஈழத்து இடப்பெயர் ஆய்வு ஆகிய நூல்களுடன் பிரான்ஸில் வாழ்கின்ற இலங்கையர்கோன் க.அரியரத்தினம் அவர்கள் இராவணேஸ்வரனைப்பற்றி புதியகோணத்தில் ஆய்வு செய்து எழுதிய 'மாமன்னன் இலங்கேஸ்வரன் ஆகிய நூல்களே குறிப்பிடத்தக்கவைகளாகும்.

## மருத்துவ நூல்கள்

மருத்துவ நூல்களாக லண்டனில் வாழ்ந்த அமரர் டாக்டர் இந்திரகுமார் அவர்கள் எழுதிய 'வயாகராவும் ஏனைய சிகிச்சை முறைகளும் என்ற நூல். கனடாவில் வாழ்ந்த அமரர் அ.பொ.செல்லையா எழுதிய எயிட்சில் இருந்து பாதுகாத்துக்கொள்வது எப்படி ஆகிய நூல்களுடன் ஆயுள்வேத வைத்தியர் வி.ரி.இளங்கோவன் எழுதிய 'நோய் தீர்க்கும் மூலிகைகள். 'ஆரோக்கிய வாழ்விற்கு சில ஆலோசனைகள் ஆகிய நூல்கள் மட்டுமே நம்மவர்களின் மருத்துவ நூல்களாக வெளிவந்திருக்கின்றன.

ஆவணப் பதிவுகள்

ஆவணப் பதிவுகளாக முல்லை அமுதன் அவர்களின் தொகுப்பில் அமரத்துவம் அடைந்த எமது ஈழத்துப் படைப்பாளிகள் பற்றிய தொகுப்பாக 'இலக்கியப் பூக்கள் என்னும் நூலும் வண்ணை தெய்வத்தின் தொகுப்பில் வெளியான 'யாழ்ப்பாணத்து மண் வாசனை 'காலங்கள் வாழ்த்தும் 300 ஈழத்துக் கலைஞர்கள் ஆகிய நூல்களுடன் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களால் வெளியிடப்பட்டுவரும் 'நூல் தேட்டம் (இதுவரை ஐந்து பாகங்கள்) ஆகிய நூல்களுடன் திரு.வேலணையூர் பொன்னண்ணா அவர்களின் தொகுப்பில் தான் பிறந்த மண்ணான வேலணை பற்றிய முழு விபரங்களும் அடங்கிய அருளமுதம். ஆகிய நூல்கள் மட்டுமே குறிப்பிடப்படுபவைகளாகும்.

மேலும்..

இவைகள் தவிர பிரான்ஸில் அண்ணாமலைப் பல்கலைக்கழக உரிமையாளர் திரு.சச்சிதானந்தன் ஆசிரியர் பல பாட நூல்களையும், பிரெஞ்சு - தமிழ் - ஆங்கில அகராதி களையும் எழுதி வெளியிட்டிருக்கின்றார். விஞ்ஞான நூல்களாக லண்டனில் வாழ்ந்த அமரர் 'டாக்டர் இந்திரகுமார் அவர்கள் எழுதிய 'விண்வெளியில் வீரகாவியம் மற்றும் 'மண்ணில் இருந்து விண்ணுக்கு ஆகிய இரண்டு நூல்களை வெளியிட்டிருக்கின்றார். இதில் 'விண்வெளியில் வீரகாவியம் தமிழக அரசின் சிறந்த விஞ்ஞான நூலுக்கான விருதினையும் பெற்றிருக்கின்றது. இந்த இரண்டு நூல்களுமே புலத்தில் இருந்து வெளியான விஞ்ஞான நூல்களாகும்.

இந்த வரிசையில் புலத்தில் பல வானொலிகள், தொலைக்காட்சிகள் இருக்கின்றன. இதில் அறிவிப்பாளர்களாக, நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாக, மற்றும் படைப்பாளிகளாக ஏராளமானவர்கள் செயல்ப்பட்டு வந்தாலும் இவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே இவைகளுக்கான பயிற்சி பெற்றவர்களாவாஉகள். இவர்களின் பயிற்சிக்கு உதவுமுகமாக லண்டனில் வாழ்கின்ற திரு. விமல் சொக்கநாதன் அவர்கள் அறிவிப்புத்துறையின் தனது அனுபவங்களைத் தொகுத்து 'வானொலிக் கலைஎன்னும் நூலை வெளியிட்டிருக்கின்றார்.

இனிய வாசகர்களே 'புலத்தில் படைப்பாளிகள் என்ற இந்தத் தலைப்பிலான சமுத்திரத்தில் நான் ஒரு கரையில் மட்டும் இறங்கிப் பார்த்திருக்கின்றேன். இதில் உள்ள தகவல்கள் எல்லாம் என்னுடைய சேகரிப்பில் இருந்த புத்தகங்கள், மற்றும் பத்திரிகைத் தகவல்களுடன் சில நூலக சேகரிப்பு நண்பர்களிடம் இருந்து திரட்டப்பட்ட தகவல்களும் ஆகிய-வனவே. ஒரு ஆவணம் தயாரிக்கப்படும்போது சில தவறுகள் ஏற்படலாம்! ஆனால் அது ஏற்புடையதல்ல. இக் கட்டுரையில் இன்னமும் சிலருடைய பெயர்கள், சில நூல்கள் பற்றிய விபரங்கள் தவறவிடப்பட்டிருந்தால் அதற்காக சம்மந்தப்பட்டவர்கள் மன்னிப்பார்களாக. வருங்காலத்தில் இக் கட்டுரையை முழுமைப்படுத்த முயற்சிப்பேன்.

வண்ணை தெய்வம்

www.ethiri.com

ethiri
எதிரி?
.com

ethiri
எதிரி?

15வது தமிழர் விளையாட்டு விழா 2012


INDIAN STYLE
இந்தியன் ஸ்டைல்
பட்டுப் புடவைகள், பட்டு வேட்டிகள் சுடிதார், சல்வார் கமிஸ்,
குர்தா, ரவுசர்கள், சேட்டுக்கள், சுட்டுக்கள்,
குழந்தைகளுக்கான ஆடைகள், தமிழ், கிந்தி DVD, CD க்கள்
அனைத்தையும் குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்
19 avenue P. V. Couturier
93120 LA COURNEUVE
Tél: 09 53 41 50 75
M° / T1: La Courneuve

# Grande Rencontre Sporitve 2011 Billets
## தமிழர் விளையாட்டு விழா வரவு செலவு - 2011

| Date | Details - விபரங்கள் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 03/07/2011 | நுழைவுச் சிட்டை 4576 | 13 728,00 € | |
| 03/07/2011 | வாகனத் தரிப்பிடம் 580 | 1 160,00 € | |
| | | | |
| 03/07/2011 | மைதான விளையாட்டுக்கள் மூலம் | 6 421,35 € | |
| 24/04/2011 | உதைபந்தாட்டம் | 520,00 € | |
| | துடுப்பெடுத்தாட்டம் | 635,00 € | |
| | | | |
| | விளம்பர ஆதரவு | 22 591,84 € | |
| | | | |
| | உணவகம் | 28 686,14 € | |
| | | | |
| | மின்சாரம், மலசலகூடம், வரியர், குப்பைக்கொள்கலன் | | 12 000,00 € |
| | துண்டுப்பிரசுரம், மலர், நுளைவுச்சீட்டு | | 6 009,98 € |
| | தொலைக்காட்சி விளம்பரம் | | 753,48 € |
| | விளம்பரப் பெனர்கள் | | 750,00 € |
| | கொட்டகைகள் | | 12 000,00 € |
| | மக்கள் போக்குவரத்து பேருந்து | | 2 255,00 € |
| | முதலுதவிச்சிகிச்சை நிறுவனம் | | 884,79 € |
| | தனியார் பாதுகாப்பு நிறுவனம் | | 4 000,00 € |
| | மலசலகூடம் சுத்தப்பணியாளர் | | 400,00 € |
| | பாரஊர்திகள் 2 | | 780,38 € |
| | குளிரூட்டிகொண்ட பாரஊர்திகள் 2 | | 1 125,07 € |
| | வெற்றிக்கிண்ணங்கள், மெடல்கள் | | 4 195,62 € |
| | விளையாட்டுப்பொருட்கள், இதர செலவுகள் | | 2 140,94 € |
| | சிறுவர் மாழிகை பலூன் | | 1 580,00 € |
| | | | |
| | நல்வாய்ப்பு ஸ்கூட்டர் | | 1 125,00 € |
| | உணவகப் பொருட்கள் | | 13 963,03 € |
| | சிற்றுண்டிகள் தயாரிப்பு கூலி | | 2 100,00 € |
| | நிர்வாகச் செலவுகள், டீசல்,முத்திரை | | 2 073,40 € |
| | வாடகைமெசின்,பொன்னாடை மற்றும் | | 600,00 € |
| | | | |
| TOTAL | | 73 742,33 € | 68 736,69 € |

இருப்பு: 5005.64


தரணியெங்கும் தமிழ் ஒளி பரவிட
GTV
GTV Synergy media -France
13 rue de ballon
93160 noisy le grand
Service Commercial :
165 boulevard de la villette
75010 Paris
Contact : 09 50 67 04 62
GTV synergy Media - UK
Donation contact : 0044 203 468 7523
Technical Information(Satellite Info)
Hotbird (13 degree East) Frequency: 10723, Horizontal, SR 29900 and FEC 3/4
வெளிச்சம்
செய்திகள்
NEWS
தரிசனம்
லட்சுமி
நாடகம் அல்ல நடித்துச் செல்ல கூத்துமல்ல ஆடிச் செல்ல கண்கட்டு வித்தையுமல்ல காணாததைக் கண்டதாயும் காட்டாததைக் காட்டியதாகவும் சொல்ல நிழலுமல்ல உருவம் தெரியாமல் அசைய நிஜங்கள், ஆம் நாங்கள் நிஜங்கள் உண்மையை உண்மையாத் தரிசிக்க உள்ளதை உள்ளதாய் சொல்ல வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ்ந்து பார்க்கும், பார்க்கத் துடிக்கும் நிஜங்கள், அணைக்கத் துடிக்கும் உறவுகளின் அன்பின் தரிசனமாய் தோன்றிடும் பிம்பம், துவண்டிடும் சொந்தங்களுக்கு முகம் வருடி முத்தமிடும் தென்றல் சோர்ந்தவரை தோள் தட்டித்தூக்கி நிமிர்த்தும் தோழன்.
தரணியெங்கும் தமிழ் ஒளி பரவிட
GTV
15வது தமிழர் விளையாட்டு விழா 2012

# I. Présentation.

L'ORT FRANCE, pour atteindre ses objectifs humanitaires, dispose des moyens juridiques, humains et financiers.

## 1. Moyens juridiques.

L'Organisation de Réhabilitation Tamoule dont le sigle s'écrit ORT-France a été fondée en 1993 par déclaration auprès de la Préfecture de police de Paris.

Il s'agit d'une organisation non gouvernementale de droit international, ayant pour mission de venir en aide aux personnes victimes de guerre ou de catastrophes naturelles.

Toute personne peut y adhérer dès lors qu'elle partage les valeurs de fraternité et de dévouement.

## 2. Moyens humains.

Pour atteindre ses objectifs humanitaires, très variés, l'ORT-France dispose d'une importante coalition humaine. Elle bénéficie des services de 14 000 bénévoles.

## 3. Moyens financiers.

La force humaine ne supplée évidemment pas à l'exigence pécuniaire nécessaire pour réaliser les divers projets de l'ONG ainsi que pour répondre aux besoins, souvent impérieux et multiples, de la population tamoule victime de la guerre civile. L'ONG fait ainsi appel aux subventions des mairies, des autorités publiques, aux sponsors des entreprises, aux dons des particuliers.

Vous-même qui avez ce tract entre les mains, vous pouvez aussi participer à l'action de notre ONG par une contribution financière ou en prenant part à notre activité.

# II. Les activités.

Les activités humanitaires de l'ORT-France répondent aux trois principales priorités que l'organisme s'est donné :

- la construction des logements au Sri Lanka,
- la construction des écoles et des orphelinats
- la formation professionnelle des jeunes.

## 1. Construction des logements.

La guerre civile qui pérennise au Ceylan a extrêmement frappé la population dans ses biens : des maisons détruites, des terres endommagées, des véhicules réquisitionnés. Le tsunami, de son côté, a apporté son lot de malheurs. L'ORT-France s'efforce donc d'offrir aux victimes un cadre de vie décent, notamment en construisant des maisons à vocation de logement.

## 2. Construction des écoles et des orphelinats.

Les combats ont détruit de nombreuses écoles, occasionnant et favorisant partout l'illettrisme et faisant un grand nombre d'enfants orphelins et sans famille.
Pour les enfants qui n'ont pas d'école, l'ORT-France bâtit des écoles et des collèges, y pourvoit en enseignants lesquels sont rémunérés, en livres et autres matériels scolaires. Soit en tout 290 écoles construites !

Pour les enfants qui ont perdu leurs parents dans les bombardements, l'ORT-France édifie des orphelinats où ces enfants reçoivent logement, éducation, encadrement et formation à un métier. Soit en tout 16 orphelinats inaugurés, dont 2 sont entièrement financés par ORT-France.

Ces constructions participent de nos missions les plus réussies et constituent naturellement une grande fierté et un immense encouragement à poursuivre.

## 3. Formation professionnelle, soins et assistance

Pour les juniors et les seniors, désœuvrés à cause de la guerre, se trouvent fréquemment sans qualification. L'ORT-France développe des programmes de formation professionnelle en :

- informatique,
- radio,
- mécanique,
- menuiserie,
- électricité,
- maçonnerie.

Pour ceux qui veulent entreprendre, ouvrir un commerce, commencer une agriculture, l'ONG fait des prêts d'argent sans intérêt.

Enfin pour tous les gens dans le besoin, elle apporte des soins médicaux et des aides alimentaires.

Statistiquement, cela fait 35 centres de formations professionnelles, 44 dispensaires maternités, 10 laboratoires de confection des prothèses.

Tous réalisés et entretenus par les seuls soins de l'ORT France.

## 4. Nos activités en France

Les activités en France de l'ONG s'articulent autour deux axes :

- sensibiliser des Français à la souffrance des Tamouls et leur proposer notre structure comme terrain d'action et de déploiement de leur volonté d'opérer et de faire prospérer leurs projets d'aide et de collaboration,

- faire découvrir nos arts et traditions ainsi que favoriser la formation des liens d'amitiés entre Français et Tamouls.

A ces fins, l'ORT-France réalise des événements, dénommés "soirées tamoules", dans de différentes communes, où interviennent l'expression de la culture tamoule sous ses différentes formes, notamment la dégustation de la gastronomie etc....

L'ORT-France organise également chaque année, depuis 1998, un grand évènement sportif (une journée festive des tamouls), appelée la "Grande Rencontre Sportive Tamoule" qui tend à présenter et à faire découvrir les jeux traditionnels, la musique et les danses culturelles de Sri Lanka, créant ainsi une occasion de passer une journée agréable entre familles et amis.

L'évènement "SALANGAI" est organisé tous les ans depuis 2000. Elle réunit plus de 300 élèves qui pratiquent le Baratanatyam autour d'un concours centré sur l'expression artistique.


எவ்ரி மாநகரில்
புதியதோர் உதயம்!
ET marché
votre marché de proximité!
மலிவு!!! தரம்!!!
நுகர்வோரின் அன்றாட தேவைகளுக்கான பலபொருள் அங்காடி!
Ouvert 7/7 j
உடன் மரக்கறி வகைகள்!
ஒரு முறை விஜயம் செய்தால்
பல முறை நாடத் தூண்டும்!!!
வாடிக்கையாளர்களின் மனங்கோணா
விரைவான உபசரிப்பு!
Livraison gratuite!
tous les samedis, dès 75€ d'achats (zone limitée à 2 km)
ET Marché
6 Rue Montespan, 91000 EVRY
538 063 462 R.C.S EVRY
Tel.: 09 50 40 18 23
e-mail : etmarche@yahoo.com
Exotique d'Evry
01 69 36 34 23
01 69 36 34 23
Produits Asiatiques, Africaines, Antillaises, Orientaux
Alimentation Générale
Ouvert 7/7j
Promotion
Tilapia moyen carton de 5 kg
11€90
Promotion
Gingembre 1 kg
2€50
Promotion
Cuisse de poulet Carton de 10 kg
16€50
Epicerie, Fruits et Légumes,
Boisson, Surgelés, Cosmétique....
LIVRAISON GRATUITE
tous les jours, dès 75 euros d'achats,
zone limité 3 km
Exotique d'Evry
6, rue Montespan, 91000 Evry
Tél.: 01.69.36.34.23 / Fax: 01.69.36.34.23
E-mail : exotiqueevry@yahoo.fr

www.padippakam.com



# 15வது தமிழர் விளையாட்டு விழா 2012

## சிறப்பு மலர் 2012

### மலர்க்குழு

சுந்தரவேல்
கோணேஸ்வரன்
வேலழகன்
தர்மதேவன்

### மலர் வடிவமைப்பு

சுஜீவன்
நிதிராஜ்
பேபி பலுான்

### தட்டச்சு

தர்க்ஷன்
பபிதா
பிறேமரமேஸ்

### அச்சுப்பதிப்பு

RAS IMPRIMERIE
Villiers le Bel



படிப்பகம்

RISHVIYASTAJ
RESTAURANT TRAITEUR

திருமணம்
நிச்சயதார்த்தம்
குடும்ப ஒன்றுகூடல்
கொண்டாட்டங்கள்
அனைத்திற்கும்



rishviyastaj@live.fr

கொண்டாட்ட மண்டபங்கள்
சிற்றுண்டிகள்
சுயபரிமாற்றச் சேவைகள்
மண்டப அலங்காரம்
சொகுசு வாகனம்
குதிரை வண்டி ஒழுங்குகள்
கேக்
நடனங்கள்
இன்னிசை நிகழ்வு ஒழுங்குகள்
புகைப்படம் மற்றும் வீடியோ
அனைத்திற்கும்



உங்கள் விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களுக்கான
300 இருக்கைகள் கொண்ட
உணவுவிடுதியுடன் (Restaurant) கூடிய மண்டபம்.

எம்மீது நீங்கள் கொண்ட நம்பிக்கையின் மூலம் அடைந்த உங்கள் நிகழ்வுகளின் பூர்த்திகள் தனித்துவமானதாகவும் ஒரு அதிசயம் போலவும் உங்கள் மனதில் நீங்கா இடம்பிடிக்கும்.

**RISHVIYASTAJ கனவுகள் நனவாகும் இடம்**

**RESTAURANT RISHVIYASTAJ**

**Impasse Bloch Praeger**

**185-187 AV Paul vaillant Couturier - 93120 La Courneuve**

**Tel: 09 82 53 89 40**

**Mr.Philippe BERDINATS : 06 98 76 16 82**